கல்கி



KALKI 4.12.1966 35காசு





அவனுக்கு ஒவ்வொரு நாளும் இன்க்ரிமின்* கொடுங்கள்

தீவிரமான பசியைத் தூண்டவும், படிப்படியாக எடையை அதிகரிக்கவும்

இன்க்ரிமின்* செரி பழத்தின் மணம் நிறைந்தது. l-லைசின் என்ற இன்றியமையாத பொருள் அடங்கியது. இந்தப் பொருள் உடல் நலத்திற்கு உகந்த பசியைத் தூண்டி, உணவின் முழுப்பயனையும் சிறந்த முறையில் பெற உடலுக்கு உதவுகிறது. இன்க்ரிமின்* சாப்பிட்டு வந்தால் உங்கள் குழந்தை வயிறாரச் சாப்பிடுவான். அவனுடைய எடையும் படிப்படியாக அதிகரிக்கும். ஒவ்வொரு நாளும் அவனுக்கு இன்க்ரிமின்* கொடுங்கள்—அவன் மனமாரச் சாப்பிடுவதையும் வளர்ச்சியடைவதையும் கண்டு மகிழுங்கள்!



இன்க்ரிமின்* வளரும் குழந்தைகளுக்கெனவே உண்டாக்கப்பட்ட ஒரு லெடர்லி தயாரிப்பு

இன்க்ரிமின்*... வளர்ச்சிக்கு மிகவும் சிறந்தது

நாள் ஒன்றுக்கு:
இன்க்ரிமின்* ட்ராப்ஸ்: 10-20 துளிகள்
இன்க்ரிமின்* ஸிரப்: ஒரு தேக்கரண்டி

* ரிஜிஸ்டர்டு ட்ரேட் மார்க்

Lederle லெடர்லி டிவிஷன், ஸயனமிட் இந்தியா லிமிடெட் CYANAMID

CYCL-36 TAM

கல்கி பொருளடக்கம்

நினைவுத் திரையில்.... (தலையங்கம்)


சர்க்காரின் கட்டுப்பாடுகள் சட்டதிட்டங்கள் வரி விதிகங்கள் எல்லாம் ஏழை எளியவர்களையும் நடுத்தரமானவர்களையும்தான் அதிகமாகப் பாதித்தன. அவர்களைத்தான் முன்னுக்கு வரவொட்டாமல் அமுக்கி வைத்தன. பொதுஜனங்களுடைய நன்மைக்காக வென்று ஏற்பட்ட கண்ட்ரோல் முறை லைசென்ஸ் முறை ஆகியவையெல்லாம் சில பணக்கார முதலாளிகளும் வியாபாரிகளும் கறுப்பு மார்க்கெட்டில் கொள்ளை லாபம் சம்பாதிப்பதற்கும் சில சர்க்கார் உத்தியோகஸ்தர்கள் லஞ்சம் வாங்கிப் பெரும் பணக்காரர்கள் ஆவதற்கும் ஏதுவாயின.

பண்டித ஜவாஹர்லால்ஜி மேற்படி நிலைமை பற்றிப் பிரஸ்தாபித்து அதற்கு ஒரு பரிகாரமும் சொல்லியிருக்கிறார்! "தொழிலிலும் வியாபாரத்திலும் லாபம் சம்பாதிக்கும் நோக்கம் போய்விட வேண்டும். பகிர்ந்து கொடுக்கும் நோக்கம் ஏற்பட வேண்டும்."

மிக அருமையான லட்சியம். ஆனால் மேற்படி லட்சியம் நிறைவேறுவதற்கு ஜவாஹர்லால்ஜி கூறுவது போல மனித சுபாவமே மாறியாக வேண்டும். வியாபாரத்தில் லாப நோக்கத்தை - ஆதிகாலந்தொட்டு உலகில் நிலைபெற்றிருக்கும் வர்த்தக தர்மத்தை மாற்றுவது என்பது இலேசான காரியமல்ல. கல்கி, டிஸம்பர் 22, 1946

பராபவ, கார்த்திகை 19 □ டிசம்பர் 4

"கல்கி"யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்களே; சம்பவங்களும் கற்பனையே.


"சிப்பந்திகளை மாற்றியும் கப்பல் கவிழ்வது போன்ற உணர்ச்சி போகவில்லையே!"
காங்கிரஸ்
1967
மக்கள் பொறுமை பாங்கு
"இன்னும் கடனா? முடியாது!"
காங்கிரஸ் ஆட்சி
PK

தமிழ்த்திருநாடு தன்னைப் பெற்ற
தாயென்று கும்மியடி பாப்பா — பாரதியார்

மலர் 26 □ இதழ் 18



தொழில் துறையின் அறைகூவல்

'இப்போதெல்லாம் அரசியல் சிக்கல் மிகுந்ததாக, மக்களைத் தாக்கும் அளவுக்கு வளர்ந்து விட்டது. அரசியல்வாதிகளிடமே அரசியலை விட்டு விட்டுத் தொழில் துறையினர் சும்மா இருக்கலாம் என்ற நிலை மாறி விட்டது. தொழில் துறையினர் அரசியலில் பிரவேசிக்கத் தயாராகவே இருத்தல் வேண்டும்'' என்று பொருள்படச் சமீபத்தில் திரு ராமஸ்வாமி முதலியார் அவர்கள் பேசியிருக்கிறார்கள்.

நம் நாட்டில் இப்போதுள்ள சூழ்நிலையில் சிறு தொழிலிலும், பெரு தொழிலிலும் ஈடுபட்டுத் தினசரி கஷ்டத்தை அனுபவித்துக் கொண்டிருக்கும் ஐந்நூறு பேருக்கு மேற்பட்ட தொழிலதிபர்கள் சென்னையில் கூடி நடத்திய மகாநாட்டில் இப்படி அவர் பேசியுள்ளார். தற்போது உள்ள ராஜ்ய சபையின் இடத்தில் நாட்டின் பல்வேறு தொழில் துறையினரும் அங்கம் வகிக்கும் ஓர் அவை அமைய வேண்டும் என ராஜாஜி நீண்ட நாட்களுக்கு முன்பே கூறியதுண்டு. அது நிறைவேறவில்லை. ஓரளவு அதே வழியில், தொழிற் பிரமுகர்கள் அரசியலில் பங்குபற்ற வேண்டும் என்று முதலியார் கூறியிருப்பதை வரவேற்கிறோம்.

திட்டக் கமிஷன் நமக்கு அவசியமில்லாத ஓர் ஆடம்பரம்; இதனால் நம் நாட்டுக்கு நன்மை ஏற்படவில்லை; மாறாகப் பலவிதங்களில் கஷ்டங்களே ஏற்பட்டு வருகின்றன; ஆகவே இதைக் கலைத்துவிடலாம் என்று அழுத்தம் திருத்தமாக ஆலோசனை சொல்லியிருக்கிறார் திரு ஏ. இராமஸ்வாமி முதலியார். சுதந்திரக் கட்சித் தலைவர் சொன்னால் எதிர்க்கட்சி சொல்லுவதைப் பொருட்படுத்த வேண்டாம் என்று காங்கிரஸ் அரசாங்கம் வாளா விருந்துவிடும். திரு இராமஸ்வாமி முதலியார் சுதந்திரக் கட்சி அங்கத்தினர்கூட இல்லை. ஆனால் தொழில் துறையில் பீஷ்மரைப் போன்ற அனுபவம் உள்ளவர். அவருடைய ஆலோசனைகளை அரசாங்கம் அடிக்கடி விரும்பிக் கேட்கிறது. பல முக்கியமான கமிட்டிகளுக்குத் தலைமை வகித்து நாட்டின் பொருளாதாரத்தை ஊக்க முயன்று வருகிறார். அப்படிப்பட்டவர் இவ்விதம் சொல்லவேண்டுமென்றால் நாட்டின் பொருளாதாரம் எந்த அளவுக்குச் சீர்கெட்டுச் சீவனற்றுக் கிடக்கிறது என்பது விளங்கும். மூலதனம் திரட்ட முடியவில்லை; கடன் கொடுக்க யாரும் முன்வர மறுக்கின்றனர்; கடன் கொடுக்கும் அரசாங்க ஸ்தாபனங்களிடம் கொடுக்கப் பணம் இல்லை; பண வீக்கத்தினாலும் விலை உயர்வாலும் மக்களிடம் சேமிப்பு என்பதே குதிரைக் கொம்பாகிவிட்டது; லைசென்சும், கட்டுப்பாடும் இன்னும் விட்டபாடில்லை; அரசாங்கத்தின் பிடிப்பு இறுகிக் கொண்டேதான் போகிறது;—இந்த ஆபத்துக்களையெல்லாம் சென்னை மகாநாட்டில் தொழில் துறையினர் எடுத்துக் காட்டியுள்ளனர்.

திட்டம் நிறைவேறியே தீரும் என்று பிடிவாதமாக இன்னமும் கூறிக்கொண்டிருக்கும் திரு அசோகமேதாவின் காதில் தொழில் வர்க்கத்தினரின் கூக்குரல் விழவில்லையென்றே தோன்றுகிறது.

காங்கிரஸ் கட்சிக்குக் குறிக்கோள் எல்லாம் அடுத்த தேர்தலில்தான். திட்டம் ஒன்றையே, சமுத்திரத்தில் முழுகுகின்றவன் சிறு துரும்பையும் கெட்டியாகப் பிடித்துக் கொள்வது போல, பிடித்துக் கொண்டு வோட்டைச் சேகரிக்கப் பார்க்கிறார்கள். ஆனால் மற்ற அம்சங்களில் எல்லாம் காங்கிரஸ் அரசாங்கத்தின் சாயம் வெளுத்து விட்டது போலத் திட்டக் கமிஷன் விஷயத்திலும் இப்போது வெளுத்து விட்டது. உளுத்துப்போன மரப் பலகையைத் தொட்டால் விழுந்துவிடும். காங்கிரஸ் திட்டம் அதே நிலையில்தான் இருக்கிறது. வாக்காளர்கள் கொஞ்சம் முனைந்தாலே போதும். காங்கிரஸ் கவிழ்ந்துவிடும். இதுதான் தொழில் அபிவிருத்திக் கருத்தரங்கு சொல்லாமல் சொல்லிய உண்மை; மக்களுக்கு விடுத்துள்ள அறைகூவல்.

அமரர் கல்கிக்கு அஞ்சலி!

இப்பத்திரிகையின் ஸ்தாபகரும் முதல் ஆசிரியருமான பேராசிரியர் கல்கி ரா. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் மறைந்து பன்னிரண்டு ஆண்டுகள் இம்மாதம் 5ந் தேதியுடன் முடிகிறது. இன்றும் தமிழ்கூறும் நல்லுலகமெங்கிலும் லட்சோப லட்சம் தமிழ் அன்பர்கள் அவர் எழுத்துத் திறமையின் பல்வேறு சாயல்களையும், செயல் திறமைக்கு எடுத்துக்காட்டாக விளங்கும் பல்வேறு ஸ்தாபனங்களையும் நினைவுகூர்ந்து மகிழ்வார்கள்; ஆனந்தபாஷ்பம் சொரிவார்கள். அவர் சிருஷ்டித்த சிவகாமியும், நரசிம்ம பல்லவனும், முத்தையனும், கல்யாணியும் குந்தவையும் வந்தியத்தேவனும் இன்னும் தமிழ் அன்பர்களின் மனத் திரையில் தோன்றித் தோன்றிக் குசலம் விசாரித்து விட்டு மறைகிறார்கள்.

அரசியல் துறையில் தமிழக மக்களின் சிந்தனையைத் தர்மத்துக்கும் பண்பாட்டுக்கும் ஒத்த வகையில் முன்னணிப் பாதையில் இட்டுச் செல்வதையே கடமையாகக் கொண்டிருந்தார் பேராசிரியர் கல்கி அவர்கள். புரட்சிகரமான சிந்தனையோட்டங்களைக் கண்டு முதலில் துணுக்குற்றவர்கள் எல்லாம் பின்னால், ''அவர் அன்றே சொன்னார்'' என்று ஆமோதித்துப் பாராட்டியதைப் பார்த்திருக்கிறோம்.

எதிலும் புதுமை—அரசியலில் ஆயினும் சரி, இலக்கியத்திலாயினும் சரி தர்மத்துக்கும் தமிழ்ப் பண்பாட்டுக்கும் ஒத்த வகையில் புதுமையை இயற்றித் தமிழ் மக்களுக்குத் தொண்டாற்ற வேண்டும் என்று கடமை வகுத்துக் கொண்டவர் நமது பேராசிரியர் அவர்கள். புதுமையான முயற்சிகள் முதலில் எதிர்ப்புக் கண்ட போதும் துணிந்து நெஞ்சந் தளராமல் நிற்க வேண்டும் என்ற படிப்பினையையும் அளித்தார்.

அதைப் பின்பற்றி, அவர் நடந்த அடிச்சுவட்டையொற்றி இன்றும் நாம் நடந்து வருகிறோம் என்பதை அறிந்து தமிழ்கூறும் நல்லுலகம் வாழ்த்துகிறது! இப்படி வழி வகுத்துக் கொடுத்த அமரர் கல்கிக்கு நமது வணக்கங்கள்!

என்ன சேதி?

- ☐ புதிய ஷெரீப்
- ☐ சபாஷ் மேத்தா!
- ☐ பிரதமரின் நல்ல பதில்
- ☐ ஸ்ரீ புரி சங்கராச்சாரியார்
- ☐ கடன் வாங்கியும் பட்டினி

திரு பி. மருதைப் பிள்ளை அவர்கள் சென்னையின் ஷெரீபாக நியமனம் பெற்றிருப்பதில் மகிழ்ச்சியடைகிறோம். திரு மருதைப் பிள்ளை இளம் வயதினராயினும் தாம் செயல் திறமை மிக்கவர், தொழில் வளம் பெருக்குவதில் ஆர்வம் மிக்கவர் என்பதைக் காட்டி விட்டார். இலங்கையில் பிறந்த பிள்ளை அவர்கள், சென்னையில் செஞ்சுரி பிளவர் மில் என்னும் கோதுமை மாவு தயாரிக்கும் மில் தொடங்கினார். பின்னர் பெண்ணாடத்தில் அருணா சுகர்ஸ் என்ற சர்க்கரை மில்லைத் தொடங்கி வெற்றிகரமாக நடத்தி வருகிறார்.



திரு பி. மருதைப்பிள்ளை

கோதுமை மாவும் சர்க்கரையும் சேர்த்து உயர்தர பிஸ்கட் தயாரிக்கும் ஆலையை அமெரிக்கக் கூட்டுறவுடன் தொடங்கத் திட்டமிட்டு வருகிறார்.

உலகம் முழுவதும் சுற்றுப் பிரயாணம் செய்து தொழில் வகை அநுபவங்களை நேரிடையாகப் பெற்றிருக்கிறார் திரு பிள்ளை. ஷெரீபாக அவர் பணி சிறப்பதாக!

சமீபத்தில் பம்பாயில் 650 யாத்திரிகர்கள் பிரயாணம் செய்ய வழி தெரியாமல் தவித்த போது பம்பாய் நகர சுதந்திரக் கட்சிப் பொதுச் செயலாளர் மது மேத்தா அவர்கள் சமயத்தில் உதவி செய்து அவர்கள் பிரயாணத்துக்கு வழி செய்திருக்கிறார்.

மருண்டவன் கண்ணுக்கு இருண்டதெல்லாம் பேய் என்ற கதையாக க்ஷேத்ராடனம் செய்ய விசேஷ ரயில் அமர்த்திக் கொண்டு புறப்பட்ட 650 யாத்திரிகர்கள் ''பசுவதை தடுக்கும்'' கிளர்ச்சிக்காரர்களாக இருக்கக்கூடும் என்று சந்தேகித்து விசேஷ ரயிலை ரத்து செய்து அவர்களைப் பம்பாயில் பிளாட்பாரத்தில் தவிக்கவிட்டிருக்கின்றனர் ரயில்வே நிர்வாகத்தினர். எங்கெங்கோ இருந்து வந்த இந்த யாத்திரிகர்கள் ஏற்கனவே யாத்திரை ஸ்பெஷல் பிரயாணத்துக்காக வேண்டி முன்கூட்டியே கட்டணம் செலுத்தியவர்கள். பம்பாயிலிருந்து திரும்பித் தத்தம் ஊர்களுக்குப்போகவேண்டுமென்றாலும் அவர்களில் பலரிடத்தில் பண

சதி இல்லையாம். இந்நிலையில் திரு மது மேத்தா அவர்கள் தலையிட்டு, அவர்கள் ஒவ்வொருவரிடமும் பசுவதை தடுப்பு இயக்கத்தில் சம்பந்தப்படாதவர் என்று உறுதிமொழி வாங்கிக்கொண்டு, அவர்களைப் பிரயாணம் செய்ய அனுமதிப்பதில் ஆபத்து ஒன்றுமில்லை என்று யூனியன் போலீஸ் மந்திரிக்கு உறுதிமொழியாகத் தந்தி கொடுத்து அவர்கள் மேற்கொண்டு பிரயாணம் செய்ய உதவியிருக்கிறார்.

திரு மது மேத்தா செய்த உதவிக்குப் பாரத நாட்டு ஆஸ்திக உலகமே மிகுந்த நன்றி தெரிவிக்கிறது.

ஸ்ரீ சிருங்கேரி சங்கராசாரிய ஸ்வாமிகளைப் பிரதமர் தரிசிக்கச் சென்றது குறித்துத் டில்லி மக்கள் சபையில் கேள்வி எழுப்பப் பட்டபோது ஸ்ரீமதி இந்திராகாந்தி தக்க முறையில் பதிலளித்திருக்கிறார்.

மதச் சார்பற்ற அரசாங்கம் என்றால் நாஸ்திக அரசாங்கம் என்பதல்ல பொருள். எல்லா மதக் கோட்பாடுகளையும், உணர்ச்சிகளையும், அவற்றுக்குப் பிரதிநிதிகளான மதத் தலைவர்களையும் மதிக்கும் அரசாங்கம் என்பதே பொருள். அவ்வகையில் பாரதப் பிரதமர் எந்த மதத் தலைவர் வந்தாலும் மதிக்க வேண்டியவர்தான்.

சமீபத்தில் போப்பாண்டவர் பம்பாய்க்கு விஜயம் செய்த போது, பாரத நாட்டுக் கிறிஸ்தவ சமுதாயத்தினர் மட்டும் அவரை வரவேற்கவில்லை. பாரத தேசமே ஒருமுகமாகத் திரண்டு எழுந்து வரவேற்றது. இது தான் பாரதப் பண்பு.

ஸ்ரீ பூரி சங்கராசாரிய ஸ்வாமிகளை அரசாங்கம் கைது செய்து வைத்துள்ளது. ஒரு மடத்தின் தலைவர், அரசாங்கத்துக்குச் சங்கடமான நிலையை உண்டாக்குவதாக அரசாங்கம் நினைக்கும் பட்சத்தில் அவர் முடிவை மாற்றிக் கொள்ளும்படி வற்புறுத்திக் கேட்டுக் கொள்வதுதான் முறை. அப்போதும் அவர் கைவிடவில்லை எனில், ஒருகால் வேறு வழிகளைக் கையாள நியாய மிருந்திருக்கலாம். இதற்குத் தொடர்பு இருக்கிறதோ, இல்லையோ இன்னொரு விஷயம் காதில் விழுகிறது. பூரி சங்கராசாரியாரை ராஜஸ்தான் காங்கிரஸ் தனது அபேட்சகராக நிற்கும்படி கேட்டுக் கொண்டதாம். அவர் மறுத்து விட்டாராம்.

அந்நியச் செலாவணிக்காக நாம் படும் பாடு தாளம் படாது, தறி படாது! அப்படியிருக்கிற நிலைமையில் மத்திய அரசாங்கம் எவ்வளவு மெத்தனமாக நடந்து கொள்கிறது என்பதைப் பெட்ரோலிய அமைச்சர் திரு அளகேசனே சொல்லிக் கொள்கிறார்.

இத்தாலிய சர்க்காருக்குச் சொந்தமான எண்ணெய் நிறுவனம் ஒன்று சில ஆண்டுகளுக்கு முன்பு 75 கோடி ரூபாய் கடன் கொடுத்ததாம். அதில் கிட்டத்தட்ட 50 கோடி பயன்படுத்தப் படாமலே போய் விட்டதாம். கால அளவை இத்தாலிய சர்க்கார் நீடிக்கும் என்று அரசாங்கம் எதிர்பார்த்ததாம். ஆனால் இத்தாலிய சர்க்கார் கால வரம்பை நீடிக்கவில்லை என்பது ஓராண்டு கழித்தே தெரிய வந்திருக்கிறது! நிர்வாக ஊழல் எவ்வளவு தூரத்துக்குப் போய்விட்டது என்பதற்கு இது ஒரு நல்ல எடுத்துக்காட்டு.

★

ஆளும் கட்சியின் பொருளாதாரக் கொள்கைகளும், நிதிக் கொள்கைகளும் பயங்கரமாகத் தோல்வியடைந்து, வேறு அரசாங்கம் ஏற்பட்டால்தான் தேசத்தைக் காக்க முடியும் என்கிற நிலை தோன்றியுள்ள தற்சமயத்தில், பசுவதைத் தடுப்புச் சட்டத்தை அடிப்படையாக வைத்து 1967 தேர்தலை நடத்தினால் அது சர்வ தேசங்களுக்கும் நகைப்பூட்டும் தமாஷ் நாடகமாகவே இருக்கும். இப்போதைக்குப் பசுப் பிரச்னையைத் தள்ளி வைப்போம். கடந்த பல்லாண்டுகளாக இந்தப் பிரச்னையை நாம் எடுத்துக் கொள்ளவில்லை. தேர்தல்கள் முடிகிற வரையும் இவ்விஷயத்தை நாம் எடுத்துக் கொள்ளாமல் இருப்பதால் எந்தப் பெரிய தீங்கும் நேர்ந்து விடாது.

★

காங்கிரஸ் கட்சியின் கொள்கைகள் நடைமுறையில் தோல்வியடைந்து விட்டன. தோல்வியடைந்த கொள்கைக்குத் தேர்தலிலும் தோல்வி தர வேண்டியதே இன்று முக்கியமான விஷயம். காங்கிரஸ் தலைமையில் ஏற்படும் மாறுபாடுகள் இந்த முக்கிய



மான விஷயத்துக்குப் பனிப் படலமிட்டு மறைத்துவிட அநுமதிக்கலாகாது. யாருடைய ஆதிக்கம் இன்று காங்கிரஸில் இருக்கிறது என்பதல்ல பிரச்னை. ஏழைகளை ஏமாற்றி, வேண்டியவர்களுக்கே ஏகபோக்கிய சலுகை தந்து பணக்காரராக்கும் கொள்கையை முறியடிப்பதொன்றே பிரச்னை. ராமனோ, கிருஷ்ணனோ, கோவிந்தனோ யாரிடம் காங்கிரஸ் கட்சியின் தலைமைப் பொறுப்புக்கள் மாறினாலும் கொள்கை மாறாது. ஆகவே சலுகை பெறும் நபர்கள் யார் என்பதில் ஏதாவது மாறுதல் ஏற்படலாமே ஒழிய, பொது மக்களைப் பொறுத்தமட்டில் மாறுதல் எதுவும் இல்லை.

★

'சுயராஜ்யம் நமது பிறப்புரிமை; அதை அடைந்தே தீருவோம்' என்றார் லோகமான்ய திலகர். இன்றைய லோகமான்யர்களோ வெனில், 'அந்நிய உதவி பெறுவது எங்கள் பிறப்புரிமை. அதைப் பெற்றே தீருவோம்' என்கின்றனர். பாத்தியதை உள்ளவர்கள் போல, சக்தியுள்ள அந்நிய அரசுகள் கடன் வழங்கியே ஆக வேண்டும் என்று வற்புறுத்துகிறார்கள். தேசத்தை அடகு வைக்கிறார்கள். நம் குழந்தைகளைத் திவாலா நிலையின் விளிம்புக்குக் கொண்டு போய் விட்டார்கள் — லோகமான்யர் நம்மைச் சுதந்திர நிலைக்கு கொண்டு போனது போலவே.

★

இப்போது 165 ஆக உள்ள விலைவாசி குறியீட்டெண் நான்காம் திட்டம் அமுலானு 220 ஆக உயரும் என்பது இந்திய வர்த்தக தொழில் சபையின் ஆராய்ச்சி. ஓடும் வெள்ளத்துக்குள் படகு கட்டுவது போல் தத்தளிப்பு நிலையில் நான்காம் திட்டத்தை உருவாக்குகிறார்கள்.

★

மற்றவர்கள் நம்மைப் பற்றி என்ன நினைக்கிறார்கள் என்றறிவது நல்லது. அதிலும் முகஸ்துதி இல்லாத விஷயமாயின் மிகவும் நல்லது. சமீபத்தில் டில்லியில் நடந்த கிளர்ச்சிகளையும் அவற்றின் விளைவான மாறுதல்களையும் பற்றி விமரிசிக்கும் 'நியூயார்க் டைம்'ஸின் தலையங்கம் பின்வருமாறு கூறுகிறது: ''பசு பற்றிய நெருக்கடி மந்திரிசபை நெருக்கடியாயிற்று. இந்திராகாந்தி அவர்கள் தம்மால் வலுவான தலைமை தாங்க முடியும் என்று நினைத்து முன்வந்ததால் அவரது கட்சிக்குள்ளேயே அவர் நிலைமை எவ்வளவு நிச்சயமில்லாமல் இருக்கிறது என்பது வெளிப்பட்டு விட்டது.''

★

ஐ. நா. முனிவர் ஹாமர்ஷீல்ட் காலமான பின் வெளியான அவரது நினைவுக் குறிப்புகள் இன்றும் விற்பனையில் முதன்மை ஸ்தானம் வகிக்கிறது. அதில் அவர் மிகவும் ரசமாகக் கடமையைப் பற்றி ஒரு புது விளக்கம் தருகிறார். சாதாரணமான ஒரு வேலை எப்போது கடமையாகிறது என்பதைக் கூறுகிறார். தனது வேலை எப்போது தன்னுடைய சத்திய ஒழுக்கத்தின் அங்கமாகிறது என்று ஒருவர் கருதுகிறாரோ அப்போது அது கடமையாகிவிடுகிறது என்கிறார். அதிகாரப் பொறுப்பு ஏற்பதால் மட்டும் கடமை ஏற்பட்டுவிடவில்லை. கடமை என்பது ஒருவரது அந்தராத்மாவுடன் இயல்பாகச் சம்பந்தப்பட்ட ஆழ்ந்த, சக்தி வாய்ந்த விஷயம் என்கிறார். அது கலைஞனின் ஆக்கரீதியான உந்தலுக்கு ஒப்பானது என்கிறார். இது மிகவும் நவீனமான விளக்கமென்று மேல்நாட்டினர் எண்ணுகிறார்கள். நமக்கோ, கீதையில் சொல்கிற ஸ்வதருமத்துக்கு மிகவும் நெருக்கமாகவே ஹாமர்ஷீல்டின் கடமை இலக்கணம் செல்கிறது எனத் தோன்றும்.

★

மனிதனின் ஆன்மாவுக்குச் சூனியம் பிடிக்காது. சூனியம் ஏற்பட்டால் அதை எவ்விதத்திலாவது நிரப்ப முயலும்.

மதத்தை வெளியேற்றி விட்டால் ஏற்படும் சூனியத்தில் பண ஆசை துராக்கிரகமாக இடம் பெற்றுவிடும்.

ஒவ்வொருவரும் தன் தாய்மொழியைப் பேச உலகம் அநுமதிப்பது போல், அவரவரும் தமது மதத்தை அநுசரித்து ஆன்ம வளர்ச்சி பெற அநுமதிப்போமாக.

சென்ற விடமெல்லாம் சிறப்பு

ஜேம்ஸ் ஏ. ரூபின் அவர்கள் நவம்பர் 13ந் தேதி நியூயார்க்கிலிருந்து எழுதுகிறார்:

"என்னுடைய வாராந்தரக் கடிதங்களில் இன்னும் ஒன்றுதான் பாக்கி"— அத்துடன் ஸ்ரீமதி சுப்புலக்ஷ்மியின் அமெரிக்கப் பயணம் முடிவுற்றுவிடும் என்பதை நினைக்கவே வருத்தமாக இருக்கிறது. பத்தொன்பதாம் தேதியன்று எம். எஸ். புறப்படு முன் எத்தனை செவிகள் அவரது இசையைப் பருகுவது சாத்தியமோ, அவ்வளவுக்குக் கச்சேரிகள் அளித்தாக வேண்டுமென்று கடந்த சில நாட்களாக வெகு நெரிசலான நிகழ்ச்சிகளுக்கு ஈடு கொடுத்து வருகிறார் எம். எஸ். நவம்பர் 6ந் தேதி கான்ஸாஸ் நகரிலுள்ள மிஸௌரி சர்வ கலாசாலையில் ஒரு கச்சேரி; 8ந் தேதி லாரென்ஸில் உள்ள கான்ஸாஸ் சர்வ கலாசாலையில் ஒரு கச்சேரி; பல நூறு மைல்கள் கடந்து வந்து 11ந் தேதியே ஃபிலடெல்ஃபியாவில் ஒரு கச்சேரி; 12ந் தேதி பழைய திட்டத்தில் இல்லாமலே, நியூயார்க்கில் இந்திய மாணவர்களின் கோரிக்கைக்கு எம். எஸ். மனமுவந்து இணங்கி அளித்த இசை நிகழ்ச்சி; இன்று (நவம்பர் 13) ஆசியா சொஸைட்டியின் ஆதரவில் பிரமுகர்களின் முன்னிலையில் ஒரு கச்சேரி — அதன் பின் வரவேற்பு வைபவம்; இப்படியாக அடுத்தடுத்து எம். எஸ். பாடி வருகிறார். இன்றையக் கச்சேரியில் இசைக் குழுவை அறிமுகப்படுத்தியபோது ஸ்ரீ வி. வி. நரசிம்மன் கூறினார்: "சுப்புலக்ஷ்மி தமது அமெரிக்கப் பயணத்தில் எத்தனை ஆத்மார்ப்பணமான உழைப்பைக் காட்டியுள்ளார் என்பதற்குக் கடந்த ஏழு நாட்களே சான்று. எம். எஸ்ஸுக்கு இவ்வளவு சக்தி இருந்ததற்கு நாம் ஆண்டவனை வாழ்த்த வேண்டும். ஏனெனில் தொண்டையின் தசைநார்கள் நிவர்த்தி செய்ய முடியாத எவ்வளவோ சிரமங்களுக்கு உள்ளாகக் கூடியவை" என்றார். அவர் சொன்னது முற்றிலும் உண்மை.

இந்தக் கச்சேரிகளில் முதலாவது கான்ஸாஸ் நகரத்தில் மிஸௌரி சர்வகலாசாலையில் நடந்தது. ஐந்நூறு பேர்கள் அமரக் கூடிய அந்த மன்றத்தின் ஒலி அமைப்பு இந்திய சங்கீதத்துக்கு மிகவும் எடுத்ததாக இருந்தது. சபையோருக்கும் பாடகிக்குமிடையே ஒரு நெருக்கமான உணர்வு ஏற்பட, கூட்டம் வழிகிற மன்றத்தில் வெகு அற்புதமாகப் பாடினார் எம். எஸ். சர்வகலாசாலையின் சங்கீதப் பிரிவினர், 'இந்த ஆண்டின் தலைசிறந்த சங்கீத நிகழ்ச்சி இதுவே' எனப் பிற்பாடு கூறினார்கள். இந்தக் கச்சேரிக்கும் அடுத்த கச்சேரிக்கும் காரண கர்த்தராக விளங்கி எங்களை உபசரித்த அருமை நண்பர் பேராசிரியர் என். ஐ. அனந்தநாராயணன், "இரண்டு வருஷங்களாக இந்தக் கச்சேரிக்குக் காத்திருந்தோம். இதுபோன்ற

கலிபோர்னியாவில் ஸான்பிரான்ஸிஸ்கோ மியூஸியத்திலுள்ள கலை அரங்கில் ஸ்ரீமதி எம். எஸ். அவர்களின் இசைக்குப் பிறகு நடந்த பாராட்டு வைபவத்தில் விருந்தினர்களோடு ஸ்ரீமதி எம். எஸ்ஸும், ஸ்ரீமதி ராதா விசுவநாதனும், ஸ்ரீமதி விஜயா ராஜேந்திரனும் அளவளாவி மகிழ்கின்றனர்.

ஸ்ரீமதி எம். எஸ்ஸும் ஸ்ரீ சதாசிவமும் இசைக் குழுவினரோடு ஐரோப்பாவிலும், அமெரிக்காவிலும் சுற்றுப் பயணத்தை வெற்றிகரமாக முடித்துக் கொண்டு டிசம்பர் 5ந் தேதி காலை சுமார் ஒன்பது மணிக்குச் சென்னை மீனம்பாக்கம் விமான நிலையத்தில் வந்திறங்குகின்றனர்.



நிகழ்ச்சியைக் கேட்கப் பேஷாக அவ்வளவு காலம் காத்திருக்கலாம்'' என்றார்.

அவரது வீடும், அவர் பணிபுரியும் கான்ஸாஸ் சர்வகலாசாலையும் உள்ள லாரென்ஸுக்கு மறுநாள் சென்றோம். 'ஆண்டி' என்று அன்பு நிறைந்த மாணவர்களால் அழைக்கப்படும் அனந்தநாராயணனின் விருந்தாளிகளாக ஸ்ரீ சதாசிவம் குடும்பத்தினர் தங்கினர். மற்றவர்கள் வசதியான ஹோட்டலில் தங்க சர்வகலாசாலை ஏற்பாடு செய்திருந்தது. கான்ஸாஸிலும் லாரென்ஸிலும் வஸித்த ஐந்து நாட்களும் ஏறக்குறைய சென்னையில் இருப்பது போலவே ஓர் உணர்ச்சி! அவ்வளவு அற்புதமான தமிழ் நாட்டுச் சமையலை உண்டு மகிழ்ந்தோம்.

எட்டாந் தேதி லாரென்ஸில் நடைபெற்ற கச்சேரியில் எழுபதடி உயர விதானத்தில் நாதம் மோதி எதிரொலி கொட்டியது இசைச் சிறப்பைச் சற்றே பாதித்தது. அப்படியிருந்தபோதிலும் அவையோர் கச்சேரி முடிவில் இடைவிடாமல் கரகோஷம் செய்து எம். எஸ்ஸை மீண்டும் பாட வைத்தனர்.

இந்தியாவில் தீபாவளி வருவதற்குப் பன்னிரண்டு மணி நேரம் முன்பாகவே தீபாவளி கொண்டாடிவிட்டு, 'ஆண்டி' குடும்பத்தினரிடம் விமான நிலையத்தில் பிரியா விடை பெற்றோம். ஸ்ரீமதி அனந்த நாராயணன் அழுதேவிட்டார். எங்களுக்கும் பிரிகிறோமே என்றுதான் இருந்தது. கான்ஸாஸை விட்டு வந்த பின்பும் எங்கள் தேக சௌக்கியத்தை அறிவதற்காக 'ஆண்டி' இருமுறை 'டிரங்க் டெலிபோன்' செய்துவிட்டார். லாரென்ஸ் கச்சேரி எவ்வளவு சிறப்பாக வரவேற்கப் பட்டிருக்கிறது என்று தெரிவித்தார். 'இந்த இசைக் குழு இவ்வளவு விரைவில் போய்விட்டதே' என்று பலருக்கு ஓர் இழப்புணர்ச்சியே உண்டாகிவிட்டதாம்.

பதினொன்றாந் தேதி ஃபிலடெல்ஃபியாவில் உள்ள பென்ஸில்வேனியா சர்வகலாசாலையில் கச்சேரி. கிழக் கடற்கரையிலிருந்து மேலைக் கடற்கரை வரையிலும், மறுபடி மேலைக் கடற்கரையிலிருந்து கிழக் கடற்கரை வரையிலும் எம். எஸ். நிகழ்த்திய கச்சேரிகள் ஃபிலடெல்ஃபியாவோடு முடிவுற்றன என்று சொல்வது ஒரு விதத்தில் பொருத்தம். ஏனெனில் இதன் பின் நியூயார்க் கச்சேரி இருப்பினும் அது முன்பே சென்ற இடம் தானே! ஃபிலடெல்ஃபியாவைப் பயணத்தின் கடைசி இடமாக நான் ஏன் சொல்கிறேன் என்றால், அன்றைய கச்சேரி அவ்வளவு சிறப்பாக உச்ச கட்டத்தை அடைந்து விட்டது. கர்நாடக சங்கீதத்தைத் தாமே பாடுவது மட்டுமின்றிப் பிற அமெரிக்கருக்கும் போதிக்கக்கூடிய தேர்ச்சி பெற்ற பேராசிரியர் ஹாரால்ட் பவர்ஸின் ஏற்பாட்டில் இந்தக் கச்சேரி நடந்தது. பவர்ஸ் அவர்கள் எங்கள் அனைவருக்கும் முன்பே நெருங்கிய நண்பர்.

அறுநூறு பேர் அமரக்கூடிய அழகிய மன்றத்தில் தொள்ளாயிரம் பேர்கள் நெருக்கியடித்துக்கொண்டு குழுமியிருந்தனர். முதலில் சபை நிரம்பியது. பிறகு அரங்கத்திலும் கூட்டம் சேர்ந்தது; அதன் பின் அரங்குக்கு முன் உள்ள வாத்தியக் கோஷ்டிக்கான இடமும் நிரம்பி விட்டது. அதுவும் போதாமல் பின் சுவரோடு ஒட்டிக் கொண்டு நின்றோரும், மன்றத்தின் பல நுழை வாசல்களில் கூடியிருந்தவர்களும் ஏராளம். இசைக் கலைஞர்கள் உட்காருவதற்கே இடம் போதும் போதாததுமாகத்தான் இருந்தது! அன்று எம். எஸ். ஈடு இணையற்ற கச்சேரி வழங்கினார். முக்கியமாக அந்தத் தோடி ராகம் தானம்—பல்லவியையும், தனி ஆவர்த்தனத்தையும் சொல்ல வேண்டும். என்ன சுச்சிதம், என்ன சுத்தம்! மாய வித்தையாக அல்லவா இருந்தது!

மறுநாள் சனிக் கிழமை. ரசிகர்களின் அன்புப் பலவந்தத்துக்கு ஆளாவது தவிர எங்களுக்கு வேறு வழியில்லை. நியூயார்க்குக்கு நேரே பறந்துவிடும் பழைய திட்டத்தை விட்டு மூன்று இந்தியக் குடும்பங்களின் அன்பை அநுபவித்து அவர்களோடு இரண்டரை மணி நேரம் கார் சவாரி செய்து நியூயார்க்கை அடைந்தோம். இவ்விதமான அன்பு நிர்ப்பந்தம் இந்தியர், அமெரிக்கர் இரு சாராரிடமிருந்தும் நாங்கள் சென்றவிடமெல்லாம் எங்களைத் தொடர்ந்து வந்திருக்கிறது.

நியூயார்க்கில் சதாசிவம் குடும்பத்தினருக்கு இருக்கை தந்து உபசரித்தவர் ஸ்ரீ டி. ஆர். துரைசாமி அவர்கள். 'எஸ்ஸோ' கம்பெனியில் உத்தியோகம் வகிக்கும் இவர் ஸ்ரீ சதாசிவத்தின் நீண்ட கால நண்பர்.

ஸ்ரீ துரைசாமியோடு உணவருந்தி விட்டுச் சிறிது ஓய்வு கொண்டவுடன் புறப்பட்டு நியூயார்க் மாணவர்களின் தீபாவளிக் கொண்டாட்டத்தில் எம். எஸ். கலந்து கொண்டு பாடினார். எம். எஸ். தங்கள் கோரிக்கையை உடனே ஏற்றுக் கொண்ட பெருந்தன்மை மாணவர்களின் உற்சாகத்தைக் கரைபுரளச் செய்தது. அவர்களது உற்சாகமே களைத்திருந்த எங்களுக்கும் புத்துணர்ச்சி ஊட்டியது.

இன்று ஆசியா ஹவுஸில் நடைபெற்ற கச்சேரிக்குப் பல பிரமுகர்கள் வந்திருந்தனர். இந்தியாவின் ஐ. நா. பிரதிநிதி ஸ்ரீ ஜி. பார்த்தசாரதி, பிரபல கலைஞர் ஜான் கந்தரின் மனைவி, ஸ்ரீமதி சாந்தா ராமராவ், ராஜாஜியுடன் பரிசயமுள்ளவர்களும், ஒய். எம். ஸி. ஏ.யைச் சேர்ந்தவர்களுமான ஸ்ரீ மெக் க்ளலாண்ட் தம்பதியர், பேராசிரியர் ராபர்ட் ப்ரௌன், பேராசிரியர் ஹாரால்ட் பவர்ஸ் ஆகியோரைக் குறிப்பிட வேண்டும். வாஷிங்டனிலிருந்தும் பலர் கச்சேரி கேட்கவென்றே நியூயார்க்குக்கு வந்திருந்தனர். பால் ஷெர்பர்ட் முதலில் பேசினார். ஸ்ரீ ஸி. வி. நரசிம்மன் இசைக் குழுவை அறிமுகப் படுத்தினார்.

நவம்பர் 15ந் தேதி நியூயார்க்கின் பெருங் கௌரவம் படைத்த செஞ்சுரி கிளப்பில் சுப்புலக்ஷ்மி பாடுகிறார். கொலம்பியாவைச் சேர்ந்த பேராசிரியர் வில்லார்ட் ரோட்ஸ் இந்தக் கச்சேரியை ஏற்பாடு செய்திருக்கிறார். இரண்டு நாட்களுக்குப் பின் இந்தப் பயணத்தின் கடைசிக் கச்சேரி டவுன் ஹாலில் நடைபெறுகிறது. அதற்கு இரண்டு நாட்களுக்குப் பிறகு — அதை நினைக்கவே வெறுப்பாக இருக்கிறது — ஜான் எப். கென்னடி விமான நிலையத்தில் நான் எம். எஸ். குழுவினருக்கு விடை கொடுத்தாக வேண்டும்.



செய்திப் படங்கள்

1. புதுதில்லியில் நவம்பர் 15ந் தேதி விக்யான் பவனத்தில் இண்டர் நேஷனல் பிரஸ் இன்ஸ்டிட்யூட்டின் பதினைந்தாவது பொதுச் சபையை ராஷ்டிரபதி டாக்டர் ராதாகிருஷ்ணன் ஆரம்பித்து வைத்தார். வரவேற்புக் கமிட்டித் தலைவர் ஸ்ரீ ஜி. நரசிம்மன், ஐ. பி. ஐ. தலைவர் பாரி பிங்காமை ராஷ்டிரபதிக்கு அறிமுகப்படுத்தி வைக்கிறார்.



2. காயல் விளையாட்டுச் சங்கத்தின் சார்பாக அண்ணாமலை மன்றத்தில் நடந்த 'சோ' வின் 'சம்பவாமி யுகே யுகே' நாடகத்துக்கு அறிஞர் அண்ணா அவர்கள் தலைமை வகித்துச் சிறப்பித்தார்.




3. செகந்தராபாத்தில் ஸ்ரீ காஞ்சி காமகோடி சங்கர் மந்திர் நிறுவுவதற்காக ஸ்ரீ பாலகிருஷ்ண சாஸ்திரிகள் கதா காலக்ஷேபங்கள் நிகழ்த்தி ரசிகர்களை மகிழ்வித்தார். விழாவைத் தொடங்கி வைத்த ஆந்திர கவர்னர் ஸ்ரீ பட்டம் தாணுப் பிள்ளை, அவரது மனைவியார், விழாத்தலைவர் திரு கே. எஸ். அனந்தராமன், ஐ. ஸி. எஸ். ஆகியோரைப் படத்தில் காணலாம். ஆசாரிய சுவாமிகளிடமிருந்து வந்திருந்த ஸ்ரீமுகத்தைக் காரியதரிசி ஸ்ரீ பார்த்தசாரதி படிக்கிறார்.



4. சமீபத்தில் வேலூரில் குமாரி கே. ஆர். ராஜலக்ஷ்மியின் பரத நாட்டிய அரங்கேற்றம் நடைபெற்றது. இந்த அரங்கேற்ற வைபவத்துக்கு ஜில்லாக் கலெக்டர் பெல்லியப்பா தம்பதி, நடிகர் ஜெமினி கணேசன் முதலியோர் வந்திருந்தனர்.

கனகசபேசம் பிள்ளையை அப்படி ஒன்றும் இரக்கமே இல்லாத மனிதர் என்று சொல்லி விட முடியாது. என்னதான் ஆடம்பரத்துக்காக அவர் ஆலயத் திருப்பணிகள் செய்தாலும், ஆண்டவன் அருள் இந்த ஆறு ஆண்டுகளில் அவர் மனத்தில் கருணையை வித்திடச் செய்யாதிருக்குமா ? ஆனால் பிறர் மனம் புண்படும்படி பேசுவதை மட்டும் அவர் விடவில்லை. அதனாலென்ன? எவன் மனம் புண்பட்டதோ, அவனைத் தவிர மற்ற எல்லாருமே, 'வைரம் பாய்ந்த அவருடைய நெஞ்சுக்குள் இரக்கம் பாகாய்ப் பெருக்கெடுத்து ஓடுகிறது' என்றுதான் கூறினார்கள்.

உலகம் அவ்வளவாகக் கவலைப்படாத மற்றொரு விஷயம் பிள்ளையின் புறவாழ்க்கையைப் பற்றியது. ஒரு காலத்தில் அவர், 'கடவுளே இல்லாத கட்சி'யைச் சேர்ந்த தீவிரவாதியாக இருந்தவர். ஒரு தீவிர வியாதிக்குப் பிறகு அலறிப் புடைத்துக் கொண்டு, ''கடவுள் உண்டு'' என்று சரணாகதி அடைந்தவர். தம் கட்சிப் பிரமுகர்களை அதன்பிறகு வெறுத்து விலக்கிவிட்டாரா என்றால் அதுதான் இல்லை ! அகத் தூய்மைக்காக ஆலயங்களில் பிராயச்சித்தம் செய்தது போலவே, 'புறத்தூய்மைக்காக' வேண்டிக் கட்சிக்குப் பண உதவியும் செய்து வந்தார். பிள்ளையை யாரும் எதுவும் சொல்லவில்லை; அவரை 'பிளாக் மெயில்' செய்வதாகக் கட்சியையும், கட்சியை அடக்கத் தெரியவில்லை என்று அரசாங்கத்தையும் திட்டித் தீர்த்தனர்.



பிள்ளையின் இந்த 'டபிள் பர்சனாலிடி'யினால் அதிகம் தொல்லைப்பட்டவர் அர்ச்சகர் தான். கோயில் தர்மகர்த்தா என்ற முறையில் பிள்ளைக்கான சகல 'மரியாதை'யையும் அர்ச்சகர் காட்டினார். ஆனால் பலனோ எதிரிடையாக இருந்தது.

பிள்ளைக்கு ஒரு வகை 'ஃபிட்ஸ்' வருவதுண்டு. அது வந்ததும் நாட்டு நலனைப் பற்றியும், தேச சேவையைப் பற்றியும் (உருப்படியான) யோசனைகளைத் தவிர மற்ற எல்லாவற்றைப் பற்றியும் காரசாரமாகப் பேசத் தொடங்கி விடுவார். கோயிலையும் அர்ச்சகரையும் தாக்கத் தொடங்கி விடுவார். சுற்றி இருப்பவர்களில் ஆத்திகர் நாத்திகர் இருவரும் கலந்து இருந்தால் — ? பிள்ளை புத்திசாலி; ஆத்திக – நாத்திகரான அவர் அங்கே இருக்கமாட்டார்!

பாவம், அர்ச்சகர்! அவரை வெகுளி என்று சொல்லி வந்த எல்லாருமே இப்பொழுது 'வேஷதாரி' என்று குற்றம் சொல்லத் தொடங்கினர். எல்லாம் பிள்ளையின் கைங்கரியம்!

போதும் போதாததற்கு அர்ச்சகருக்கென்றே வந்து வாய்த்தான் ஒரு மகன். வாட்டசாட்டமான அந்த ஜூனியர் வெகுளியைப் பார்க்கும்போதெல்லாம் கோயில் மடப்பள்ளியின் நெய்யே அவன் உடலில் ரத்தமாக ஓடுகிறது என்று கற்பனை செய்து கொண்டு வயிறு எரிகிறவர் பிள்ளை! இத்தனைக்கும் அது ஒரு சிவன் கோயில்!

மூன்று கடிதங்கள்

ப.ஸ்ரீதரன்

அர்ச்சகருக்கு மந்திரம் தடுமாறியது முதல் தடவைதான் எனினும், பிள்ளையவர்களின் ஏச்சுப் பேச்சுக்கள் புதிதில்லை. ஆதலால் அடுத்த பக்தர் நவக்கிருக பூஜைக்குக் கொடுத்த தட்டை வாங்கிக் கொண்டு சாதாரணமாக நடந்தார் அர்ச்சகர். ஆனால் பிள்ளை அவர்களோ தம்மை அவர் மதிக்கவில்லை என்று பொருமினார். அவரை மறுநாளைக்குள்ளே தொலைக்க வேண்டும் என்று தீர்மானித்தார். வெட்கக்கேடு! எல்லா மந்திரங்களும் ஒரே இறைவனைத்தான் நோக்கிக் கூறப்படுகின்றன என்று காலட்சேபம் செய்த வித்துவானும் பிள்ளை செய்த முடிவுக்குத் தலையாட்டினார். அவர் கவலை அவருக்கு. இப்படிப் பிள்ளையை ஏதாவது ஒரு வகையில் திருப்தி செய்தால்தான் அடுத்த முறை கோயில் உற்சவ காலத்தில், பல ஊர்களில் அவருக்குக் காலட்சேபம் செய்ய 'சான்ஸ்' கிடைக்கும்.

இப்படிப்பட்ட மனோபாவம் கொண்ட பிள்ளை அவர்கள் ஏதாவது ஒரு வழியில் 'குருக்களையா'வை மடக்க வேண்டும் என்று கங்கணம் கட்டிக் கொண்டதில் வியப்பென்ன? அதற்கேற்றாற் போல் அர்ச்சகரும் நடந்து கொண்டார்.

அன்று செவ்வாய்க் கிழமையாதலால் கோயிலில் ஊர்ப் பெரியவர்களில் சிலர் வந்து அர்ச்சனை செய்தனர். மனக் கலக்கம் கொண்டு நடைப்பிணம் போல் உலாவினார் அர்ச்சகர். முருகன் முன்னிலையில் அர்ச்சனை செய்யச் சனீசுவர மந்திரங்களை ஓதினார்! அவர் கெட்டகாலம், உள்ளூர் சம்ஸ்கிருதப் பண்டிதர் சீறினார்: "என்ன ஓய், ஸ்கந்தன் எப்போ சனீசுவரனானான்?"

கனகசபேசம் பிள்ளை கனைத்துக் கொண்டார். "வித்துவான்கள் மாத்திரம் இப்போ இங்கே இல்லேன்னா எங்களையெல்லாம், ஏமாத்தியிருப்பீங்க இல்லையா, ஐயா?" என்று இடக்காகப் பேசினார்.

"மன்னிக்கணும் பிள்ளைவாள்! ஏதோ ஞாபகம்; தவறு நடந்துடுத்து! ஒங்களையெல்லாம் ஏமாத்தியே விட்டாலும், அவனை ஏமாத்த முடியுமா?" என்று பவ்யமாகக் குழைந்தார் அர்ச்சகர்.

உச்சிக்கால பூஜையை முடித்துக்கொண்டு கர்ப்பக்கிருகச் சாவியைக் கொடுக்க வந்தார் அர்ச்சகர். பிள்ளையவர்களும், செல்வாக்கு மிக்க இன்னொரு தர்மகர்த்தாவும் அவர் வரவை எதிர்பார்த்துக் காத்திருந்தனர். ஏற்கனவே வீட்டுக் கவலையால் மனம் நொந்து, மந்திரம் மறந்து மதிப்பிழந்து போன தம் மீது இன்னும் என்ன குற்றம் சாட்டப் போகிறார்களோ என்று உள்ளூற நடுங்கினார் அர்ச்சகர்.

பிள்ளையோடு உட்கார்ந்திருந்தவர் இன்னொரு தர்மகர்த்தா சுந்தரவதனம் பிள்ளை. கல்லூரி மாணவியான அவர் மகள், அர்ச்சகர் மகன் நாராயணனிடம் ஏதோ அசடு வழியப் போக, அவன் தக்க முறையில் அவளுக்குச் சூடு கொடுத்தது இரண்டு பேருக்கும் தெரியும். கொள்ளிக்கட்டை போலச் சிவந்திருந்த அவர் கண்களைக் கண்டதும் அர்ச்சகருக்கு ஏனோ இந்த நிகழ்ச்சிதான் நினைவுக்கு வந்தது.



சுந்தரவதனம் பிள்ளைதான் தொடங்கினார்:

"என்ன ஸ்வாமிகளே! அர்ச்சனை செய்யவந்த பிறகு கூட ஆண்டவனைப் பற்றி நினைக்கக் கூடாதா? நீங்களெல்லாம் இப்படி நடந்து கொண்டால் கடைசியில் எல்லாப் பழியும் எங்கள் தலையில் வந்து விழுகிறது.." என்று சொல்லி நிறுத்தினார்.

"இல்லே, பிள்ளைவாள்! என் பிள்ளை ஒரு கடிதாசு போட்டிருந்தால் நான் மனம் கலங்கியிருக்க மாட்டேன். இந்த நாலு மாதமாகக் கடிதாசு அவனிடமிருந்து வரவில்லை. அந்தக் கவலையில்தான்....." என்று வாக்கியத்தைச் சொற்களால் முடிக்காமல் சோகத்தால் முடித்தபடி நின்றார் அர்ச்சகர்.

"ஒங்க பிள்ளைக்கு என்ன கவலையோ?" என்று எக்களிப்புடன் கண் சிமிட்டினார் கனகசபேசம் பிள்ளை.

தம் பெண்ணுக்கு இன்னும் கல்யாணம் முடியவில்லை என்பதையும் மறந்து போய்ச் சிரிப்பில் கலந்து கொண்டார் சுந்தரவதனம் பிள்ளை. 'தர்மகர்த்தாவின்



அவள்: எனக்குத் திடீர்னு ஒரு கண் போய் விட்டு துன்னு அப்புறமும் இதேமாதிரி என்னிடம் ஆசை யாக இருப்பீர்களா ?

அவன்: உம்...ம்...ம். கொஞ்சம் சந்தேகமாகத் தான் இருக்கு....!

அவள் : அப்ப குடையை என்னிடம் கொடுங்கள், நான் பிடித்துக் கொண்டு வரேன்.

மகள் குருக்கள் மகனுக்குக் காதல் கடிதம் எழுதினாள்' என்பதை உலகம் நம்பிவிடப் போகிறதா என்ற தெம்பு அவருக்கு!

அர்ச்சகர் பேச ஆரம்பித்தார்: "அவன் என் பேச்சைக் கேட்காமல் எங்கே போயி என்ன செய்யறானோ, தெரியல்லே.... அந்தக் கவலையிலேதான் தவறு நடந்து போச்சு...."

ஆவேசமாகக் குறிப்பிட்டார் கனகசபேசம் பிள்ளை :

"என்ன ஐயா ! புருடா விடறே ? நடத்தை சரியில்லாதவன்னு ஊருலே பேரு வாங்கினவன்தானே உம்ம மவன்? ஒத்தைப் பயலாச்சே ஒமக்குன்னு அவனை விட்டு வச்சோம்."

"என் மகன் நடத்தை சரியில்லையா ?" என்று கேட்டுச் சினிர்த்தெழுந்தார் அர்ச்சகர்.

சுந்தரவதனம்பிள்ளையின் முகத்தில் ஒரு பரிதாப பாவம் தோன்றியது. "சொல் லாதே" என்று அவர் விழி கெஞ்சியது. ரத்தபாசத்தில் துடித்தார் அர்ச்சகர். ஊரார் முன் நல்லவன் என்று பேரெடுக்க முடிய வில்லை முன்கோபியான நாராயணனால். அதற்காக?

கனகசபேசம்பிள்ளை எதையும் கவனிக்க வில்லை. "எங்களுக்குத் தெரியாதா ? 'நம்ம ஜாதிக்கு அடுக்காதுடா' அப்புடீன்னு நீங்க கெஞ்சினதும், 'ஒனக்குத் தெரியாது போப்பா'ன்னு அவன் உம்மை ஒதறிட்டுப் போனதும் தெரிஞ்சதுதான். புள்ளை சாதி விட்டுச் சாதி கல்யாணம் கட்டிக்கிட்டால் என்ன, அப்பங்காரன் ஒழுங்கா இருக்கானே அப்புடீன்னு வுட்டுவச்சோம்" என்று மேலே தொடர்ந்தார் பிள்ளைவாள்.

"நிறுத்துமையா !"

அர்ச்சகர்தாம் உறுமினார். தன் குட்டிக்கு ஊறு செய்தால் சினக்கும் புலியைப் போல் இருந்தது அவர் தோற்றம்.

அவர் மேலே ஏதோ சொல்வதற்குள் தபால்காரக் கிழவர் 'மூணு பேரும் இங் கேயே இருக்கீங்களே' என்று வியந்தபடி ஆளுக்கு ஒரு கடிதத்தை விநியோகம் செய்து விட்டுப் போனார்.

முதல் கடிதம்: பெண்ணின் குணம் சரி யாக இல்லை என்று பெண் பார்க்க வந்தவர் களின் சுற்றி வளைத்த குற்றச்சாட்டு — ஒரு கடிதம்..... அதோடு படு நாகரிகத்தோடு ஸ்டைலாக நிற்கும் அவர் மகளின் புகைப் படம். சுந்தரவதனம் பிள்ளையின் முகம் தொங்கி விட்டது.

இரண்டாவது, கட்சியின் தீவிரவாதியாக இருந்த 'அந்தக் காலத்'தில், பிள்ளைவாள் நடத்திய லீலாவிநோதங்களின் ஒரு பகுதியை அச்சடித்த அந்தக் கட்சிக்கு நெருங்கிய தொடர்புடைய ஒரு மஞ்சள் பத்திரிகையின் கடிதம் ! அடுத்த பகுதி வராதிருக்கக் காணிக்கை கேட்டிருந்தது அந்த மஞ்சள் பத்திரிகை. கனகசபேசம் பிள்ளைக்குக் கண் கலங்கியது.

மூன்றாவது கம்பீரமான ராணுவ உடை யில் இருந்த நாராயணனின் படம். அவர் அனுமதி கிடைக்காததால், சென்னையில் கம்பெனியில் வேலை என்று பொய் சொல்லி விட்டு வந்து ராணுவத்தில் சேர்ந்துவிட்ட தற்கு மன்னிப்புக் கேட்டு அவன் எழுதிய கடிதம். பாகிஸ்தானோடு நடந்த போரில் அவன் செய்த சாகஸங்கள்..... அவை அவன் எதிர்காலத்துக்கு உதவப் போகும் உண்மை.

இவை அத்தனைக்கும் மேலாக ராணுவத் தில் வேலை கிடைத்தால் முருகனுக்கு அர்ச்சனை செய்வதாக அவன் வேண்டிக் கொண்டானும். அதைச் செய்துவிடும்படி அவன் 'கேட்டுக் கொண்டிருந்தான். கடிதத்துடன் இனி ஒவ் வொரு மாதமும் பணம் அனுப்புவதாக அவன் எழுதியிருந்தான்.

அர்ச்சகருக்கு நிலைகொள்ளவில்லை. உச்சிக் கால பூஜை நடந்ததை மறந்தார். மறந்து போன ஸ்கந்த மந்திரத்தைத் தமக்கே உரிய வெண்கலக் குரலில் முழங்கியபடி முருகனின் ஸந்நிதிக்குச் சென்றார்.

தம் பெண்ணுக்குத் திருமணம் ஆகவேண் டும் என்று வேண்டிக் கொள்ள அவர் கூடவே ஓடினார் சுந்தரவதனம்பிள்ளை.

கனகசபேசம் பிள்ளை ?

இப்போது அவரைச் சுற்றி ஆத்திகரும் இல்லை, நாத்திகரும் இல்லை. எனவே, அவ ரைப் பற்றிக் குறிப்பிட்டு எதுவும் சொல்ல முடியாது!



நீர்கள்? நான் உங்கள் மனிதன்!'' என்றான் பகடி.

''எங்கள் மனிதனா? அப்படியென்றால் என்ன பொருள்?'' என்று கேட்டான் வேலவன் கோதை !

''உங்கள் மனிதன் என்றால், உங்களுக்கும், உங்கள் நீலவல்லிக்கும் உண்மையாக நடந்து கொள்ளப் போகிற மனிதன் !'' என்றான். அப்படிச் சொல்லும்போதே, 'உங்கள் நீலவல்லி' என்ற சொற்களிலே அழுத்தம் கொடுத்தான் பகடி.

அத்தியாயம் 10

வேலவன் புறப்படுகிறான்

மணிமாலை ஓடி வந்து ஒரே பதற்றத்தோடு நீலவல்லியை அழைத்துக் கொண்டு சமண முழையிலிருந்து மறைந்தாளோ இல்லையோ, மறு வினாடி பாறைகளுக்குப் பின்னால் எங்கோ மறைவிலிருந்து குதித்தான் பகடி! ஆம், அதே பழைய யவன வீரன் தான்! குதித்து வந்தவன் வேலவன் கோதைக்கு முன்னால் வந்து நின்றான், எங்கோ வானத்திலிருந்து கீழே இறங்கி வந்தவனைப் போல! அந்த எதிர்பாராத நிகழ்ச்சியின் திகைப்பிலிருந்து வேலவன் மீளுவதற்குள் யவனப் பகடி தமிழிலே பேசத் தொடங்கினான் வேலவனோடு!

''ஏன் திகைக்கிறீர்கள்? என்னை ஏன் இப்படிச் சந்தேகத்தோடு பார்க்கி


''நீங்கள் என்ன தீர்மானித்திருக்கிறீர்களோ, இல்லையோ, எங்கள் வரையில் நீலவல்லி உங்களுடைய நீலவல்லிதான்!'' என்று பேச்சைத் தொடர்ந்தான் பகடி. நின்றுகொண்டிருந்த பகடியை அந்தப்பாறையிலே உட்காரச் சொன்னான் வேலவன்.

''ஐயா, வேலவரே! நீலவல்லி எதற்காக இப்படிப் பதறிக் கொண்டு ஓடினான் என்றும், மணிமாலையின் உடம்பு ஏன் அப்படிப் பதறியது என்றும் நீங்கள் அதிர்ச்சி அடைந்திருக்கிறீர்கள்! சொல்லுகிறேன் கேளுங்கள்:

''நானும் என்னுடைய நண்பனை மற்றொரு யவனனும் நீங்கள் இந்தக் கடற்கரையிலே வந்து சேர்ந்த நாளிலிருந்து உங்களைத் தனியாகப் பார்த்துச் சில செய்திகள் பேச வேண்டும் என்று தருணம் பார்த்து வருகிறோம். கடம்பன் கடல்மீது செல்லுகிற வெண்ணிலா இரவுதான் நல்ல வாய்ப்பான சமயம் என்று நாங்கள் எண்ணினால், நீங்களும் நீலவல்லியும் இந்த இடத்திலிருந்து பிரிந்து செல்வதாகவே காணோம்! எனவே, ஒரு சிறு வேலை செய்தோம்! என்னுடைய நண்பன் ஒரு சாக்கியத் துறவியின் உடையிலே கன்னி மாடத்தின் சுற்றுப்புறத்தில் நுழைந்திருக்கிறான். துறவியின் உடையிலே யாராவது அரண்மனைக்கு அருகிலே தோன்றி விட்டால் போதும். அவ்வளவுதான்! இந்த வெள்ளைத் நிலை வீரர்கள் அப்படியே அதிர்ந்து போய் விடுவார்கள்! இப்போது அரண்மனையின் காவலாளிக ளெல்லாம் குழப்பமடைந்து துறவியை வளைத்துப் பிடித்து ஏதேதோ கேள்விகள் கேட்டு மடக்கி அவனை —''

''என்ன? என்ன?''

''இல்லை! இல்லை! அப்படி ஒன்றும் நேர்ந்து விடாது. துறவியின் உயிருக்குக் கேடு வந்து விடாது! அதற்குள் தான் யார் என்பது அவர்களுக்குத் தெரியும்படி ஒரு பெரிய அதிர்வேட்டுச் சிரிப்புச் சிரித்து விடுவான் என் நண்பன்! அவனுக்குத் தெரியும் நிலைமையை எப்படிப் பயன் படுத்திக் கொள்ள வேண்டும் என்பது! எங்கள் நோக்கம் அந்தப் பதற்றத்தில் மணிமாலை இங்கே ஓடி வந்து நீலவல்லியை அழைத்துக் கொண்டு போய் விட வேண்டும் என்பதுதானே?''





''அதில் என்ன நன்மை உங்களுக்கு?''

''வேலவரே, நானும் என்னுடைய நண்பனாகிய மற்றொரு யவன வீரனும் மீகாமனுடைய கட்டளைப்படி இங்கே ஒற்றர்களாக வந்து சில நாடக விளையாட்டுக்கள் நடத்திக் கொண்டிருக்கிறோம்!''

''எதற்காக அப்படிச்செய்கிறீர்கள்?''

''புன்னாட்டு அரசராக இப்போது பட்டம் சூடியிருக்கும் மலர் வேணியர் என்ற அரசர், எங்களை இங்கே அனுப்பியிருக்கிறார்!''

''மலர் வேணியரா ?''

''ஆமாம். புனல் வேணியருக்குப் பிறந்த பட்டத்து மன்னரின் பெயர் மலர் வேணியர்! புன்னாட்டு அரண்மனையிலே பிறந்தாளே உங்கள் நீலவல்லி, அவளுடைய மாற்றாந் தாயின் மைந்தர் அவர். அவர் மன்னராக வந்த பிறகு மீகாமனுக்கும் அவருக்கும் மிகவும் நெருங்கிய நட்பு வளர்ந்திருக்கிறது. கடம்ப மன்னன் துளு நாட்டு நன்னர்களோடு சேர்ந்து புன்னாட்டு நீலக்கல் சுரங்கத்தைக் கொள்ளையடிக்க வேண்டும் என்று கருதி வருகிறான் அல்லவா ? இதை எப்படியும் எதிர்க்க வேண்டும் என்ற எண்ணம் சில ஆண்டுகளாகவே புன்னாட்டு மன்னர்களுக்கு ஏற்பட்டு, அதற்கான தந்திரமான பல வழிவகைகளைச் சிந்தனை செய்து வருகிறார்கள். இந்த நிலையில் மலர் வேணியர் மீகாமன் வாயிலாக உங்கள் நீலவல்லியின் துயர வரலாற்றை, நடந்த நிகழ்ச்சிகள் முழுவதும் அறிந்து வெகுண்டு போயிருக்கிறார். தமது தமக்கையை, யவன அரசி டயானா பெற்

றெடுத்த மங்கையை, மீண்டும் புன்னாட்டு அரண்மனையிலே வரவேற்க வேண்டும் என்று விரும்புகிறார். புன்னாட்டு அரண்மனையைச் சேர்ந்த மணிமாலையும், புன்னாட்டு இளவரசியும் இந்தத் திருடர்கள் கூட்டத்தில் இருப்பது அவருக்குத் தாங்கவொண்ணாத பெரும் அவமானமாக இருக்கிறது. எப்படியாவது தமது தமக்கையின் வாழ்க்கையை மீட்பதோடு இந்தக் கொள்ளைக் கூட்டத்தார்களின் சூழ்ச்சிகளை யெல்லாம் தகர்த்து எறிந்து, இவர்களைக் கட்டோடு ஒழிக்க வேண்டும் என்று மலர்வேணியர் ஆசைப்படுகிறார். இந்த நோக்கத்தோடு சேரலாத மன்னருக்கும் தூதுவர்களை அடிக்கடி அனுப்பி வருகிறார் என்று கேள்வி! அதோடு மீகாமனையும் எப்படியோ சரிக்கட்டித் தனக்கு உடந்தையாகச் சேர்த்துக் கொண்டு கடந்த சில மாதங்களாக இருவரும் ஏதோ அரசியல் சூழ்ச்சிகள் செய்து வருகிறார்கள். அவற்றின் விளைவாகத்தான் மிகவும் ஆயமாக இரண்டு யவனர்களை, என்னையும் என் நண்பனையும், இங்கே ஒற்றர்களாக அனுப்பியிருக்கிறார். இது மீகாமனுடைய உடன்படிக்கையிலும் ஒத்துழைப்பிலும் உருவான பெரியதொரு சூழ்ச்சி!''

''அப்படியா! நம்பவே முடியாதபடி வியப்பாக இருக்கிறதே! நானும் நீலவல்லியும் வேறு வகையாக அல்லவா நினைத்தோம், உங்கள் இருவரையும் பற்றி?''

''ஆமாம். உங்களை முதன் முதலாக நோட்டம் பார்ப்பதற்கு வந்து மாம்பழத்தைத் தண்ணீரிலிருந்து எடுத்துக் கொண்டு பாய்ந்து சாடினேனே, அப்போது நீங்கள் எத்தகைய வியப்பும் கவலையும் அடைந்தீர்கள் என்பது எனக்குத் தெரியும்! ஆனால் அதன் பிறகு உங்களைச் சந்தித்து நிலைமையை விளக்குவதற்கு வாய்ப்புக் கிடைக்காமலேயே போய் விட்டது. இனியும் தாமதித்தால் எங்கள் நோக்கம் நிறைவேறாது என்று கண்டு, கடம்பன் கடல் மீது சென்றவன் தீவுக்குத் திரும்புவதற்குள் இந்த முழுநிலா இரவிலேயே உங்களைப் பார்த்துவிட வேண்டும் என்று, நானும் என் நண்பனும் இப்படி ஒரு வேலை செய்தோம்!'' என்றான் யவனன்.

வேலவன் கோதை யவனப் பகடியின் கண்களை உற்று நோக்கினான். யவனர்களுக்கே உரிய நேர்மையும், தன்மான உணர்வும், நட்புணர்ச்சியும் அந்தக் கண்களிலே கண்டான் வேலவன். சொன்னான்:


''நண்பரே, நீங்கள் சொல்லுவதைப் பார்த்தால் நான் இந்தத் தீவுக்கு வந்திருப்பதுகூட உங்கள் மன்னருக்குத் தெரிந்திருக்குமோ என்று அல்லவா தோன்றுகிறது?''

''இருக்கலாம். ஒரு வேளை சேர மன்னருக்கு அனுப்பிய தூதிலிருந்து இந்தச் செய்தியும் மலர்வேணிய மன்னருக்குத் தெரிந்திருக்கலாம். அது பற்றி எங்களிடம் ஒன்றும் சொல்லவில்லை அவர். ஆனால் நீலவல்லியைப் பற்றிய சூழ்நிலைகளையும் நடமாட்டங்களையும் வேவு காணும்படிக்கும், அவளுக்கு எப்போதும் பாதுகாப்பாக இருக்கும்படிக்கும் எங்கள் இருவருக்கும் கட்டளை! மீகாமன் செய்த சூழ்ச்சியினால் நாங்கள் அரண்மனைக் காவலர்களாகவே இந்தக் கடம்ப மன்னரால் அமர்த்தப்பட்டிருக்கிறோம்! எனவே எங்கள் வேலை எளிதாக முடிகிறது! அது மட்டுமில்லை. இங்கே வந்த பிறகோ நீலவல்லிக்கும் உங்களுக்கும் ஏற்பட்ட சந்திப்பைப் பற்றி நன்றாகத் தெரிந்து கொள்ளக்கூடிய வாய்ப்பு எங்களுக்குக் கிடைத்ததிலிருந்து எங்கள்வேலை இன்னும் மிக எளிதாகப் போயிற்று. நீலவல்லியைப் பாதுகாப்பதற்கு எங்கள் இருவரையும்விட அதிகத் தகுதியும் உரிமையும் படைத்திருக்கிறீர்கள் நீங்கள்! அது பற்றி எங்களுக்கு மிக்க மகிழ்ச்சி!''

இவ்வாறு சொல்லி உவகையோடு சிரித்தான் பகடி. பிறகு கூறினான்:

''வேலவரே, நீங்களும் நீலவல்லியும் பேசிக் கொண்ட செய்திகளையெல்லாம் ஒன்று விடாமல் நாங்கள் அறிந்து கொண்டோம்! வேவு காணுகிற தொழிலில் இப்படியெல்லாம் ஒட்டுக் கேட்பது மிகவும் முக்கியமான ஓர் அங்கம் அல்லவா! அதிலும் வேவு காண வந்தவரையே வேவு காண வேண்டியவர்கள் அல்லவா நாங்கள்! அதற்காக எங்களை மன்னியுங்கள்! நீங்களும் நீலவல்லியும் இந்தத் தீவிலிருந்து தப்பிச் செல்ல முயலும்போது, உங்கள் இருவருக்கும் அல்லது மணிமாலையைச் சேர்த்து உங்கள் மூவருக்கும், உற்ற துணையாக இருக்க நாங்கள் இந்த வெள்ளைத் தீவில் எப்போதும் காத்திருப்போம். கவலைப்படாதீர்கள். வெளித் தோற்றத்துக்கு நாங்கள் வெளி மனிதராகவே காணப்பட்டாலும் உள்ளத்திலே உங்களவர்கள் என்று எங்களை நம்புங்கள்! மீகாமனும் இப்போது சில நாட்களாகக் கடம்பனை மறந்து புதிய உறவுகளிலே உடன்படிக்கை செய்து கொண்டு விட்டான். அவனை முழுதும் நம்புவதற்கு நீங்கள் தயங்கலா' 'று

படியப்படிய வாரிய கேசம், பளபளப்பான கேசம் !



டாடா *நறுமண* கேஸ்டர் ஹேர் ஆயில் !

நாள்முழுதும் கேசம் கலையாமலிருக்கச் செய்கிறது

கேசப் பராமரிப்பு ஓர் அரிய கலை. அழகாய் அமைந்த கேசம் அலாதி தன்னம்பிக்கையை அளிக்கிறது. நாள் முழுதும் கலையாமல் இன் மணத்துடனும் ஆரோக்கியமுடனும் உங்கள் கேசம் மிளிர டாடா நறுமண கேஸ்டர் ஹேர் ஆயில் உபயோகியுங்கள்... எழில்மிகு தோற்றம் பெற

டாடா கேஸ்டர் ஹேர் ஆயில்...

3 சைஸ்களில் கிடைக்கிறது



ஆரோக்கியமான படிந்த கேசத்துக்காக.

லும் அவன் புன்னாட்டு அரச குடும்பத்துக்கு நண்பனாக மாறி விட்டான். கடம்பர்களின் வலிமை குறைகிறது என்றும், அவர்களுடைய வாழ்வு முடிகிற காலம் வருகிறது என்றும் கண்டு கொண்டிருக்கிறான் மீகாமன். எனவே, இனி அவன் நமது பக்கம் இருப்பானே தவிர, வெள்ளைத் தீவின் பக்கம் இருக்க மாட்டான். காற்றடிக்கிற திசையைத் தெரிந்து மரக்கலத்தை ஓட்டுகிற மீகாமன் அவன்!''

இவ்வாறு கூறிவிட்டு எழுந்தான் பகடி.

''அதிகமாக நீங்கள் என்னிடம் எதுவும் பேச மாட்டீர்கள் என்பதும், தயங்குவீர்கள் என்பதும் எனக்குத் தெரியும். நீங்களாக என்னையும், என் நண்பனையும் நன்கு ஆராய்ந்து எங்களுடைய உண்மையைக் கண்டுபிடியுங்கள். அது வரை எங்களிடம் தற்காப்பாகவே நடந்து கொள்ளுங்கள். நாங்கள் அதைப் புரிந்து கொள்கிறோம். என்றாலும், நாங்கள் இருவரும் சமயத்தில் உதவக் காத்திருக்கும் நண்பர்கள் என்ற செய்தியை மட்டும் உங்களுக்குச் சொல்ல வேண்டியது என்னுடைய கடமை. அதைச் செய்து விட்டேன். நான் வருகிறேன்!''

வேலவனுக்கு என்ன மறுமொழி சொல்வதென்று தோன்றவில்லை. நம்புவதும் தவறு, நம்பாமல் இருப்பதும் தவறு என்ற ஒரு நிலை! முகத்தில் மகிழ்ச்சியை வரவழைத்துக் கொண்டு யவனப் பகடிக்கு வணக்கம் செலுத்தி விடைகொடுத்தான் வேலவன்கோதை.

பகடி அங்கிருந்து சென்ற சில நாழிகைக்கெல்லாம் இரவு அகன்று பகற்போது ஆயிற்று! அன்று முழுதும் வேலவன் கோதை இந்த யவன வீரனுடைய பேச்சை நம்பலாமா கூடாதா என்பதையே எண்ணி எண்ணிக் குழம்பினான். நீலவல்லியின் வரலாற்றிலிருந்தும் அவளுடைய தாய்வழி உறவிலிருந்தும் வேலவனுக்கு யவனர்களுடைய பண்புகளில் ஒரு மதிப்பு ஏற்பட்டிருந்த போதிலும், எதிர்பாராத இந்த யவன வீரனுடைய சொற்களில் முழு நம்பிக்கை உண்டாக உள்ளத்தில் ஒரு தயக்கம் இருந்தது. இந்த நிலையிலே நீலவல்லி மறுபடியும் வந்தாள்.

ஆம்; மறு நாள் இரவு நீலவல்லி மீண்டும் சமண முழைக்கு வந்தாள். இந்தத் தடவை மணிமாலையும் அவளுடன் வந்தாள்!

''எதிரிகள் என்று நாம் அஞ்சிய யவன வீரர்கள் நம்மவர்கள் என்றே ஆகிவிட்ட பிறகு, இனிமேல் என்ன



''என்னமோ நாலு வருஷமா ஆபீஸ் போறே, வரே. என்ன பிரயோஜனம்? உன் தங்கையைப் பார்! போன மாதம்தான் அவள் ஆபீஸ் போக ஆரம்பித்தாள். அதற்குள் குடித்தனப் பெண்ணாகிவிட்டாள். நீயும் இருக்கியே?''

தயக்கம்? நாங்கள் இருவருமே இங்கு வந்துவிட்டோம். கடல் மீது சென்ற கடம்பர், தீவுக்குத் திரும்புகிற குறிப்புத் தெரிந்ததும், யவன வீரர்களே அறிவிப்புத் தருவார்கள்!'' என்றாள் மணிமாலை.

துறவியின் வேடத்தில் தோன்றி ஒரு சிறிய புயலை அந்தக் கன்னி மாடத்தில் எழுப்பிய யவன வீரனைப் பற்றிப் பேசும்போது மணி மாலை சிரித்து விட்டாள். எதிரி என்று நினைத்து வெள்ளைத் தீவு வீரர்கள் அந்த யவனனை வளைத்து மடக்கிக் குந்தங்களோடு தாக்க முனைந்த வேளையில், அவன் மாறு வேடத்தைக் களைந்து யவனக் காவலாளியாக நின்ற கோலத்தை மணிமாலை ஓவியமாகக் கூறி மேலும் சிரித்தாள்!

''நீங்கள் இருவரும் இந்தச் சாக்கியப் பள்ளிக்கு எதிரே உங்கள் எதிர்காலத்தைப் பற்றி ஒரு புனிதமான உறுதி மொழி எடுத்து, நீங்கள் எந்த முறையில் இங்கிருந்து வெளியேறலாம் என்று தீர்மானிப்பதற்கு முன்பு, இந்த யவன வீரன் உங்களைச் சந்தித்து அவர்களுடைய உதவி உங்களுக்கு இருக்கிறது என்பதைச் சொல்லி விடத் துடியாகத் துடித்திருக்கிறான்! அதனால்தான் இப்படி ஒரு நிசிநேர நாடகத்தை நடத்தி எல்லாக் காவலாளிகளும் ஒரு யவன வீரன்மீது பார்வையாக இருக்கும் போது, இன்னொருவன் இங்கே ஓடி வந்துவிட வேண்டும் என்று இப்படி ஒரு வேலை செய்தார்கள்!'' என்றாள் மணிமாலை. அதோடு நிறுத்தாமல் அந்தத் திறமை

மிக்க மணிமாலை மேலும் ஒரு முன்னறிவிப்புக் கொடுத்தாள்.

"என்றாலும் புன்னாட்டு மன்னர் மலர் வேணிய வேந்தரை நீங்கள் சந்தித்து, உங்கள் வரலாற்றையும் நீலவல்லியின் நிலைமையையும் உங்கள் எதிர்கால எண்ணங்களையும் அவரிடம் கூறி, அவர் மன நிலையை நன்றாக அறிந்த பிறகே யாரிடமும் உண்மையைச் சொல்ல முடியும். அது வரை நம் மூவரைத் தவிர நாலாவது மனிதருக்கு இந்த ஆலோசனைகளில் இடம் இல்லை!" என்றாள் மணிமாலை.

"நீங்கள் ஒரு முடிவுக்கு வாருங்கள். நான் கன்னி மாடத்துக்குச் சென்று எதற்கும் முன் காவலாக இருக்கிறேன்!' என்று கூறி அகன்றாள் மணிமாலை.

"இந்த வீரர்களை நம்புவதும் அச்சமாக இருக்கிறது. நம்பாமல் இருப்பதும் கவலையாக இருக்கிறது!" என்றாள் நீலவல்லி.

"என் நிலைமையும் அதுதான். இதையெல்லாம் நினைத்துப் பார்க்கும் போது எனக்கு ஒரு எண்ணம் தோன்றுகிறது. தயக்கம் இல்லாமல் நான் நேரே புன்னாடு சென்று, உன்னுடைய தம்பியைப் பார்த்துப் பேசி, அவரிடமிருந்து ஆயமான முறையில் ஒரு மரக்கலத்தைப் பெற்று, ஒரு சில நம்பிக்கையான வீரர்களையும் என்னுடன் அழைத்துக் கொண்டு இங்கே வந்து, அதன் பிறகு உன்னையும் மணிமாலையையும் அந்த மரக்கலத்திலே ஏற்றிக் கொண்டு இரவு வேளையில் நாம் புன்னாட்டுக்குத் திரும்பிச் சென்று விட்டால் என்ன?"

"ஆத்திரத்தில் யாருக்குமே படபடப்பான எண்ணங்கள்தான் தோன்றும் போலும்! இங்கிருந்து எப்படிப் புன்னாட்டுக்குச் செல்வீர்கள் நீங்கள்? வெள்ளைத் தீவிலிருந்து எப்படி உங்களுக்கு மரக்கலம் அகப்படும்? யாருக்கும் தெரியாமல் எப்படி நீங்கள் இங்கிருந்து கிளம்ப முடியும்? ஒரு மிதவை கூட இந்தத் தீவில் பாதுகாப்பின்றி இராது! தெரியும் அல்லவா ?"

"வல்லி! நீ என்ன சொல்லுகிறாய்? என்னிடம் உள்ள அன்பு உன்னைக் கலக்கம் கொள்ளும்படி செய்கிறது. இங்கிருந்து மரக்கலம் எதற்கு? தனிமையான இரவிலே யாருக்கும் தெரியாமல் கடலிலே குதித்து நீந்தி, ஒரு காதத் தொலைவிலுள்ள துருத்தித் தீவுக்குச் சென்று விட்டேனானால் போதும். அங்கிருந்து பரதூருக்குச் செல்ல எனக்கு மிதவை கிடைக்கும். பரதூரிலிருந்து புன்னாடு செல்வது மிகவும் எளிது!"

இவ்வாறு சொன்னான் வேலவன் கோதை.

"நன்றாக எண்ணித் துணியுங்கள். வழியில் எத்தகைய இடையூறும் நேராதவாறு நீங்கள் போய்ச் சேர வேண்டுமே என்றுதான் கவலையாக இருக்கிறது. இதுவரை —"

"ஆம். இதுவரை எங்கள் சேர நாட்டுக்கும் எனக்காகவுமே எல்லாச் செயல்களும் புரிந்தேன். இனி மேல் புன்னாட்டுக்கும் உனக்காகவும் சேர்த்துச் செயல்கள் புரிகிறேன். பொறுப்பு அதிகம். அதை நன்றாக உணர்கிறேன்! ஆனால் உன்னைச் சந்தித்த பிறகு என் துணிவும் பலமடங்கு அதிகமாகியிருக்கிறது வல்லி!" — இப்படிச் சொல்லிக் கொண்டே நீலவல்லியின் கரங்களைப் பற்றிக் கண்களிலே ஒற்றிக் கொண்டான் வேலவன் கோதை.

"அப்படியானால் துருத்தித் தீவுக்குச் சென்று அங்கிருந்து ஒரு மிதவையில் பரதூர் சென்று, அங்கிருந்து புன்னாடு போய், என் தம்பியைப் பார்த்து நீங்கள் மரக்கலம் பெற்றுக் கொண்டு, மீண்டும் இங்கே திரும்பி வருவதற்குக் குறைந்தது மூன்று மாதங்களாவது ஆகும் அல்லவா?"

"ஆமாம், மணிமாலையின் துணையோடு இப்போது யவன வீரர்களும் இருக்கிறார்கள் அல்லவா ? அவர்களையும் ஓரளவு நம்புவோம். இந்தத் துணைகளோடு இன்னும் மூன்று முழு நிலா இரவுகளை இந்த வெள்ளைத் தீவிலே கழித்து விடு. மூன்றும் முழு நிலா இரவில் நான் மரக்கலத்தோடு வந்து உன்னைப் புன்னாட்டுக்கு அழைத்துச் செல்வேன். இது உறுதி!"

"கடலிலே நீந்திப் பயின்றவர்கள்தான் நீங்கள். ஆனாலும் என் உள்ளம் கலங்குகிறது. என் தந்தையர்களின் குல தெய்வமான கொற்றவையும், என் தாய் வழியின் குலதெய்வமான வெண்ணிலவு அம்மனும் உங்களுக்கு உறுதுணையாக இருந்து, உங்களை மறுபடியும் என்னிடம் கொண்டு வந்து சேர்க்க வேண்டும் என்று வழிபட்டு வணங்குகிறேன். நலமாகச் சென்று நலமாகத் திரும்புங்கள். அது வரை என் உள்ளமும் விழிகளும் கடல் அலைகளையே பார்த்துக் கொண்டு நிற்கும்!"

இப்படிச் சொல்லும் போது நீலவல்லியின் கண்கள் கலங்கின. அந்தக் கண்களைத் தன் அங்கியினால் துடைத்து விட்டு, அவளுடைய நெற்றித் திலகத்தை நோக்கி நிலவின் ஒளியிலே மன உறுதி செய்து கொண்டான் வேலவன் கோதை!

(தொடரும்)



பின்னியின் தூய பட்டுப்புடவை

எந்த சூழ்நிலைக்கும் ஏற்றது.

பின்னியின்
மேன்மையான தூய பட்டுப் புடவைகள் மனங்கவரும் பலப்பல நிறுசுகளிலும், பலவகை வண்ணங்களிலும் வடிவமைப்புகளிலும் எங்கும் கிடைக்கின்றன.

பின்னியின் இதர
தூய பட்டு வகைகள்:
மென்பட்டுப் புடவைகள்,
ஜார்ஜெட்,
ஸொனடா ஷாட்
ஸில்க் புடவைகள்,
ஸ்பன் மற்றும்
பிளெயின் பட்டு ஷர்ட்டிங்,
பட்டு ஸூட்டிங்,
வேஷ்டிகள் மற்றும்
அங்கவஸ்திரங்கள்.

சிறு சேமிப்புகளில் முதலீடு செய்யுங்கள்

பின்னி பட்டுகளை வாங்கும்போது, இந்த அடையாளம் இருக்கிறதா என்று கவனியுங்கள்.

பெங்களூர் உல்லன், காட்டன் & ஸில்க் மில்ஸ் கம்பெனி லிமிடெட், அக்ரஹாரம் ரோடு, பெங்களூர்-23.


IWT-BM

பின்னி

—துணி உலகிலே புகழ் பெற்ற பெயர்

ஜூடோ

ஒற்றர்களைப் பற்றிய சாகஸங்கள் நிறைந்த அயல்நாட்டுப் படங்களில் எல்லாம் மிகப் பிரபலமாகி வரும் ஒருவிதப் போராட்டத்தை இப்போதெல்லாம் அதிகமாகக் காண்கிறோம். ரசிகர்களும் உற்சாக ஆரவாரம் செய்து இந்தகைய சண்டைக் காட்சிகளை விரும்பிப் பார்க்கிறார்கள். அயல்நாட்டுப் படம் மட்டும்தானா? நம் இந்தியப் படங்களிலும் இந்த முறைச் சண்டைக் காட்சிகள் இடம் பெற்றிருக்கின்றன. 'ஜூடோ' என்று அழைக்கப்படும் இப்போர்முறை ஜப்பானியர்களால் கண்டுபிடிக்கப்பட்டது.



கடந்த உலகப் போரின்போது நேசப் படை வீரர்கள் ஜப்பானியர்களின் இந்த 'ஜூடோ' தாக்குதலைக் கண்டு நடுங்கிப் போனார்கள். அப்போது இந்த 'ஜூடோ' ஜப்பானியர்களுக்கே உரிய, தெரிந்த ஒன்றாக இருந்தது. ஆனால் சமீப காலத்தில் உலகம் முழுவதிலும் அங்கீகாரம் பெற்றதொரு வீர விளையாட்டாகவே இந்த 'ஜூடோ' பிரபலமாகிவிட்டது. டோக்கியோவில் உள்ள 'கோடோகான் ஜூடோ ஹால்' என்பதுதான் சர்வதேச ஜூடோ சங்கத்தின் தலைமைக் காரியாலயம்.

ஜூடோவைப் போன்று இன்னும் சில தாக்குதல் முறைகள் உண்டு. கரெட், அடெமி என்பவைகளோடு இந்த ஜூடோவையும் கற்றுத் தேறுவது உலக நாடுகளின் சிறந்த போலீஸ் படைகளுக்கு ஒரு முக்கியமான பயிற்சியாக இருந்து வந்திருக்கிறது. 'ஜூடோ' என்ற வார்த்தைக்கு 'மென்மையான வழி' என்றுதான் அர்த்தம் என்பதை உணர்ந்தோமானால் ஆச்சரியமாக இருக்கும் நமக்கு. தாக்கும் எதிரியிடமிருந்து மென்மையான திறமை மிக்க முறைகளைக் கையாண்டு நம்மைப் பாதுகாத்துக் கொள்வதே ஜூடோவாகும்.





மேலே : டோக்கியோவிலுள்ள ஜூடோ பயிற்சி நிலையக் கட்டடமான கோடோகான்.

கீழே : ஒரு ஹாலில் ஜூடோ பயிற்சி மும்முரமாக நடக்கிறது.

எதிரியை முடிவாக வெற்றி கொள்ளுவதற்கு ஆரம்பத்தில் நாம் தணிந்து போவதே இம் முறையின் தனிப்பட்ட விசேஷம். இன்று ஜப்பானில் ஜூடோ முறையில் ஆர்வமிக்கவர்கள் ஐந்து மில்லியன் பேர்கள் இருக்கிறார்கள். 'உலக ஜூடோ ஸ்தாபனம்' 1952ம் ஆண்டு டிசம்பரில் பாரிஸ் நகரில் உருவானதற்குப் பிறகு இந்தத் தற்காப்பு முறை முப்பது நாடுகளுக்கும் அதிகமாகப் பரவியிருக்கிறது. இந்தியாவில் பம்பாய் ராஜ்யத்தில் மல்யுத்தங்களைப் போல ஜூடோ முறையையும் பழக்கிக் கொடுக்கும் உடற்பயிற்சிக் கழகங்கள் சில இருக்கின்றன.

பல நூற்றாண்டுகளாகச் செம்மையற்ற முறைகளில் ஜூடோ வளர்ச்சியடைந்திருந்தாலுங்கூட, முன்னேற்றமடைந்த விளையாட்டாக இது ஏற்றம் பெற்று என்பது ஆண்டுகள்தான் ஆகின்றன. மென்மையான முறையில்

விட்டுக் கொடுக்கும் பழக்கம் (இறுதி வெற்றிக்காக) என்ற பழங்கால 'ஜூஜூட்ஸூ' சண்டை பல்வேறு பகுதிகளில் பலவிதமாகப் பழக்கத்தில் இருந்து வந்தது. அவற்றை அறிந்து.இணைத்து இன்றுள்ள சீரான ஜூடோ முறையாக உருவாக்கியவர் 1860 முதல் 1963வரை வாழ்ந்த புரொபஸர் ஜிகாரோ கானோ அவர்கள்தான். ஜப்பானின் சரித்திரத்தை ஆராய்ந்தால் 'ஜூடோ' என்ற இந்தத் தற்காப்புப் போர் முறை உருவானதற்கான காரணம் புரியும். மத்திய காலத்தில் சாதாரண மக்களின் வாழ்க்கை மிகவும் கடுமையானதாக இருந்தது. அதுவும் முக்கியமாக ஜப்பானியர்களில் ராணுவ இனத்தைச் சேர்ந்த சாமுராய் என்ற வகுப்பாரின் ஆட்சியிலே, சமாதான காலத்திலே எந்த ஜப்பானியரும் ஆயுதங்களை வைத்துக் கொள்ளக்கூடாது என்று சட்டமிட்டிருந்தார்கள். சிறைச்சாலைக் காவலர்கள் கூடக் கத்தியை வைத்திருக்கச் சாமுராய்களின் ஆட்சி இடம் தரவில்லை. ஆகவே மக்கள் ஆயுதங்கள் ஏதுமில்லாத நிலையில் தங்களைக் காத்துக்கொள்ள வேறு வழிமுறைகளைக் கண்டு பிடிக்கும் அவசியத்துக்கு ஆளானார்கள். இந்த நிலையில் தான்ஒருவரை யொருவர் வெறும் கைகளால் பற்றிக் கொண்டு போரிடும் அடிப்படை முறையிலிருந்து ஜூஜூட்ஸூ உருவாயிற்று. பின்னும் இந்த ஜூஜூட்ஸூ சாமுராய் வீரர்களுக்கே இன்றியமையாததான ஒரு போர்ப் பயிற்சியாக அமைந்தது.

ஜூஜூட்ஸூவின் முன்னேற்றம் பற்றிய ஆரம்பகால வரலாறுகளை ஜப்பானின் பூர்வீகம் பற்றிக் கூறும் கோஜிகி என்ற நூலிலும், ஜப்பானியர்களின் சரித்திரமான நிஹோன் ஹோசி என்ற நூலிலும் காணலாம். இவ்விரு நூல்களும் எட்டாம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் தொகுக்கப்பட்டவையாகும். இதற்கு ஐந்நூறு வருஷங்களுக்குப் பிறகு ஜப்பானில் நிகழ்ந்த உள்நாட்டுப் போரின் போதும் அதன் பிறகு எடோ வகுப்பாரின் ஆட்சிக் காலத்திலும் (1615—1863) ஜூஜூட்ஸூ ஆச்சரியமான முறையில் முன்னேற்றமடைந்தது. பல்வேறு பகுதிகளில் பல புதிய உத்திகளுடன் இது வளர்ச்சியடைந்தது. ஆனாலும் மன்னர் மீஜியின் சமாதான சகாப்தத்தில் அதுவரை யுத்தக் கலையாக இருந்த ஜூஜூட்ஸூ எல்லா மக்களும் அனுபவிக்கும் விளையாட்டுக் கலையாக மாற்றமடைந்தது.

இன்றைய ஜூடோ கலையைப் பல்வேறு ஜூஜூட்ஸூ கேந்திரங்களின் சிறப்பான முறைகளைக் கொண்டு உருவாக்கியவர் புரொபஸர் ஜிகாரோ கானோ அவர்கள்தான். ஜூடோ பயிற்சிக் கேந்திரமான 'கோடோகான் ஜூடோ ஹாலே' முதன் முதலில் நிறுவியவரும் இவர்தான். 1882ல் ஒரு ஜப்பானியக் கோயிலில் ஒன்பது மாணவர்களுடன் இந்தப் பயிற்சிக் கேந்திரத்தை ஆரம்பித்தார் புரொபஸர் கானோ. இன்று ஜப்பான் முழுவதிலுமுள்ள ஜூடோ பயிற்சிக் கழகங்களில் பயிற்சி பெறும் 'ஜூடோ' அன்பர்களின் தொகை ஐந்து லட்சத்துக்கும் அதிகமாகும்.

நவயுக ஜப்பானை உருவாக்கிய சிற்பிகளின் பட்டியலில் இன்று புரொபஸர் ஜிகாரோ கானோவின் பெயரும் இடம் பெற்றிருக்கிறது.

'ஜூடோ' போர் முறையில் பல உத்திகள் உண்டு. எதிராளி ஆயுதத்துடன் இருக்கிறானா, ஆயுதமின்றி இருக்கிறானா என்பதைப் பொறுத்தது ஜூடோவின் உத்திகள். 'எவ்விதத் தாக்குதலுக்கும் தயாரில்லாதவனைப் போலிருப்பவனே உண்மையில் எதற்கும் தயாராக இருப்பான்' என்பது ஜூடோ பயிற்சியில் அனுபவம் பெற்ற சூரனின் முடிவு. எதிராளியின் வேகத்தைக் கொண்டே அவனைக் கீழே சாய்க்க வேண்டும் என்பதே ஜூடோவின் முக்கிய கொள்கையாகும். ஒரு மனிதன் கால்களைச் சற்று அகற்றியபடி நேராக நிமிர்ந்து நின்றானானால் அந்த உடலின் புவி ஈர்ப்பு மையம் அவனது வயிற்றுப் பகுதியில் இடம் பெற்றிருக்கும். அப்போது அவனது இரு பாதங்களுக்கும் இடைப்பட்ட தூரத்தின் மையத்தில் ஆகர்ஷணம் செயல்படும். இந்த நிலையில்தான் அந்த உடல் தனது உறுதிச் சமநிலையைப் பாதுகாக்கிறது. இந்த அடிப்படைத் தத்துவத்தைக் கொண்டுதான் ஜூடோ போர் முறையின் நுணுக்கங்கள் வகுக்கப்பட்டுள்ளன.

மேலே குறிப்பிட்ட நிலையில் நிற்கும் ஒரு மனிதனின் உடல் அசையும்போது அதன் புவி ஈர்ப்பு மையம் மாறுதல் அடைகிறது. அப்போது உடலின் சமநிலையும் சலனமடைகிறது. உடலின் சமநிலை எந்தத் திசையில் சலனமடைகிறதோ, அதே திசையில் தக்க முறையில் 'ஜூடோ' தாக்குதலை உபயோகித்தால் அந்த மனிதன் நிலைகுலைந்து சுருண்டு விழுவான். அல்லது எதிராளியின் சமநிலையைப் பலவந்தமாகச் சீர்கேடடையச் செய்தால் அவனை மண்ணைக் கவ்வ வைப்பது சுலபம். இதுவே ஜூடோ முறையின் அடிப்படைக் கொள்கை. ஜூடோ தாக்குதலில் எழுபதுக்கும் மேற்பட்ட 'கடாஸ்' அதாவது உத்திகள் இருக்கின்றன.

(1) நாகே நோகடா (வீழ்த்தும் முறைகள்) கதமே நோ கடா (பிடிகள்) ரண்டோரி அதாவது 'ப்ரீஸ்டைல்' பயிற்சிகள் எனப்படும் இவற்றில் வீழ்த்தும் முறையில் பதினைந்து வகையும் பிடிகளில் பதினைந்து வகையும் இடம் பெற்றுள்ளன.

(2) ஜூனோ கடா (மென்மையான தாக்குதல்கள்) என்பதில் மென்மையான எளிய முறையில் பலத்தைப் பயன்படுத்தும் பதினைந்து உத்திகள் விவரிக்கப்பட்டிருக்கின்றன.

(3) கிமினோகடா (முடிவை நிர்ணயிக்கும் உத்திகள்) என்பதில் இருபது விதமான தாக்குதல் உத்திகளும் தற்காப்பு முறைகளும் விவரிக்கப் படுகின்றன. எதிரியின் பிரதான மூட்டுகளை எப்படி வளைக்க வேண்டும், முறுக்க வேண்டும் உடலின் எந்த எந்த சூட்சும இடங்களில் தாக்கினால் எதிரி வீழ்வான் என்பனவெல்லாம் கிமினோ கடா பயிற்சியில் இடம் பெறுகின்றன.

ஜூடோ முறையில் தரத்தை நிர்ணயிக்கும் பல பிரிவுகளும், வகுப்புக்களும் — டான்; கையூ — உள்ளன. இந்த அடிப்படையில் பயிற்சி பெறுவோரும் பயிற்சி அளிக்கும்

நிபுணர்களும் அனுபவம் திறமை இவற்றைக் கொண்டு வரிசைக் கிரமப்படுத்தப்படுகின்றனர். 'டான்' என்பது 'கையூ'வை விட உயர்வானது. 'கையூ'வில் ஆரம்ப காலப் பயிற்சிகள்தான் பெறலாம். 'டான்' பிரிவில் பத்துக் தகுதிகள் உள்ளன. 'டான்' பட்டம் பெறுபவர்களில் ஒன்றிலிருந்து ஐந்துவரை உள்ளோர் இடுப்பில் கறுப்புத் துணியைப் பெல்ட் போல இறுகக் கட்டியிருப்பார்கள். ஆறிலிருந்து எட்டாவது 'டான்' பட்டம் பெறுபவர்கள் சிவப்பும் வெளுப்புமான இடைக் கச்சையையும் ஒன்பது பத்தாவது தகுதி பெற்றவர்கள் சிவப்பு இடைக் கச்சையையும் அணிந்திருப்பார்கள். இன்றைக்கு ஜப்பானில் 'டான்' பட்டம் பெற்ற ஜூடோ பிரியர்கள் 4,00,000 பேர் இருக்கிறார்கள். இவர்களில் பத்தாவது தகுதியான சிவப்பு இடைக் கச்சை அணியும் தகுதி பெற்றவர்கள் மிகச் சிலர்தான்.

1887ல்தான் ஜூடோ போர் முறை வெளி உலகத்துக்கு அறிமுகப் படுத்தப்பட்டது. இன்று ஐரோப்பாவிலும் அமெரிக்காவிலும் ஜப்பானிய ஜூடோ பயிற்சியாளர்கள் ஏராளமாக இருக்கிறார்கள். 'ஜூடோ' ரசிகர்கள் பரபரப்படையும்படியான சம்பவம் 1962-ல் நடந்தது. ஜூடோ போர்முறையில் உலக சாம்பியன் தகுதியை டச்சுக்காரர்களிடம் தோல்வி கண்டு ஜப்பானியர் இழந்ததுதான் அந்த நிகழ்ச்சி.

'டான்' பட்டம் பெற்றவர்களில் ஜப்பானியரல்லாதவர்களின் எண்ணிக்கை சுமார் ஆறாயிரம் என்று கணக்கிட்டிருக்கிறார்கள். ஒலிம்பிக் பந்தயங்களில் ஜூடோ இடம் பெற்றுள்ளது. இந்த முக்கிய நிகழ்ச்சி தவிர வருஷா வருஷம் டோக்கியோவில் 'ஜூடோ' போட்டிகள் நடைபெறுகின்றன. 'ஜூடோ சாம்பியன்ஷிப்'புக்கான விளையாட்டுப் போட்டி இரண்டு வருஷங்களுக்கு ஒருமுறை நடத்தப்படுகிறது. நான்கு வருஷங்களுக்கு ஒருமுறை நிகழும் பிரபலமான ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டிகளில் ஜூடோவும் இடம் பெற்றது 1964ம் ஆண்டில்தான்.

'ஜூடோ' முறைப் பயிற்சி யளிக்கும் முக்கிய கேந்திரமான கோடோகான் நிலையம் 1959ல் டோக்கியோவில் கட்டப்பட்டது. சர்வதேச ஜூடோ கழகத்தின் தலைமைக் காரியாலயமும் இங்குதான் இயங்குகிறது. ஜூடோ பயிற்சி அளிக்கும் அரங்கத்தை அமைக்க ஜப்பானியர் கைக்கொள்ளும் முறை மிகவும் சுவையானது. அந்த அரங்கிலே எத்தனை பாய்கள் இடம் பெறும் என்பதைக் கொண்டே பயிற்சி நிலையங்களை அமைக்க அளவெடுக்கிறார்கள். ஒரு பாய் என்பது, ஆறடிக்கு மூன்றடி அகல நீளங்களைக் கொண்டது. ஆறடுக்கு மாடிக் கட்டிடமான கோடோகான் நிலையத்தில் பிரதான பயிற்சிக்கூடம் ஐந்நூறு பாய்களுக்கான இடம் கொண்டது. அதாவது 9000 சதுர அடிகள் கொண்டதொரு கூடம். இதைத் தவிர 50 பாய்களுக்கான 900 சதுர அடி கொண்ட சிறிய கூடங்களும் அங்கு உண்டு. இந்தக் கூடங்களின் தளம் இரண்டு அடுக்குகளைக் கொண்டது. முதல் தளத்திலிருந்து இரண்டாவது தளம் தனிப்பட்டிருக்கும். இரண்



கீழே தரப்பட்டுள்ள பத்து வினாக்களுக்கும் சரியான விடைகளைப் பத்து நிமிடங்களில் அளிக்க வேண்டும். ஒவ்வொரு சரியான விடைக்கும் ஒரு ஷொட்டுக் கொடுத்துக் கொள்ளுங்கள். தவறாகச் சொன்னால் ஒரு குட்டு! என்ன சரிதானா ?

1. காலஞ்சென்ற விஜயநகரம் மகாராஜாவுக்கு விஸ்ஸி (Vizzy) என்னும் பெயர் வழங்கியதல்லவா? டிஸ்ஸி (Dizzy) என்ற செல்லப் பெயரால் அழைக்கப்பட்ட பிரிட்டிஷ் சரித்திர புருஷர் யார்?

2. உலகிலேயே மிகப் பெரிய சூதாடும் நகரம் இந்நான்கு நகரங்களில் எது? - லாகூர், லாஸ் ஏஞ்செல்ஸ்; லாஸ் வகாஸ்; லிவர்பூல்.

3. நைலான் என்னும் நாகரிகச் சரக்கில் கலந்துள்ள மூலப் பொருள்கள் எவை?

4. தேளிக்கு எத்தனை வயிறுகள் உண்டு?

5. ஆறாவது திருமண ஆண்டு விழாவை என்ன விழாவெனக் கொண்டாடுகின்றனர் மேனாட்டவர்?

6. யூகலிப்டஸ் மரம் அதிக பட்சம் எத்தனை அடி உயரம் வளரும்?

7. "கல உமி தின்றால் ஓர் அவல் கிடைக்காதா?" காலஞ்சென்ற தமிழ் ஆராய்ச்சியாளர் ஒருவர் தம் வாழ்நாளில் அடிக்கடி கூறி வந்த சூத்திரம் இது. இம்மூவரில் யார் அந்தப் பெரியார்? - ரா. பி. சேதுப்பிள்ளை, உ. வே. சாமிநாதய்யர், எஸ். வையாபுரிப்பிள்ளை.

8. தென்னிந்தியாவில் தமிழில் தயாரான முதல் பேசும் படம் எது?

9. ஐ. நா. வில் இன்று அங்கம் வகிக்கும் நாடுகளின் எண்ணிக்கை : 121, 126, 118 எது சரி ?

10. புதிய ஒரு ரூபாய் நோட்டில் (1966ல் வெளியிடப்பட்டது) 'பாரத்' என்ற பதம் எத்தனை இடங்களில், எத்தனை மொழிகளில் காணப்படுகிறது? —பரணி

(விடையை 79-ம் பக்கம் பார்க்கவும்)

டுக்கும் இடையே பல ஸ்பிரிங்குகள் பொருத்தப்பட்டிருக்கும். பயிற்சி சமயத்தில் அடிக்கடி பயிற்சி பெறுபவர் கீழே வீழ்த்தப்படும் போது உடலில் அடிபடாமல் காப்பதற்கே இத்தகைய அமைப்பு.

ஜூடோவில் ஆர்வம் மிக்கவர், வெள்ளை 'பெல்ட்' அணியும் தகுதியைப் பெற ஓர் ஆண்டு பயிற்சி பெற வேண்டியிருக்கும். ஜூடோவின் அடிமட்டத் தகுதி இந்த வெள்ளை இடைக் கச்சைப் பட்டம். ஓர் அயல் நாட்டுக்காரர் கோடோகான் ஹாலில் இந்தப் பட்டத்துக்கான பயிற்சி பெற, ஒரு மாதத்துக்குக் குறைந்தபட்சமாக ஆயிரம் ரூபாய் செலவாகும். (தங்குவதற்கும் உணவுக்குமான செலவு இதற்குள் அடக்கம்) இத்தனைக்கும் கோடோகான் நிர்வாகிகள் இங்கு பயிற்சி பெறுவோருக்கு ஓரளவு பொருளாதார உதவியும் செய்கிறார்கள்.

ஜூடோவில் மோகம் கொண்டுள்ளவர்கள் கோடோகான் நிலையத்தில் பயிற்சியடைந்து பட்டம் பெறுவதையே பெரிய கௌரவமாகக் கருதும்போது எத்தனை செலவானால்தான் என்ன? முகமதியர்களுக்கு மெக்காவைப்போல ஜூடோ அன்பர்களுக்கு கோடோகான் நிலையம்!

—சரித்திர மாணவன்

அத்தியாயம் 18

அடுப்படியை அடுத்தாற் போல், தரையில் ஓலைத் தடுக்கைப் போட்டுக் கொண்டு சுவரில் சாய்ந்தவாறு உட்கார்ந் திருந்தாள் வெள்ளாத்தாள். அடுப்பு திருதிருவென்று எரிந்துகொண்டிருந்தது. அடுப்பெதிரே உட்கார்ந்து சட்டியில் தவிட்டைப் போட்டு வறுத்துக் கொண்டிருந்த வள்ளியின் சாந்தம் நிறைந்த முகத்தையே வெள்ளாத்தாள் வைத்த கண் வாங்காமல் பார்த்துக் கொண்டிருந்தாள். காய்ந்த சுளுந்துக் குச்சிகள் ஜ்வாலை விட்டு அடுப்பில் எரிந்து கொண்டிருந்தன. அந்த ஜ்வாலைகள் வள்ளியின் முகத்தில் தவழ விட்டிருந்த ஒளிக்கோலம் வெள்ளாத்தாளின் கண்களுக்கு வள்ளியின் ஒளி மயமான உள்ளத்தையே பிரதிபலிப்பது போல் தோன்றியது.

வறுபட்ட தவிட்டின் மணம் எங்கும் நிரம்ப ஆரம்பித்தவுடன் வள்ளி அந்தத் தவிட்டைக் கீழே விரித்திருந்த ஒரு துணியில் கொட்டினாள்.

''அத்தை! முதுகை இந்தப் பக்கமாகத் திருப்பிக்கிட்டு உட்காரு. அப்பத்தான் ஒத்தடம் குடுக்கச் சௌகரியமாக இருக்கும்!'' என்று கூறிக்கொண்டே வள்ளி துணியோடு சேர்த்து அந்தத் தவிட்டை ஒரு கிழியாகச் சுருட்டி எடுத்து வெள்ளாத்தாளின் முதுகில் ஒத்தடம் கொடுக்க ஆரம்பித்தாள்.



அபபாட ..வவளவு எதமாயிருக்கு ளனி நோவெல்லாம் பறந்து ாயிட்டமாதிரி இருக்கு. ஏன் வேதனே றிஞ்சு இவ்வளவு கருத்தோட எங்க ள்ளியைத் தவிர வேறே யாரு எனக் க் செய்யப் போறுங்க?'' என்றுள் வள்ளாத்தாள்.

''இதுகூடச் செய்யாட்டி நான் ங்கே வந்துதான் என்ன பிரயோச ம்?'' என்றுள் வள்ளி.

''நாள் தவருமல் இங்கே வந்து பாறயே, அதைச் சொல்லு. நான் டம்பு முடியாமே படுத்த நாளிலே ருந்து ஒரு நாள்கூடக் குறை வைக் ாம என்னேப் பார்க்க வந்திடறே. னசிலே எவ்வளவு தூரத்துக்குப் ரிவும் பாசமும் நெறைஞ்சிருந்தால் ப்படி வரத் தோணும்?'' என்றுள் வெள்ளாத்தாள்.

''நீயும் மங்காவும் என்கிட்டே கொஞ்சமாத்தான் பாசம் காட்டறீங்

நோவெல்லாம் விட்டுப் போயிடுச்சு. இனிமேல் தேவையில்லே. அடுப்பை அணேச்சிடு.''

''எதுக்கு அணேக்கணும்? இதிலே உலேப் பானேயை வைச்சிடறேன்'' என்று கூறிய வள்ளி உலேப் பானேயில் தண்ணீரை ஊற்றி அடுப்பின்மேல் வைத்தாள்.


''இதெல்லாம் எதுக்கு வள்ளி? உடட் காந்தாப் போலேயே நான் செய்துக் கிட மாட்டேனு ?''

''செய்துக்குவே செய்துக்குவே. நேத் துத்தான் தலேக்கு ஊத்தியிருக்கு. இன்னிக்கு முதுகைப் பிடிச்சுக்கிட்டு



முள்ளும் மலரும்

உமா சந்திரன்



களா?'' என்று கூறிக் கொண்டே ஆறிப் போன தவிட்டைத் துணியிலிருந்து சட்டி யில் கொட்டினுள் வள்ளி.

மறுபடி தவிட்டை வறுப்பதற்காகச் சட் டியை அவள் அடுப் பில் வைக்கப் போன போது வெள்ளாத் தாள் கூறினுள்: ''போதும் வள்ளி! அந்த நோவு வேறே உனக்கு. நான் செய்தா கொறைஞ்சா போயிடும்?''

''அதுக்கில்லே, வள்ளி, இன்னும் கொஞ்ச நேரம் போனு மங்காவும் வந் திடும். நாங்க ரெண்டு பேரும் சேந்து செய்துக்கிட மாட்டோமா ?'' என்றுள் வெள்ளாத்தாள்.

''இதோ பாரு அத்தை! மங்கா வுக்கு இந்த வேலேயெல்லாம் குடுக்கக் கூடாது. இன்னிக்குத்தான் மொத மொதல்லே வேலேக்குப் போயிருக்கு, பாவம்!'' என்றுள் வள்ளி.

''பாவமென்ன, பாவம்? இத்தனை நாளும் நான் உழைச்சு அதை உக்காத்தி வைச்சுச் சோறு போடல்லே? இப்பவாச்சும் அது உடம்பு வணங்கி உழைக்கட்டுமே. வேலே வெட்டியில்லாம தும்பறுந்த மாடு மாதிரி சுத்திக்கிட்டிருந்திச்சில்லே? இனி மேலாவது படிமானமா ஆத்தாவுக்கு ஒத்தாசையாயிருக்கட்டுமே?'' என்றாள் தாயார்.

ஆனால் வள்ளியின் மனம் மங்காவுக்காகக் கரைந்தது. பவர்ஹவுஸ் பகுதியில் வெள்ளாத்தாள் எந்த வேலையைப் பார்த்து வந்தாளோ அதே வேலையை இப்போது மங்கா ஏற்றுக்கொண்டிருந்தாள் என்றால் சாமானியமா? நாள் முழுதும் இடிப்பொடிய உழைத்தாக வேண்டுமே. ''பொறுப்பில்லே, பொறுப்பில்லே'' என்று வெள்ளாத்தாள் போக வர அவளைக் கரித்துக் கொட்டிக் கொண்டிருந்தாளே. இப்போது அவளுக்கு எப்படி இவ்வளவு பொறுப்புணர்ச்சி வந்தது? தனக்காக மட்டுமில்லே. ஆத்தாளை மற்றவர் கையில் காட்டிக் கொடுக்கக் கூடாது என்ற வீராப்புத்தானே அவளை அந்த வேலைக்குப் போக வைத்திருக்கிறது! காளியண்ணனைப் போல் மங்காவுக்கும் ஓர் அண்ணன் இருந்தால் இப்படியெல்லாம் நடந்திருக்குமா?

''ஏன் வள்ளி, காளித் தம்பி இப்ப வழக்கம் போல வேலைக்குப் போய் வருதில்லே?'' என்று கேட்டாள் வெள்ளாத்தாள்.

''போய்க்கிட்டிருக்கு, அத்தை. கை போச்சேங்கிற கவலையே அதுக்கில்லே. யாராவது அதைப் பத்திப் பேசினால் கூட அதுக்குக் கோவம் வந்திடுது.''

''என்னமோ வள்ளி உயிருக்கு வந்தது கையோடே போச்சேன்னு மனசைத் தேத்திக்கிட வேண்டியதுதான். காளித் தம்பியையும் சும்மாச் சொன்னப் போதாது. கை போன பிறகும் அதே வேலையை முன்னைப் போலவே பழுதில்லாமே செய்துக்கிட்டிருக்கே.''

''அது விஷயத்திலே நம்ம குமரய்யாவைத்தான் மனசார வாழ்த்திக்கிட்டிருக்கேன். அந்த அய்யாதான் அண்ணனுக்கு அந்த வேலே நெலைக்கும்படியா செய்தாங்க. ஒத்தைக் கையாலேயே அண்ணன் அந்த வேலையைத் திறமையாச் செய்ய முடியும்னு சிபாரிசு செய்து மேலதிகாரிகளைச் சம்மதிக்க வச்சதே அந்த அய்யாதான்'' என்றாள் வள்ளி நன்றிப் பெருக்குடன்.

பின்பு ஒரு பெருமூச்சுடன் கூறினாள்:

''என்ன காரணமோ, இன்னமும் அண்ணனுக்கு அந்த ஐயாவைப் பத்தி நல்ல அபிப்பிராயம் ஏற்படலே. தனக்குக் கை போனதே அந்த ஐயாவாலே தான்னு இன்னமும் சொல்லிக்கிட்டிருக்கு. எப்ப அந்த ஐயாவைப் பத்திப் பேச்சு வந்தாலும் ஆங்காரத்தோட தான் பேசுது'' என்றாள் வள்ளி.

''அதிசயமா இருக்கே. அப்படியென்ன ஆங்காரம்? அந்த ஐயாவைப் பத்தி அப்படியெல்லாம் மனசாலே நெனைக்கிறதுகூடப் பாவமாச்சே!''

''ஆனா அண்ணனுக்கு யாரு எடுத்துச் சொல்றது? எப்படியாவது அதோட மனசு மாறணுமேன்னு நான் சௌரித்தாயை வேண்டிக்கிடாத நாள் கிடையாது!'' என்றாள் வள்ளி.

உலேப் பானையிலிருந்து கொதி ஓசை வந்தது. அரிசியைக் கழுவிப் பானையில் போட்ட வள்ளி குடத்தை எடுத்துக் கொண்டு எழுந்தாள்.

''எங்கே புறப்பட்டே வள்ளி?''

''குடத்திலே தண்ணி தீர்ந்து போச்சு. அருவித் தடாகத்திலேயிருந்து எடுத்துக்கிட்டு வந்திடறேன்'' என்றாள் வள்ளி.

''உனக்கு ஏன் இந்தத் தொல்லையெல்லாம்?'' என்று கேட்டாள் வெள்ளாத்தாள்.

''தொல்லையா இது?'' என்று கூறியவாறு வள்ளி அருவிக்கரையை நோக்கி நடந்தாள்.

அருவித் தடாகத்திலே தண்ணீர் மொண்டு கொண்டிருந்த போது மேலே மேம்பாறைக் கசத்தருகேயிருந்து பேச்சுக் குரல் கேட்டதும் வள்ளி நிமிர்ந்து பார்த்தாள். இரு ஆடவரும் ஒரு பெண்ணும் அங்கே நின்றுகொண்டிருந்தது தெரிந்தது. பெண் கனகா என்பதையும் ஆடவரில் ஒருவர் குமரன் என்பதையும் வள்ளி பார்த்ததுமே புரிந்து கொண்டாள். கனகாவுக்கு மணமாகித் தன் கணவனுடன் வந்திருக்கும் விஷயத்தை மங்கா ஏற்கனவே அவளுக்குக் கூறியிருந்தாளாகையால் இன்னொர் ஆடவர்தான் கனகாவின் கணவராயிருக்க வேண்டும் என்பதையும் அவளால் ஊகிக்க முடிந்தது.

மேம்பாறைக் கசத்துக்கு அவர்கள் ஏன் செல்ல வேண்டும்? பொழுது போக்காகச் சுற்றிப் பார்க்கச் சென்றிருந்தாலும் அந்தக் கசம் ஆபத்து நிறைந்ததாயிற்றே. விவரம் தெரியாமல் அந்தக் கசத்தில் இடுப்பளவு தண்ணீர்தான் இருக்கிறது என்று நினைத்து யாராவது இறங்கி விட்டால்....! அந்தக் கற்பனையே வள்ளியின் மனத்தில் திகிலை நிரப்பியது.

ால்கேட்டின் மூலம் நாள் முழுவதும் வாய் துர்நாற்றத்தை அகற்றி பற்கள் சொத்தையாவதையும் தடுங்கள்!




ரணனில் ஒரே தேய்ப்பில் கால்கேட் கிரீம், துர்நாற்றத்தையும், சொத்தையையும் உண்டாக்கும் கிருமிகளில் 85 சதவிகிதத்தை அழித்துவிடுகிறது.

கால்கேட், 10ல் 7 சந்தர்ப்பங்களில் உடனடியாக வாய் துர்நாற்றத்தை அகற்றுகிறது என்பதையும், உணவு உட்கொண்டவுடன் கால்கேட்டினால் பற்களைத் துலக்கும் முறையால், இதுவரை பற்பசை வரலாற்றிலேயே கண்டிராத பெருமளவில் ஏராளமானவர்களுக்குச் சொத்தை தடுக்கப்படுகிறது என்பதையும் விஞ்ஞான ஆராய்ச்சிகள் நிரூபித்துள்ளன. இந்த சாதனை கால்கேட் ஒன்றுக்குத்தான் உண்டு!

கால்கேட்டின் நீடித்திருக்கும் நூதன நறுமணத்திற்காக, குழந்தைகள் அதனாலேயே பல் துலக்க விரும்புகிறார்கள்!

நீங்கள் பற்பொடியை விரும்பினால் இந்தப் பலன்கள் அனைத்தையும் கால்கேட் டூத் பவுடர் மூலம் அடையலாம். ஒரு டப்பி பல மாதங்களுக்கு வரும்.



பகைத்தத்தீர்க்கும், வாயில் நறுமணம் கமழவும், வெண்மையான பற்களைப் பெறவும் வழக்கமாக கால்கேட்டினால் பல்துலக்குங்கள்

...உலகிலேயே பெரும்பாலானவர்கள் மற்றெல்லாப் பற்பசைகளையும் விட, கால்கேட் டெண்டல் க்ரீமையே வாங்குகிறார்கள்.



தரத் தேயிலைத்தூள்களிலே தனிப்பெருமை வாய்ந்தது

லிப்டன்ஸ்
ஹிமாலயன் கோல்டன்
டஸ்ட் டீ



மணமும், சுவையும் நிறைந்த பொன்னிறமுள்ள டீ யை வெகு சீக்கிரத்தில் இந்தத் தேயிலையைக் கொண்டு அதிகமான கப்புகளைப் பெறுவீர்கள். இந்த ஒப்புயர்வற்ற டீ யை நீங்களே பருகிப் பாருங்கள்—உங்கள் விருந்தினர்களுக்கும் கொடுங்கள். நிச்சயமாக இதை ரசித்து நீங்கள் மகிழ்வீர்கள் — ஆம்! — அப்படியே உங்கள் விருந்தினர்களும்கூட! தரத் தேயிலைத் தூள்களில் லிப்டன்ஸ் ஹிமாலயன் கோல்டன் டஸ்ட் தனிப் பெருமை வாய்ந்தது, தன்னிகரற்றது என்பது உண்மை.

LIPTON

லிப்டன்
என்றாலே
நல்ல டீ

LHGC2 T.

''ஐயா, ஐயா!'' என்று உரக்கக் கூவினாள் வள்ளி.

அவள் குரல் மேலே பேசிக் கொண்டிருந்தவர்களின் செவிகளுக்கு எட்டியதாகத் தெரியவில்லை.

மேலும் குரலை உயர்த்தி, ''ஐயா, உங்களைத்தானே.... இங்கே பாருங்க!'' என்று கத்தினாள்.

இந்தத் தடவை அவளது அழைப்பு தகுந்த பலனை அளித்தது. குமரன் திரும்பிப் பார்த்தான். அருவித் தடாகத்தின் கரையில் வள்ளி நிற்பதைக் கண்டதும் அவனது முகம் மலர்ந்தது. பாறைகளில் தாண்டித் தாண்டி அருவியின் விளிம்பு வரை வந்து நின்றான். ''நீ இங்கே என்ன செய்கிறாய் வள்ளி?'' என்று கேட்டான் உரக்க. அந்தக் கேள்வி அநாவசியம் என்று உணர்ந்ததும், ''என்னையா கூப்பிட்டாய்? எதற்கு?'' என்றான் தொடர்ந்து.

''அந்தக் கசத்துகிட்டே போகாதிங்க. பார்க்கத்தான் ஆழமில்லாதது போலத் தோணும். மூணு ஆளைச் சேத்தாப்பலே அமுக்கற ஆழம் அது'' என்றாள் வள்ளி.

''எனக்கும் அது தெரியும் வள்ளி. அதைத்தான் இவர்கள் இருவருக்கும் விளக்கிச் சொல்லிக் கொண்டிருக்கிறேன்'' என்று சிரித்தான் குமரன்.

''நீங்க அங்கே நிக்கிறதைப் பார்த்ததும் எனக்குப் பயமாப் போச்சு. உங்களுக்குத் தெரியுமோ தெரியாதோன்னு கூச்சல் போட்டுட்டேன். தப்பாயிருந்தா என்னை மன்னிச்சுடுங்க'' என்றாள் வள்ளி.

''இதெல்லாம் மன்னிக்க வேண்டிய தப்பில்லே, கொண்டாட வேண்டிய தப்பு'' என்று கூறிய குமரன், ''சரி சரி, எத்தனை நேரம் குடத்தை இடுப்பில் சுமந்து கொண்டு நிற்கப் போகிறாய்?'' என்று கேட்டான். உண்மையில் அவள் அப்படி நின்ற நிலையை எவ்வளவு நேரம் வேண்டுமானாலும் பார்த்துக் கொண்டிருக்கலாம் என்று அவனுக்குத் தோன்றியது. சட்டென்று தன்னைச் சமாளித்துக் கொண்டு கூறினான்: ''மங்காவின் வீட்டுக்குத்தானே? நானே அவள் தாயாரைப் பார்க்க வருவதாகத்தான் இருக்கிறேன்!''

இதற்குள் குமரன் யாருடனோ பேசிக் கொண்டிருப்பதைக் கண்ட கனகா, யாரென்று பார்க்க வேண்டுமென்ற ஆவல் தாங்காமல் அவனருகே வந்து நின்றாள். வள்ளியைப் பார்த்ததும் அவள் முகத்திலிருந்த ஆவல் மறைந்து அகம்பாவம் நிறைந்த அலட்சியம் தோன்றியது. துடுக்காக ஏதாவது பேசி



'' நாம்தான் பணத்துக்குப் பறக்கிறோம்னு பார்த்தால் இப்போ பணமே பறக்கிற காலமான்னு இருக்கு !''

விட அவள் நாவு துடித்தது. ஆனால் வள்ளி முந்திக் கொண்டாள்.

''வணக்கம் அம்மா.... நீங்க வந்திருக்கிறதா மங்கா சொல்லிச்சு. உடனே உங்களை வந்து பார்க்க முடியலே. மன்னிச்சுக்குங்க'' என்றாள்.

வள்ளியின் இந்தக் கனிவான வார்த்தைகள் கனகாவின் அலட்சியத்தைக் கொஞ்சம் குறைத்தன.

''உன் வீடு வேறு எங்கோ அல்லவா இருக்கிறது? தண்ணீர் எடுப்பதற்கு இவ்வளவு தூரம் வருவானேன்?'' என்று கேட்டாள்.

''தண்ணி எங்க வீட்டுக்கு இல்லிங்க. மங்கா வீட்டுக்கு'' என்றாள் வள்ளி.


''அதோ இருக்கிறதே, அதுதான் மங்காவின் வீடு கனகா'' என்றான் குமரன்.

''அந்தக் குடிசையா ?''

''நமக்குக் குடிசையாகத் தோன்றுவதுதான் அவர்களுக்கு மாளிகை. மங்காவின் தாயாருக்கு உடம்பு சரியாயில்லை. அதனால்தான் வள்ளி அவர்களுக்கு ஒத்தாசைக்காக வந்திருக்கிறாள்'' என்று விவரித்த குமரன், ''நான் சொல்வது சரிதானே வள்ளி?'' என்று கேட்டான்.

புன்னகையுடன் தலையசைத்த வள்ளி ''நான் போய் வரேனுங்க. மறுபடியும் சொல்லி வைக்கிறேன். கசத்துக்கிட்டே மட்டும் போகாதிங்க'' என்று கூறியவாறு இடுப்பில் ஏந்திய குடத்துடன் அங்கிருந்து நகர்ந்தாள்.

வள்ளி நடந்து சென்ற அந்த அழகை ரசித்துக் கொண்டு மெய்ம்மறந்து நின்ற குமரனைத் தன் நினைவுக்கு வரச் செய்தன, கனகாவின் வெடுக்கென்ற வார்த்தைகள்: ''இன்னும் எவ்வளவு நேரம் இங்கேயே நிற்க வேண்டும்? அவர் அங்கே காத்துக் கொண்டிருக்கிறாரே!''



''இப்போதே எனக்கு ஐஸ்கிரீம் வாங்கித் தரணும். இல்லேன்னு ரயில் உடைப்புப் போராட்டம் ஆரம்பிச்சுடுவேன் !''

சட்டென்று திரும்பிய குமரன் சபேசன் நின்ற இடத்தை நோக்கி நடக்க ஆரம்பித்தான்.

தண்ணீர்க் குடத்துடன் வள்ளி வீட்டு வாயிலை நெருங்கிய போது, மங்கா அவளை எதிர்கொண்டாள்.

''நல்ல அக்கா நீ. இதெல்லாம் நீதான் செய்யணுமா?'' என்று கேட்டவாறு தண்ணீர்க் குடத்தை வள்ளியின் இடுப்பிலிருந்து தன் கையில் வாங்கிக் கொண்டாள்.

''நீ வேலையிலிருந்து எப்போ வந்தே மங்கா?''

''இப்பத்தான் வந்தேன். என்ன வேலையோ ! இடுப்பெல்லாம் விட்டுப் போகுது. ஆனா அதுக்காச்சு. எனக்காச்சு. புடிச்சாலும் புடிக்காட்டாலும் செய்யாமே விடப் போறதில்லே'' என்று கூறியவாறு மங்கா உள்ளே சென்று குடத்தை ஒரு பக்கமாக வைத்தாள்.

அவள் கூறிய வார்த்தைகள் வெள்ளாத்தாளின் காதிலும் விழுந்தன.

''புடிக்கிறதென்ன புடிக்காததென்ன? ஏதோ வேலைன்னு கெடைச்சிருக்கே, அதைச் சொல்லு. இல்லேன்னா உன்னையும் என்னையும் யாரு உக்காத்தி வைச்சுச் சோறு போடுவாங்க?'' என்றாள்.

''ஏன் ஆத்தா, அந்த அறிவு இருக்கத் தொட்டுத்தான் நான் வேலைக்குப் போறேன். இல்லாட்டி இலேசிலே வணங்கக் கூடிய ஒடம்பா என் ஒடம்பு!'' என்றாள் மங்கா.

''சொல்லு மங்கா, வேலை ரொம்பக் கஷ்டமாயிருந்திச்சா?'' என்றாள் வள்ளி பரிவு நிறைந்த ஆவலுடன்.

''கஷ்டமில்லாம? வேலை செய்யாம இருக்கறதுதான் சொகம். வேலைன்னு கஷ்டம்னுதானே அர்த்தம்.''

''ஏன்? உனக்காவது உடம்பிலே தெம்பு இருக்கு. நான் இத்தனை நாளும் உடம்பிலே தெம்புகூட இல்லாமத் தானே அந்த வேலையைச் செய்துக்கிட்டிருந்தேன்'' என்றாள் வெள்ளாத்தாள்.

''யாரு இல்லேன்னாங்க... அதுக்காக அதையே திரும்பத் திரும்பச் சொல்லிக்கிட்டிருக்கணுமா? இத்தனை நாளும் நீ உழைச்சதுக்குப் பதிலாத்தான் இனிமே நான் உன்னை உக்காத்தி வெச்சுச் சோறு போடறதுன்னு தீர்மானிச்சுட்டேனே!'' என்றாள் மங்கா.

''நீ என்ன தீர்மானிக்கிறது? டாக்டரய்யா சொன்னதைக் கேட்டுக்கிட்டிருந்தேல்லே? ஆத்தா இந்த ஒடம்போட வேலைக்குப் போனா எங்கே செத்துடுவாளோன்னு பயந்து போய்த் தானே நீ வேலைக்குப் போகச் சம்மதிச்சே. எனக்கா தெரியாது?'' என்றாள் வெள்ளாத்தாள்.

''அப்படியேதான் வெச்சுக்கோயேன். யாரு வேண்டாம்னது! எப்படியோ ஒடம்பு வணங்கி வேலைக்குப்போறேனே, அதை நெனைச்சுச் சந்தோஷப்படுவயா? என்னமோ......''

சோறும் கஞ்சியுமாகப் பொங்கி வழிந்து அடுப்பை அணைத்து விடும் போலிருந்தது. அடுப்பைச் சிறிது தணித்த வள்ளி, கொட்டாங்கச்சி அகப்பையால் பானையில் கொதித்துக் கொண்டிருந்த சோற்றைக் கிண்டிக் கொடுத்தாள். மங்கா ஒரு பக்கமாகத் தரையில் உட்கார்ந்து கொண்டாள்.

''ஏன் மங்கா, நீ இப்ப வரும்போது அண்ணன் உன்னைப் பார்த்திருக்குமே?'' என்று கேட்டாள் வள்ளி.

''இப்ப மட்டுமென்ன? காலையிலே வேலைக்குப் போகும் போதும் பார்க்கத் தான் பாக்குது. எம்மேலே எவ்வளவு கோவம்னு உனக்குத்தான் தெரியுமே. காலையிலே லேசிலே என்னை ட்ராலியிலே ஏற விடலே. கடைசிவரையிலே என்னைக் காக்க வச்சு வம்பு குடுத்துது. மொத நாளா இருக்கேன்னு நான் சும்மா விட்டேன். நாளைக்கும் இதே மாதிரி வம்பு குடுக்கட்டும், தெரியும் சேதி!'' என்றாள் மங்கா.

வள்ளி மௌனமாயிருந்தாள். மங்காவைப் பற்றி அண்ணனின் கோப தாபங்களுக்கெல்லாம் காரணம் என்னவென்று அவளுக்கு ஓரளவு புரிந்திருந்தது. ஆனால் மங்காவிடம் அதை எப்படிக் கூற முடியும்?



"போன மாதம் நான் தண்ணிரில் மூழ்கின போது காப்பாத்தினது நீங்கதானே!"

"ஆமாம்! என்னை ஞாபகம் வச்சிண்டிருக்கிங்களே!"

"அப்ப என் பர்ஸிலே நூறு ரூபாய் வச்சிருந்தேன்; அப்புறமா பார்த்தபோது பத்து ரூபாய் தான் இருந்தது....உங்களை எப்படி என்னால் மறக்க முடியும்?"

வெளியே பேச்சுக் குரல் கேட்டது.

''யாரோ இங்கே வராப்பலே இருக்கு!'' என்றாள் வெள்ளாத்தாள்.

''குமரய்யாவும் அவரைச் சேர்ந்தவங்களும் மேம்பாறைக் கசத்தைப் பாக்க வந்திருக்காங்க. அந்த அய்யா உன்னோட உடம்பைப் பற்றி விசாரிக்க இங்கே வராதாச் சொன்னாங்க'' என்று விவரித்த வள்ளி பரபரப்புடன் குடிசை வாயிலை நோக்கிச் சென்றாள்.

''அடியாத்தே, அந்த ஐயாவுக்குத் தான் எவ்வளவு நல்ல மனசு'' என்று கூறியவாறு மங்காவும் அவளைத் தொடர்ந்தாள்.

கனகா குடிசைக்கு வர விரும்பாததால் அவளையும் சபேசனையும் அனுப்பி விட்டுக் குமரன் மட்டும் குடிசையை நோக்கி வந்து கொண்டிருந்தான்.

''வணக்கம் சார்'' என்றாள் மங்கா அவனைப் பார்த்ததும்.

''உன் தாயாருக்கு உடம்பு சுகம்தானா மங்கா?'' என்று கேட்டான் குமரன்.

''யாருக்கு? ஓ, ஆத்தாவுக்குத் தானே கேக்கறீங்க? உடம்பு சுகத்துக் கொண்ணும் கொறைச்சல் இல்லே. ஓடியாடி வேலை செய்யறதுக்குத் தெம்பு இல்லைங்கிற கொறைதான் அதுக்கு. ஆனா அதைப் பத்தி இனிமே எதுக்குக் கவலைப்படணும்? நான்தான் வேலைக்குப் போக ஆரம்பிச்சுட்டேனே!'' என்றாள் மங்கா.

''அப்படியா? அது எனக்குத் தெரியாதே!'' என்றான் குமரன்.

''இன்னிக்குத்தான் மொத மொதல்லே வேலையிலே சேந்திருக்கு. கொஞ்ச நேரத்துக்கு முன்னேதான் வேலையிலேயிருந்து திரும்பி வந்துச்சு'' என்றாள் வள்ளி.

''நம்பவே முடியவில்லையே!'' என்றான் குமரன்.

''எனக்கே நம்பிக்கை ஏற்படலே, சார். வேலைன்னா காத தூரம் ஓடுறவளாச்சே நான். இந்த ஒரே நாளிலே எப்படி விழுந்து விழுந்து உழைச்சிருக்கேன் தெரியுமா? பம்பரம் மாதிரி ஓடியாடி ஒண்ணொண்ணும் எடுத்துக் குடுத்துக்கிட்டிருந்தேன். அப்ப ஒண்ணும் தெரியலே. இப்பத்தான் ஒடம்பு பூட்டுப் பூட்டா வலிக்க ஆரம்பிச்சிருக்கு'' என்றாள் மங்கா.

குமரன் உள்ளே சென்றபோது வெள்ளாத்தாள் எழுந்திருக்க முயன்றாள். குமரன் அவளைக் கையமர்த்தினான்.

''நீங்க எதுக்கு எழுந்திருக்கணும்? அன்று நான் டாக்டருடன் வந்ததற்குப் பிறகு இந்தப் பக்கம் வரவே இல்லையே! அதனால்தான் இப்போது பார்த்து விட்டுப் போகலாமென்று வந்தேன்'' என்றான்.

''ஏதோ உங்க புண்யம்தாங்க. நீங்க கவனம் எடுத்துக்கிட்டிருக்காட்டி என் உடம்பு இவ்வளவு சீக்கிரம் குணமாகி இருக்காது'' என்றாள் வெள்ளாத்தாள்.

''எப்படியும் இன்னும் இரண்டு மூன்று மாதங்களுக்கு நீங்கள் வேலைக்குப் போகக் கூடாது என்று டாக்டர் சொல்லியிருக்கிறார். அதன் பிறகுகூட நீங்கள் ஜாக்கிரதையாக இருக்கவேண்டும். வேலைக்குப் போகலாம் என்று டாக்டர் சொன்னாலொழிய நீங்கள் வேலைக்குப் போவது ஆபத்து'' என்றான் குமரன்.

''நீங்க ஏன் சார், கவலைப்படறீங்க? நான் வேலைக்குப் போக ஆரம்பிச்சுட்டேனில்லே, இனிமே ஆத்தாவாவது வேலைக்குப் போறதாவது. சொப்பனத்திலேகூட நடக்காது'' என்றாள் மங்கா.

அங்கிருந்து தனது மோட்டார் சைக்கிளில் ஆனைக்கரை வீட்டுக்குப் புறப்பட்ட குமரன் கொஞ்ச தூரம் செல்வதற்குள் காரியாலயத்தில் உடனடியாகக் கவனித்துக் கையெழுத்துப் போட வேண்டிய கடிதம் ஒன்று நினைவுக்கு வரவே, தனது வாகனத்தைக் காரியாலயத்தை நோக்கித் திருப்பினான். காரியாலயத்தில் ஒரு மணி நேரம் இருந்து அந்த வேலையைக் கவனித்து முடித்த பிறகுதான் வீட்டுக்குப் புறப்பட்டான்.

(தொடரும்)

அவளும் ஒரு தங்கை

சி. ரகுபதி.



இப்படித்தான் வாழ வேண்டும் என்ற நினைப்புடையவன் லாரி டிரைவர் வையாபுரி. எப்படியாவது வாழ்ந்தாக வேண்டும் என்ற நிலைக்கு அவன் மாறும்படியாக அவன் மனம் இறங்கி யிருந்தது.

நேற்று அந்த நிகழ்ச்சி நடந்தது. அவன் தங்கை சகுந்தலாவை நேற்று பெண் பார்க்க வந்திருந்தனர். பையனுக்கும் பெண்ணைப் பிடித்திருந்தது. தன் தங்கையும் பார்க்க வந்த பையனிடம் கருத்தைச் செலுத்துவதாகத் தெரிந்தது.

எப்படியாவது இந்தத் திருமணத்தை முடித்துவிட வேண்டும். எப்படி முடிப்பது என்பதுதான் வையாபுரிக்குத் தெரியவில்லை. கல்யாணம் செய்து கொடுப்பது என்றால் இலேசுப்பட்ட காரியமா? ரூபாய் ஐந்நூறாவது இருந்தால்தான் அவன் தன் தங்கையின் கல்யாணத்தைச் சிறப்பாகச் செய்து முடிக்க முடியும். எங்கே போவான் பணத்துக்கு?

நேற்று வந்திருந்தவர்கள் அந்தக் கல்யாணத்தை ஆவணியில் நடத்தி விடவேண்டும் என்று சொல்லிவிட்டுப் போயிருந்தனர். பெண்ணுக்கு மூன்று பவுனில் நகையாவது போட வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்கள். வையாபுரியும் ஒப்புக் கொண்டான். மேல் செலவுகளுக்கு இருநூறாவது தேவை. மொத்தம் ஐந்நூறாவது இருந்தால்தான் கல்யாணம் நடக்கும்.

அந்தச் சம்பந்தத்தை விட்டுவிடவும் அவனுக்கு மனம் வரவில்லை. வந்து பார்த்து விட்டுப் போன பையன் அழகாக இருந்தான். இருபத்திரண்டு வயது வாலிபன். அவன் பாங்கு ஒன்றில் பியூனாக வேலை செய்கிறான். அந்தச் சம்பந்தத்தை விட்டுவிட மனம் வருமா?

நேற்றைய நினைவுகளில் மனம் அலை பாய்ந்து கொண்டிருக்க அவன் லாரிக் கம்பெனிக்குப் போய்க் கொண்டிருந்தான். கோவிந்தா அண்டு கோவிந்தா லாரி சர்வீஸில் அவன் கடந்த ஐந்து ஆண்டுகளாக டிரைவராக வேலை செய்கிறான். நான்கு நாட்களுக்கு ஒரு முறை கோயம்புத்தூருக்கு ஒரு 'டிரிப்' போய் வந்தானானால் பன்னிரண்டு ரூபாய் சம்பளம் கொடுப்பார் முதலாளி. அவன் வேலைக்கு அது குறைவுதான் என்றாலும், வேறு எங்கேயும் வேலை கிடைக்காததால் அதே லாரிக் கம்பெனியில் வேலை செய்து கொண்டிருந்தான். தன் தங்கையின் திருமணத்துக்கு ஐந்நூறு ரூபாய் வேணி டால் அவரா கொடுக்கப் போகிறார்?

லாரிக் கம்பெனி வாசலிலேயே முதலாளி நின்று கொண்டிருந்தார். வையாபுரி முதலாளிக்கு வணக்கம் செலுத்தி விட்டு உள்ளே சென்றான். முதலாளி ஏதோ யோசனை செய்தவராய் அவன் பின்னாலேயே வந்தார்.

''வையாபுரி!''

''என்னங்க எசமான்?'' என்று கேட்டுக் கொண்டே திரும்பிக் குழைவாக நின்றான்.

''என் அறைக்கு வாப்பா'' என்று சொல்லி விட்டு அவர் வேகமாகப் போய்விட்டார். பின்னால் சென்ற வையாபுரி அவர் மேசை எதிரில் போய் நின்றான். அந்த அறையில் வேறொரு புதிய மனிதரும் சோபாவில் அமர்ந்திருந்தார்.

முதலாளி புதிய மனிதரைச் சுட்டிக் காட்டி, ''இவர் சிங்கப்பூரில் இருந்து வந்திருக்கிறார். பெரிய கோடீசுவரர். இவருக்கு உன்னால் ஒரு வேலை ஆக வேண்டும். இவருடைய சரக்குகளைக் கோயம்புத்தூருக்கு ஏற்றிச் செல்ல வேண்டும். ராத்திரிக்கு நீ போகப் போகிறாய் அல்லவா? உன் லாரியில்

தான் இவர் சரக்குகளை ஏற்றப் போகிறோம். நீ எத்தனை மைல் 'ஸ்பீட்' போனாலும் கவலை இல்லை. விடிவதற்குள் நீ கோயம்புத்தூர் போய்ச் சேர்ந்து சரக்குகளைக் கிடங்கில் சேர்த்து விட வேண்டும். இவர் உனக்கு...'' என்று இழுத்தார்.

''இருங்கள், நானே சொல்கிறேன்'' என்று கூறிக் கொண்டே புதியவர் எழுந்து அருகில் வந்தார். ''ஆமாம்பா. நீ பொழுது விடியறதுக்குள்ள கோயம்புத்தூர் போயிடணும். சரக்குகளை எங்கள் கிடங்கில் சேர்த்திடணும். இந்த வேலையை வெற்றிகரமாகச் செய்துட்டியானா திரும்பி வந்ததும் ஐந்நூறு ரூபா இனாம் தர்றேன்'' என்றார். மேலும் மெல்லிய குரலில், ''போலீஸ் கண்ணில் படாமல் போயிடணும். எல்லாம் கள்ளக் கடத்தல் சாமான்கள். திருப்தியா செஞ்சுட்டியானா நிச்சயமா வாக்குத் தவறாமே ஐந்நூறு ரூபாய் கொடுத்திடறேன்'' என்றார்.

'கள்ளக் கடத்தல்' என்றதும் வையாபுரிக்குத் திக்கென்றது. ரூபாய் ஐந்நூறு என்றதும் ஆசை அடித்துக் கொண்டது. அவன் மனம் குழம்பித் தவித்தது.

''எசமான், கொஞ்ச நேரம் டைம் கொடுங்கோ. யோசனை பண்ணிக்கிட்டு வந்து சொல்றேன்.''

''சரி, அரை மணிக்குள் வாப்பா.''

வையாபுரி வெளியே வந்து லாரிகள் நிற்கும் இடத்தில் உட்கார்ந்து கொண்டான். 'இந்த வேலையை ஒப்புக் கொண்டால் ஐந்நூறு ரூபாய் கிடைக்கும். தங்கச்சி கல்யாணம் நடந்துடும். ஆனால் இது சரின்னு மனசிலே படலியே. தப்பு வழியிலே போறதா மனசு அடிச்சுக்குதே. வழியிலே போலீஸ் மடக்கிக்கிட்டுதுன்னா இவங்க ரெண்டு பேரும் தப்பிச்சுக்கிடுவாங்க. அகப்பட்டுக்கினு முழிக்கப்போறது நான்தான். கம்பி எண்ண வச்சாலும் வச்சிடுவாங்க'' என்று நினைத்தான்.

நீண்ட நேரம் அவன் சிந்தித்துக் கொண்டே உட்கார்ந்திருந்தான். 'சாமியை நம்புவோம். அவரு நம்ம பக்கம் இருந்தால் வழியிலே எந்த ஆபத்தும் இல்லாமே போய்ச் சேர்ந்துடறோம். பணமும் கிடைக்கும், கல்யாணமும் நடக்கும்' என்று நினைத்தான். நினைக்கும் தெய்வம் துணை இருக்குமோ?

அவன் முதலாளியின் அறைக்குச் சென்று சரக்குகளை ஏற்றிச் செல்வதாக ஒப்புக் கொண்டான்.

இரவு ஏழு மணிக்கு வையாபுரியின் லாரி சென்னையை விட்டுப் புறப்பட்டு விட்டது. நகரின் எல்லையைத் தாண்டும் வரை மெதுவாகச் சென்றது. நகர் தாண்டியதும் லாரியின் வேகம் நாற்பது ஐம்பது என்று ஏறிக் கொண்டே சென்றது. லாரியின் வேகத்தோடு அவன் மன வேகமும் போட்டியிட்டது.

வையாபுரி பத்து வயதுச் சிறுவனாக இருந்த போது சகுந்தலா பிறந்தாள். அவள் பிறக்கும்போதே தாயை ஏப்பம் விட்டு விட்டுப் பிறந்தாள். வையாபுரியின் தந்தைக்கு ஒரு கடையில் கணக்கு எழுதும் வேலை. வையாபுரியையும், கைக் குழந்தையையும் காப்பாற்ற அவர் மிகவும் கஷ்டப்பட்டார்.

கணக்கு எழுதும் வேலைக்கு முப்பது ரூபாய் சம்பளம். வாய்க்கும் வயிற்றுக்கும் எட்டாமல் மூன்று உயிர்கள் எப்படியோ வாழ்ந்தன. வையாபுரியின் தாயார் இறந்து போனதால் அவன் பள்ளிப் படிப்பு பரண்மேல் ஏறிக் கொண்டது. குழந்தையைப் பார்த்துக் கொள்ளும் பொறுப்பு அவனுக்கு வந்து சேர்ந்தது. வேலைக்குப் போகும் தந்தை இரவு பத்து மணிக்குத்தான் திரும்பி வருவார். அதற்குள்ளாகக் குழந்தையையும் கவனித்துக் கொண்டு குடும்ப வேலைகளையும் செய்து விடுவான். சோறாக்கி வைத்து விட்டு ஒரு ரசமோ, துவையலோ செய்து வைத்திருப்பான். இப்படித்தான் ஐந்தாண்டுகள் கடந்தன.

இந்தச் சிறிய நிம்மதி கூட வையாபுரியின் வாழ்க்கையில் இல்லாமல் போய்விட்டது. சகுந்தலாவுக்கு ஐந்தாவது ஆண்டு நடக்கும் போது அந்தத் துக்ககரமான சம்பவம் நடந்தது. காய்ச்சல் என்று படுத்த வையாபுரியின் தந்தை மூன்றே நாட்களில் கண்ணை மூடிவிட்டார். தன் தங்கையை வளர்க்கும் முழுப் பொறுப்பும் வையாபுரியின் மேல் விழுந்தது.

உழைத்தாலன்றி வாழ முடியாது என்பதை உணர்ந்தவன் வையாபுரி. அவன் தன்னுடைய பதினைந்தாம் வயதில் ஒரு லாரிக் கம்பெனியில் கிளீனராக வேலையில் சேர்ந்தான். முதலில் அவனுக்குத் தினமும் எட்டணா கூலி கிடைத்தது. அவன் அந்தக் கூலியில் தன்னைப் பாதுகாத்துக் கொண்டு தன் தங்கையையும் வளர்த்து வந்தான். தன் தங்கையை ஐந்தாம் வகுப்பு வரையில் படிக்க வைத்தான்.



அவளுக்கும் வயது பதினைந்து ஆனது. பார்ப்போர் வியக்கும் வண்ணம் பருவம் அடைந்தாள். இப்போது வயது பதினாறு. அவளுக்குத் திருமணம் ஆக வேண்டும்.

இரவு மணி ஒன்று.

வையாபுரியின் லாரி அரியூரைத் தாண்டிப் போய்க் கொண்டிருந்தது. அரியூர் காட்டைக் கடந்து கொண்டிருந்த போது கணவாய் ரோட்டை எப்படிப்பட்ட வண்டிகளும் மெதுவாகத்தான் கடக்க வேண்டும் என்று தெரிந்திருந்தும் அவன் வேகத்தைக் குறைக்கவில்லை. கணவாயைத் தாண்டுவதற்குள் எத்தனை திருப்பங்கள்?

ஒரு திருப்பத்தில் ஸ்டியரிங்கை உடைக்க முடியாமல் ரோட்டைத் தாண்ட விருந்த லாரியைத் திடீரென்று பிரேக் போட்டு நிறுத்தினான். லாரி ஒரு குலுக்கலுடன் ஒரு மரத்தை மோதும் நிலையில் நின்றது. ரிவர்ஸ் எடுத்து வண்டியைத் திருப்ப நினைத்தபோது இஞ்சின் இயங்கவில்லை.

வையாபுரி லாரியை விட்டுக் கீழே இறங்கி வந்தான். 'பானட்'டைத்திறந்து பார்த்தான். என்ன கெட்டு விட்டது என்பதை ஆராய்ந்து கொண்டிருந்தான். அவன் கிளீனராக இருந்து டிரைவராக ஆனவன் அல்லவா? மோட்டார் மெக்கானிஸம் அவனுக்குத் தெரியும்.

அரை மணி நேரம் போராடிப் பார்த்தான். வண்டி நகரவில்லை. அவன் குழம்பிக் கொண்டு நின்றிருந்தான்.

சேலம் பக்கமிருந்து ஒரு கார் வேகமாக வந்து கொண்டிருந்தது. சிறிய 'பியட்' கார். வையாபுரி கையை நீட்டிக் கொண்டு நின்றான். வேகமாக வந்த கார் அவன் பக்கத்தில் வந்து 'கிறீச்'சிட்டு நின்றது.

டிரைவர் சீட்டில் உட்கார்ந்திருந்தவன், ''என்னப்பா?'' என்று எரிந்து விழுந்தபடி கேட்டான்.

''சார், லாரி ரிப்பேர். ஒரு செகண்டிலே கவனிச்சுடலாம். இறங்கி வாங்க.''

''தாடி எரியும்போது பீடிக்கு நெருப்பு கேட்ட கதையா இருக்கப்பா. என்னுடைய அவசரம் என்ன?''

அவன் காரைக் கிளப்பி விட்டான். திடீரென்று வையாபுரியின் கண்கள் பின்பக்கம் தாவின. காரின் பின்னால் ஓர் இளம் பெண்! கையும் காலும் கட்டப்பட்டுக் கிடந்தாள். வாயிலே துணி அடைக்கப்பட்டிருந்தது.

கிளம்பிவிட்ட காரை நிறுத்துவது எப்படி? ''சார் சார்!'' என்று கூப்பிட்டுப் பார்த்தான். கார் நிற்கவில்லை. காரை நிறுத்துவதற்கு வழி என்ன? ஏதோ ஆபத்து வண்டியினுள் இருக்கிறது!

அவன் சட்டென்று குனிந்து ஒரு கல்லை எடுத்தான். காரைப் பார்த்து அடித்தான். காரின் பின் கண்ணாடி தூள் தூளாகச் சிதறியது. கார் நின்றது. எறியப்பட்ட கல் காரோட்டியையும் தாக்கியது.

காரில் இருந்தவன் இறங்கி வேகமாக நடந்து வந்தான்.

''லாரி டிரைவர் என்ற பொறுக்கித்தனத்தைக் காட்டிட்டியே! உன் லாரியை ரிப்பேர் பார்க்கலேன்னு கண்ணாடியை உடைக்கனுமாடா ராஸ்கல்!''

வையாபுரி ஏதும் பேசவேயில்லை. சடசடவென்று அவன் முகத்திலும் உடம்பிலும் குத்துக்களை இறக்கினான். நோஞ்சானான அவன் இரண்டு நிமிடங்களில் களைத்துப் போய், துவண்டு கீழே விழுந்தான். உடம்பில் ஏற்பட்ட வலியால் அவனால் எழுந்திருக்கவே முடியவில்லை.

வையாபுரி கார் அருகே ஓடினான். பின் சீட் கதவைத் திறந்து உள்ளே கிடந்த பெண்ணின் கட்டுக்களை அவிழ்த்தான். வாய்த் துணியை எடுத்தான். களைத்துக் கிடந்த அவள் மெல்ல எழுந்து உட்கார்ந்தாள். அவள் இரு கைகளையும் கூப்பி வணக்கம் தெரிவித்தாள். ''என்னைக் காப்பாற்றியதற்கு நன்றி அண்ணா!'' என்றாள். ''காரிலேயே என்னைச் சேலம் கொண்டு போய்ச் சேர்த்து விடுங்கள். விடிவதற்குள் நான் என் வீடு போய்ச் சேர்ந்தால்தான் என் பெற்றோரின் மானம் பிழைக்கும்'' என்றாள்.

''உனக்கு என்னம்மா நேர்ந்தது? நீ எப்படி அவனிடம் சிக்கிக் கொண்டாய்?'' என்று கேட்டான் வையாபுரி.

''விவரமாக வீட்டுக்குப் போய்ச் சொல்கிறேன், அண்ணா.''

வையாபுரி காரைச் சேலம் நோக்கித் திருப்பினான். அந்தப் பெண் சேலம் சென்றதும் தன் வீட்டுக்கு வழிகாட்ட அவன் காரை ஓட்டினான். அவள் வீட்டு வாசலில் கார் நின்றதும் அவள் இறங்கிக் கொண்டாள். அவனையும் இறங்கி உள்ளே வரச் சொன்னாள். அவளுடைய பெற்றோர்கள் கூடத்தில் உட்கார்ந்து அழுது வடிந்து கொண்டிருந்தனர். அவர்களைப் பார்த்ததும் அவள் ஓடினாள். மகளைப் பார்த்த தாயார் ''வந்து விட்டாயா என் கண்ணே!'' என்று ஓடி வந்து மகளை அணைத்துக் கொண்டாள்.

''ஜகதா! நீ எப்படியம்மா தப்பிவந்தாய்?''

ஜகதா வாசல் புறம் திரும்பினாள். வையாபுரி தயங்கியபடியே உள்ளே வந்தான்.

''இதோ வருகிறாரே, இவர்தானம்மா என் மானத்தைக் காப்பாற்றினார்'' என்றாள். தாயார் வையாபுரியை வரவேற்று உட்காரச் சொன்னாள். தந்தை பேசினார்:

''தம்பி, எங்க குடும்ப கௌரவத்தை, எங்க மானத்தைக் காப்பாத்தி இருக்கிற உனக்கு எப்படி நாங்க கைம்மாறு செய்யப் போகிறோம்? எங்க பொண்ணு ஜகதாவுக்கு இன்னும் நாலு நாளிலே கலியாணம். தாராபுரத்திலே வாழ்க்கைப்படப் போகிறாள். அதுக்குள்ளாற என் மச்சான், என் பெண் சாதிக்குத் தம்பி ஜகதாவைப் பலாத்காரமாகக் கடத்திக்கிட்டுப் போயிட்டான். எங்கள் யாருக்கும் அவனுக்குப் பெண் கொடுக்க இஷ்டமில்லை. ஜகதாவைக் கடத்திக்கிட்டுப் போய் மானத்தை அழிச்சிட்டாப் பெண்ணைக் கொடுத்திடுவோம்னு திட்டம் போட்டான். பாதி ராத்திரிக்கு மேலேதான் எங்களுக்கு விஷயம் தெரியும். போலீசுக்குப் புகார் பண்ணலாம்னு இவ கேக்கலே. தம்பி மேலே பாசம். என் ம



பண்ணறதுன்னு தெரியாம அழுது வடிஞ்சிக்கிட்டு உட்கார்ந்திருந்தோம். கடவுள்போல இவனைக் கொண்டாந்து சேர்த்துட்டே.''

நன்றிப் பெருக்கால் கண்ணீர் வடித்தார்.

''ஐயா! நான் மெட்ராஸிலேருந்து லாரியிலே வந்தேன். என் லாரி அரியூருக்கு இந்தப் பக்கம் காட்டிலே கிடக்கு. போய் எடுத்துக்கினு வந்திடறேன். காலையிலே வந்து பேசிக்கிறேன். எனக்கு நிற்க நேரமில்லை'' என்றான் வையாபுரி.

வெளியில் வந்து காரை எடுத்துக்கொண்டு அரியூர் நோக்கித் திரும்பினான். விடியற்காலை ஐந்து மணி இருக்கும். கார் அவன் லாரி இருந்த இடத்தை அடைந்தது. அதே சாலையில் அந்தக் காரை ஓட்டி வந்த ஜகதாவின் மாமன் விழுந்த இடத்திலேயே எழுந்திருக்க முடியாமல் படுத்துக் கிடந்தான். அவன் காரை அவன் பக்கத்தில் நிறுத்தி விட்டுத் தன் லாரியை வந்து கவனிக்க ஆரம்பித்தான்.

லாரி ரிப்பேர் ஆகி விட்டது. சேலத்தை நெருங்கும்போது நன்றாகப் பொழுது விடிந்து விட்டது. ஆனால் அவன் சேலம் போய்ச் சேர முடியாமல் அவன் லாரியைப் போலீஸார் சூழ்ந்து கொண்டார்கள்.

கள்ளக் கடத்தல் சாமான்கள் ஏற்றி வந்ததற்காக வையாபுரி கைது செய்யப்பட்டான்.

அவன் வழக்கு விசாரணைக்கு வந்தபோது சிங்கப்பூர்க்காரரைப் பற்றி விவரமே கிடைக்கவில்லை. கோவிந்தா அண்டு கோவிந்தா லாரிக் கம்பெனிக்காரர் தங்களுக்குத் தெரியாமலே வையாபுரி தனிப்பட்ட முறையில் சரக்குகளை ஏற்றிச் சென்றிருக்கிறான் என்று கையை விரித்து விட்டார். கோயம்புத்தூர் கிடங்குக்காரர் தங்களுக்குச் சென்னையிலிருந்து எவருமே சரக்கு அனுப்புவது இல்லை என்று சாதித்தனர்.

அந்தக் கள்ளக் கடத்தலின் முழுக் குற்றமும் வையாபுரியின் மேல் சுமத்தப்பட்டது. அவன் சிறைத் தண்டனை பெற்றான்.


வையாபுரி கம்பிகளைப் பிடித்துக் கொண்டு சிரித்தான். 'தீய வழியில் சென்று தங்கையின் திருமணத்தை முடிக்க நினைத்தேன். தீமை தீமையைத்தான் தந்தது. ஆனாலும் ஒரு திருப்தி. இன்று சரக்குகளை ஏற்றிக் கொண்டு வரவில்லையானால் ஜகதாவின் மானத்தைக் காப்பாற்றி இருக்க முடியாது. அவளுக்கு வாழ்வு கிடைத்திருக்காது. என் சொந்தத் தங்கைக்கு . வாழ்வு கொடுக்க என்னால் முடியவில்லை என்றாலும் யாரோ ஒரு தங்கைக்கு வாழ்வளித்து விட்டேன்' என்று நினைத்தான் — சிரித்தான். கூண்டுக் கிளி சிரித்தால் என்ன, அழுதால் என்ன?

ரெயினர் மேரியா ரில்கே (1875-1926) எனும் ஜெர்மன் கவி எழுதிய மூலத்திலிருந்து மயன் மொழிபெயர்ப்பு:

விழும் இலைகள்

இலைகள் விழுகின்றன — தூரத்திலிருந்து போல!
எங்கேயோ உள்ள தோட்ட மரத்து இலைகள் போல
மறுக்கும் ஒரு நிலையில் அவை ஒன்றன் பின் ஒன்றாக
விழுகின்றன.

இரவுக்குப் பின் இரவு, தனிமையின் அதலத்திலே.
எட்டும் நட்சத்திரத்திலிருந்து எட்டி விழுகிறது பூமி.
எல்லோரும் விழுந்து கொண்டிருக்கிறோம் - எழுதும்
இக்கை
உள்பட — தவிர்க்க இயலாத விழுகையாம் இது.
இருந்தும் அழுத்தம் ஏதுமின்றி நம்மைப்பிடித்து
நிறுத்தும்
கை ஒன்றுண்டு - அதன் பிடியிலிருந்து யாரும்,
ஏதும் விழமுடியாது!





மேஜர் சந்திரகாந்த்

போர்க்களத்தில் பார்வை யிழந்த ஒரு ராணுவ அதிகாரி (மேஜர் சந்திரகாந்த்) நீதியையும் நேர்மையையுமே தமது இரு கண்களாகக் கொண்டு வாழ்கிறார். அவரது மூத்த மகன் ஸ்ரீகாந்த் ஒரு போலீஸ் இன்ஸ்பெக்டர். இளைய மகன் ரஜனிகாந்த், கல்லூரி மாணவன் — அவன் வலையில் விழுந்த பெண்கள் எத்தனை பேரோ! அவர்களுள் கல்லூரி மாணவி விமலாவும் ஒருத்தி. அவள் டெய்லர் மோகனின் ஒரே தங்கை. அவளை மாசுபடுத்திவிட்டு மணக்க முடியாதென்று மறுத்து விடுகிறான் ரஜனிகாந்த். விமலா தற்கொலை செய்துகொள்கிறாள். தன் தங்கைக்கு ஏற்பட்ட விபரீத முடிவுக்குக் காரணமா யிருந்த ரஜனிகாந்த்தைக் கொன்று விடுகிறான் மோகன்.

சுந்தரராஜனைப் பார்த்தவுடனேயே இவர்தான் மேஜர் சந்திரகாந்த் என்று தெரிந்து விடுகிறது. கம்பீரமாகத் தோன்றும் அவர் நடிப்பிலும் நிமிர்ந்து நிற்கிறார்.

விமலாவின் அண்ணன் மோகனாக வந்து எல்லோரையும் சிரிப்பில் ஆழ்த்துகிறார், நாகேஷ். தங்கையின் தற்கொலைக்குக் காரணமாயிருந்தவனைக் கண்டுபிடித்துக் கொன்ற பிறகுதான் மோகனுக்கு அமைதி பிறக்கிறது. நாகேஷின் நடிப்பிலும் அதற்குப் பிறகுதான் சோக மெருகு ஏறுகிறது.

முத்துராமன், ஏ. வி. எம். ராஜன் இருவரும் நன்றாய் நடித்திருக்கின்றனர்.

கதை, வசனம், டைரக்ஷன் ஆகிய பொறுப்புக்களை ஏற்றிருக்கும் கே. பாலசந்தர் யாவரும் பாராட்டும்படி தம் பணியை நிறைவேற்றியிருக்கிறார். ஆனால், படம் பல இடங்களில் நாடகமேடையை நினைவுபடுத்துவது பெரிய குறை. மேஜர் கொலைகாரனிடம் பாடுவது 'போர்' அடிக்கிறது. அதைத் தவிர்த்திருக்கலாம். ''கல்யாணச் சாப்பாடு போடவா'' என்ற பாட்டு நாகேஷின் அபிநயங்களுடன் நன்றாயிருக்கிறது. மற்ற பாடல்கள் நினைவில் தங்காவிட்டாலும் படத்தின் 'டெம்போ'வைக் குறைக்க உதவுகின்றன!

''மேஜர் சந்திரகாந்த்'' ஏவி. எம். மின் தயாரிப்பு என்று பெருமைப்பட்டுக்கொள்ளும் விதத்தில் சிறப்பாக அமைந்திருக்கிறது.

டோக்கியோவில் காதல்



பொதுவாகவே இப்பொழுதெல்லாம் வெளியாகும் ஹிந்திப் படங்கள் ஒரே மாதிரிக் கதைகளைக் கொண்டவைகளாக இருக்கின்றன. ஒரு காதலி, அவளைச் சுற்றி இரு காதலர்கள். இருவரில் ஒருவன் காதலன்; மற்றவன் வில்லன். இருவருக்குமிடையே மோதல். ஒரு சில இரட்டைப் பாட்டுக்கள் - இவற்றுக்கு மெருகூட்டச் சில எழில்மிகு இயற்கைக் காட்சிகள் - அதற்கும் பெருமை சேர்க்க வர்ணக் கலவைகள்.

இந்தக் கோட்பாட்டில் வெளிவந்த படங்கள்: மேரேஸனம், ஸாவன் கி கடா, நீந்த் ஹமாரி க்வாப் தும்ஹாரே. இந்த வரிசையில் சேர்க்கவேண்டிய படம்தான் 'லவ் இன் டோக்கியோ'.

நடிகர்கள் மாறுபட்டாலும் நடிப்பில் உயிர் இல்லை. 'போர்' அடிக்கிறது படம் என்றே கூசாமல் கூறத் தோன்றுகிறது. ஆனால் 'பார்முலா டைப்' கதைகளை எடுக்கும் படாதிபதிகள் ஒரு தந்திரத்தைக் கையாளுகிறார்கள். கதைகளை மாற்றியமைக்காவிட்டாலும் இயற்கைச் சூழலை மாற்றிப் படம் பிடித்துக் காட்டுவதில் அதிகக் கவனம் செலுத்துகிறார்கள்.

இப்படத்தில் டோக்கியோக் காட்சிகள் கண்ணுக்கு விருந்தளிக்கின்றன. ஒளிப்பதிவு சிறந்து விளங்குகிறது. வண்ணக் கலவை வியப்பில் ஆழ்த்துகிறது. ஆனால் கதை...? தலைவலி மாத்திரையைத் தேடச் சொல்கிறது!

பறக்கும் பாவை

சர்க்கஸில் 'கரணம் தப்பினால் மரணம்' என்பார்கள். வீட்டைவிட இந்த சர்க்கஸே மேல் என்று ஓடி வந்து விடுகிறாள், கதாநாயகி பணக்காரப் பெண் சரோஜா. கதாநாயகன் எம். ஜி. ஆர். அவளைத் தேடிக் கண்டு பிடிக்கும் சாக்கில் சர்க்கஸில் வந்து சேருகிறான். ஒரே சர்க்கஸ் விளையாட்டு, ஆட்டம் பாட்டமெல்லாம்! பறக்கும் பாவை சரோஜா தேவியை அப்புறமாவது சும்மா விட்டார்களா? அவளைக் கொல்லப் பல சதிகள்! கதாநாயகனையும் கூடத்தான். கடைசியில் சரோஜாதேவியைக் கொல்லச் சதி செய்தவள் ஒரு பெண் என்பது கதையின் முடிச்சு. கதாநாயகன் எம். ஜி. ஆரைக் காதலித்த நர்ஸ் தான் அவள். காஞ்சனா நர்ஸாக மட்டும் வரவில்லை; 'வில்லி'யாகவே மாறி விடுகிறாள்!

ஆடிப் பாடிக் களிக்கச் சர்க்கஸைவிட வேறு ஒரு களம் கிட்டுமா? நேஷனல் சர்க்கஸைப் 'பறக்கும் பாவை'யில் பயன்படுத்திக் கொண்டுள்ளனர். கதை இண்டர்வெல்லுக்குப் பிறகு கொஞ்சம் விறுவிறுப்பு பெறுகிறது.

சர்க்கஸ் பார்க்காதவர்களுக்கு அடிக்கடி வரும் பார் விளையாட்டுக்கள் கண்கொள்ளாக் காட்சிதான். ஆனால் பார்த்தவர்களுக்கு? கொஞ்சம் அலுப்புத் தட்டத்தான் செய்கிறது.

சர்க்கஸ் முதலாளி தங்கவேல், கோமாளி சந்திரபாபு, பயில்வான் மகள் மனோரமா ஆகியோர் இந்தச் சீரியஸ் கதையில் நகைச்சுவையைப் பரிமாறுகின்றனர். மிருகங்களைப் பழக்கும் விஜயனாக வரும் அசோகனுக்கு வேஷப் பொருத்தம் ஜோர்!

ஈஸ்ட்மென் வர்ணத்தில் எடுக்கப்பட்டுள்ள இந்தப் படத்தில் சர்க்கஸ் காட்சிகள் நன்கு படமாக்கப்பட்டுள்ளன. 'பறக்கும் பாவை' ஜனரஞ்சகமான படம். சர்க்கஸ் காட்சி பார்க்காதவர்களுக்கு இந்தப் படம் ஒரே கொண்டாட்டம்தான்!






செல்வம்

எதற்கெடுத்தாலும் சோதிடம் பார்க்கும் பழைய காலத்து அம்மாவை மன்னித்து விடலாம்; ஆனால் அயல் நாடு சென்று உயர் கல்வி பயின்று திரும்பும் மகனும் சோதிடத்தை நம்பிக்கொண்டு கூத்தடிப்பதை மன்னிக்க முடியுமா? சரி, அவனையும் மன்னித்துவிடுவோம். அவனோடு சேர்ந்து கொண்டு அவன் இழுத்த இழுப்புக்கெல்லாம் கூத்தாடும் ஒரு டாக்டரை மன்னிக்கவே முடியாது. இத்தனைக்கும் அவர் ஒரு 'ஹார்ட் ஸ்பெஷலிஸ்ட்!' முதலில் அம்மாவின் மூட நம்பிக்கைகளைக் கண்டு வேதனைப்படும் செல்வம், சோதிடத்துக்கும், அம்மாவின் எண்ணத்துக்கும் மாறாக வள்ளியை மணந்து கொள்ளுகிறான். அதுவும் எப்படி? முருகன் ஆலயத்தில், வள்ளி கல்யாணத்துக்கு என்று ஏற்பாடு செய்திருந்த திருமாங்கல்யத்தைத் துணிந்து எடுத்து வள்ளியின் கழுத்தில் கட்டி விடுகிறான்; அதிலிருந்து சோதிடர்களின் வாக்குப்படி தனக்கு மரணம் சம்பவித்துவிடுமோ என்று பயந்து நடுங்குகிறான்.

செல்வமாக வருபவர் பத்மஸ்ரீ சிவாஜி கணேசன். ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் நன்றாக நடித்திருக்கிறார். வள்ளியோடு மகிழ்ந்து விளையாடும்போதும் பிறகு சோதிடம் பலித்துவிடுமோ என்று துடித்துத் தவிக்கும்போதும் அவர் நடிப்பு தனித்தன்மை பெற்று விடுகிறது. கே. ஆர். விஜயா பத்மஸ்ரீ கணேசனுக்கு எந்த விதத்திலும் சளைக்காமல் ஈடு கொடுத்து நடித்திருக்கிறார்.

ரங்கா ராவ் டாக்டராகவும், ஒரு காட்சியில் யமனாகவும் தோன்றுகிறார். ஒரே கேலிக் கூத்துத்தான்!

திரைக் கதை, வசனம், டைரக்ஷன் எல்லாம் கோபாலகிருஷ்ணன் ஏற்றிருக்கிறார். திரைக் கதையில் சாரமில்லை; வசனத்தில் வளம் உண்டு; டைரக்ஷனில் புதுமை யில்லை. ஏழு பாடல்களும் நம்மைப் பாடாய்ப் படுத்துகின்றன. 'லைட் காமெடி'யை நினைத்துக் கொண்டு தயாரிக்கப்பட்டிருக்கும் படம் ''செல்வம்!'' அவலை நினைத்துக் கொண்டு உரலை இடித்திருக்கிறார்கள்.




சென்னையிலிருந்து இருபத்து இரண்டு மைல்கள் தூரத்தில் உள்ள புதுப்பாக்கத்தில், டிராக்டர் ஸ்தாபனத்தின் பயிற்சிப் பள்ளிக்கான அஸ்திவாரக் கல்லை ஸ்ரீ அனந்தராமகிருஷ்ணன் அவர்கள் இட்டார். அருகே அமால்கமேஷன்ஸ் தலைவர் ஸ்ரீ எம்.வி. வேங்கட்ராமன் அவர்களையும், டைரக்டர் ஏ. சிவசைலம் அவர்களையும் காணலாம்.


அரசாங்கத்தில் ஐ.சி.எஸ்., ஐ. ஏ. எஸ். வர்க்கத்தைப் போன்றவர்கள், தொழில் ஸ்தாபனங்களின் உயர் நிர்வாகஸ்தர்கள். செயல் திறனையே பெரிதாக மதிப்பவர்கள்; பகட்டையோ, ஆடம்பரத்தையோ, பிரசா

இணைந்த நிறுவனங்களின் இணையற்ற தலைவர்

பல தொழில்கள் ஒன்றாக இணைந்து ஒரே உயர் நிர்வாகத்தின் கீழ் இயங்கும் நவீனகால பெரும் தொழில் ஸ்தாபனங்களின் உயர் நிர்வாகஸ்தர்களுடைய யோக்ய தாம்சங்கள் பற்றி ஒரு சமயம் தொழிலதிபர்களிடையே ஒரு கருத்தரங்கு நடைபெற்றது. தொழில் அமைப்பு அநுபவம், இயங்குமுறைகள், அறிவு, நிர்வாகத் திறமை, மனிதர்களுடன் பழகும் தன்மை, ஊழியர்களையும், சகாக்களையும் சுமுகமாக நடத்திச் செல்லும் பண்பு, உறுதி, கண்டிப்பு, இரக்கம், சாமர்த்தியம், சாதுரியம் இவை எல்லாம் கலந்து சமயத்துக்குத்தக்கவாறு எந்த நிலைமையையும் சமாளிக்கும் திறமை, தொழில் அபிவிருத்தியடைவதிலேயே லயித்துப் போன உணர்வு — இப்படிப் பல அம்சங்களும் வாய்க்கப்பெற்றவராக இருந்தால்தான் முதல்தரமான உயர் நிர்வாகஸ்தராக இருக்க முடியும் என்று ஏகோபித்து அபிப்பிராயம் சொன்னார்கள். அநுபவம் முதிர்ந்த ஒரு தொழிலதிபர் மட்டும் இந்த நீண்ட ஜாபிதாவைப் பார்த்துத் திருப்திப்படவில்லை. இவைகளுக்கெல்லாம் அதிகமாக, இவற்றைவிட முக்கியமாக மற்றொரு அம்சமும் இருக்க வேண்டும்—அது தான் ஸ்தாபனத்தினிடம் விசுவாசம், மற்றவர்களின் நம்பிக்கைக்கு இருப்பிடமாக விளங்கும் தனித் தன்மை; இது இல்லையென்றால், மற்றத் திறமைகள் நிரம்பியிருந்தாலும் உயர் அந்தஸ்தில் ஏதோ குறை இருப்பதாகவே தோன்றும்.




'மெயில்' பத்திரிகையின் ரோட்டரி இயந்திரம்





ரத்தையோ விரும்பாதவர்கள். அமைதியாக, உறுதியாக, லட்சியத்திலேயே குறியாக, பின்நின்று செயலாற்றும் திறமை உடையவர்கள் இவர்கள். இதனாலேயே இவர்களைப் பற்றி வெளி உலகம் அதிகமாக அறியாது. அக் காரணத்துக்காகவே அவர்களைப்பற்றிப் பொதுமக்கள் தெரிந்து கொள்ள வேண்டும். தொழில் ஆரம்பிப்போருக்கு எவ்வளவுபெருமையோ, அவ்வளவு பெருமை அதைத் திறம் படநிர்வகிப்பவர்களுக்கும் உண்டு.

இந்த வகையில் நம்மிடையே முதல் வரிசையில், முதலில் நிற்பவர் சிம்சன் கம்பெனிகளின் தலைவர் ஸ்ரீ எம். வி. வெங்கடராமன். இன்று அவர் இந்த மாபெரும் ஸ்தாபனங்களின் உயர் தலைவ



சென்னை மவுண்ட்ரோட்டிலுள்ள ஹிக்கிம்பாதம்ஸ் புத்தக சாலைக்குத் திரு காமராஜ் வந்திருந்து புத்தகங்களைப் பார்வையிடுகிறார்.






அமால்கமேஷன்ஸ் கம்பெனித் தலைவர் ஸ்ரீ எம். வி. வெங்கட்ராமன். (கீழே) டிராக்டர் தொழிற்சாலையின் பிரம்மாண்டமான கூடத்தில் அதிமுக்கியமான இயந்திர பாகங்கள் தயாராகின்றன.



ராக விளங்குகிறார். ஆனால் சுமார் முப்பது ஆண்டுகளுக்கு முன் சிம்ஸன் கம்பெனியில் சாதாரணப் பணியாளராக திரு எம். வி. வேங்கடராமன் தமது தொழில் துறைப் பயணத்தைத் தொடங்கியபோது, தொழில்கள் இயங்கிக் கொண்டிருந்த சூழ்நிலைகளே வேறு. தொழில் வளர்ச்சியின் வேகமும் மந்த கதியிலேதான் சென்று கொண்டிருந்தது.



செம்பியத்திலுள்ள ஷார்ட்லோ தொழிற்சாலையில் புளூபிரிண்ட் வரிவடிவங்கள் தயாராகின்றன.

கணக்காயர் துறையில் தான் திரு எம். வி. வேங்கடராமன் பயிற்சி பெற்றிருந்தார் என்பதை விசேஷமாகக் குறிப்பிட வேண்டும். ஏனெனில் தொழில் ஸ்தாபனங்களில் முதன்மை ஸ்தானத்துக்கு உயருபவர்களில் மூன்று வகைகள் உண்டு. தொழில்களை ஆரம்பிப்பது, தொழில்களை வளர்ப்பது, இவற்றை நிர்வகிப்பது என்பதையே தொழிலாகக் கொண்டவர்கள் ஒருவகை. இவர்களைத்தான் சம்பிரதாயமான முறைத் தொழிலதிபர்கள் என்று கொள்ளலாம். இயந்திர நுட்பங்களிலும் பொறி இயலிலும் நிபுணர்களாக இருப்பவர்கள் தமது விசேஷ அறிவினால் புதிய கண்டுபிடிப்புகள், புதிய முறைகள் தோற்றுவித்து, அவற்றை அபிவிருத்திசெய்து உயர்வார்கள். இது இரண்டாவது வகை. மேலைநாடுகளில் இம்மாதிரி பொறிஇயல் வல்லுனர்களின் தொழில் ஸ்தாபனங்கள் உலகப் பிரசித்தி பெற்று இன்னும் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன. பிலிப்ஸ், சீமன்ஸ், மார்க்கோனி, கிரப்ஸ் போன்ற ஸ்தாபனங்கள் இந்த வகையைச் சேர்ந்தவை. கம்பெனிக் கணக்குகள், நிதி நிர்வாகம், உற்பத்தித் திறன், ஆராய்ச்சிகள் முதலிய நிர்வாக அம்சங்களில் தனி அநுபவம் பெற்று, அவற்றைக் கொண்டே படிப்படியாக உயர் ஸ்தானத்துக்கு வந்தவர்கள் மூன்றாவது வகை. நிதி நிர்வாகத்தில் அசாதாரணத் திறமையுள்ளவர்கள் தொழில் தலைவர்களாக உயர முடியும், வெற்றிகரமாக நடத்த முடியும் என்பதற்குச் சென்னை மாநிலத்திலேயே பல சான்றுகள் இருக்கின்றன. காலஞ்சென்ற எஸ். அனந்தராமகிருஷ்ணன் அவர்களே இதற்கு ஒரு சிறந்த உதாரணம். அவரும் கணக்காயராகத்தான் வாழ்க்கையைத் தொடங்கினார். திரு எம். வி. வேங்கடராமனும் அதே முறையில்தான் ஆரம்பித்தார். இவ்விருவருடைய தொழில் அநுபவமும் ஒரே வகையில் அமைந்திருந்ததுடன், ஒரே ஸ்தாபனத்திலும் நெருக்கமாக இணைந்திருந்தது விசேஷம்; ரயில் பாதையின் இரண்டு தண்டவாளங்களைப் போல.

கிப்ரேஸர் அண்டு ராஸ் என்ற பிரபல கணக்காயர்கள் ஸ்தாபனத்தில்தான் திரு எம். வி. வேங்கடராமன் தமது வாழ்க்கையைத் தொடங்கினார், திரு அனந்தராமகிருஷ்ணனைப் போலவே. திரு அனந்தராமகிருஷ்ணன் சீனியராகவும் திரு வேங்கடராமன் ஜூனியராகவும் இருந்தார்கள் என்று சொன்னாலும் தவறில்லை. இதை விட்டு திரு அனந்தராமகிருஷ்ணன் சிம்ஸன் கம்பெனிக்குச் சென்றபோது, சிறிது காலத்துக்குப் பின் திரு வேங்கடராமனும் அதே ஸ்தாபனத்துக்குச் சென்றார். அப்போதிருந்த சிம்ஸன் கம்பெனி இப்போதுள்ளதைப் போல் விரிவானதல்ல. கோச்சு வண்டிகள் தயாரிப்பதிலும், பஸ் கட்டுவதிலும் தங்கள் கவனத்தைச் செலுத்தி இத்துறையில் பிரசித்தி யடைந்திருந்தனர். இதனின்று பெருகியதுதான் எஸ். ஆர். வி. எஸ். என்ற போக்குவரத்துத் தொழில். காலப் போக்கில் இதனுடைய கிளைகள் இதர இடங்களுக்கும் பரவின. சிம்ஸன் கம்பெனியைப் போல் அடிஸன் கம்பெனியும் பல ஆண்டுகளாக இயங்கிக் கொண்டிருந்த தனிக் கம்பெனியென்றாலும் இவ்விரண்டுக்குமிடையில் நெருங்கிய தொடர்பு இருந்து வந்தது. இதனால் ஒரு கம்பெனியின் நிர்வாகத்தில் பங்கு கொண்டபோது அத்துடன் சம்பந்தப்பட்ட மற்ற கம்பெனிகளின் நிர்வாகத்திலும் அக்கறை கொள்ள நேர்ந்தது. இப்படியாக வளர்ந்ததுதான் சிம்ஸன் கம்பெனிகள் எல்லாம். ஒன்றிலிருந்து ஒன்றாக, ஒரு தொழிலுக்குச் சம்பந்தப்பட்ட அதைச் சேர்ந்த மற்றொரு தொழிலாக, ஆரம்பத்தில் மூன்று நான்கு கம்பெனிகளாக மட்டும் இருந்தது. இப்போது 24 தனித் தனி கம்பெனிகளாக விரிவடைந்து விட்டன. ஆரம்ப நாட்களில் செய்து வந்த தொழிலும் படிப்படியாகப் பெருகி, விரிவடைந்து, புதுப் புதுத் துறைகளுக்கும் படர்ந்தன. இப்போது இந்தப் பல்வேறு கம்பெனிகள் செய்யும் தொழில்களைக் கேட்டால் பிரமிப்புக்கூட ஏற்படும். மோட்டார்கள் இயங்குவதற்கும், தொழிற்சாலைகளிலும் தேவைப்படும் டீசல் என்ஜின்கள், விவசாயப் பண்ணைகளுக்கான யந்திரக்

யூனிஸெஃப் என்றால் என்ன? 'ஐக்கிய நாடுகள் சபையின் சர்வதேசக் குழந்தைகளுக்கான அவசரகால நிதி' என்று அப்பெயருக்கு வியாக்கியானம் தரலாம். உண்மையில் அது இன்று உலகில நடக்கும் மிகப் பெரிய போர் ஆகும். உலகம் முழுவதிலுமுள்ள சிறுவர், சிறுமியரின், அவர்களுடைய தாய்மார்களின் நலனுக்காகவும் அவர்களுடைய தேக ஆரோக்கியத்துக்காகவும் நடக்கும் மாபெரும் போர்.

ஆனால் யூனிஸெஃப் என்ற வார்த்தை பலருக்கும் பலவித அர்த்தங்களில் தொனிக்கிறது என்று நான் கண்டேன். ஹாங்காங்கிலுள்ள பல குழந்தைகளுக்கு யூனிஸெஃப் என்றால் பால் என்றுதான் பொருள் படும். ஓரிடத்தில் ஏழைக் குழந்தைகளுக்கு நான் பால் விநியோகம் செய்தபோது ஒரு குழந்தை குவளையை நீட்டியபடியே, சப்புக்கொட்டிக் கொண்டே, ''இன்னும் கொஞ்சம் யூனிஸெஃப் கிடைக்குமா?'' என்று கேட்டது.

-- டானிகே

கருவிகள், உருக்கு, வார்ப்படப் பொருள்கள், தொழிற் பட்டறைகளுக்குத் தேவைப்படும் உபகரணங்கள், மோட்டார் வண்டிகளுக்கு அவசியமான பல உறுப்புகள், வர்ணச் சாமான்கள், தேயிலே, காப்பித் தோட்டத் தொழில், பத்திரிகைத் தொழில், அச்சகம், புத்தக வெளியீடு, விநியோகம், — இப்படிப் பலரகமான உற்பத்தித் தொழில்கள் இங்கே நடைபெறுகின்றன. ஒவ்வொன்றுக்கும் தனியாகக் கம்பெனிகள் செயல்பட்டாலும் எல்லாம் அமால்கமேஷன்ஸ் கம்பெனியின் ஒரு குடையின் கீழேயே நிர்வகிக்கப்பட்டு வருகின்றன. தனித்தியங்கிய இருபத்து நான்கு கம்பெனிகளையும் ஒரு குடைக்கீழ், ஒரு நிர்வாகத்தின் கீழ் இணைத்து உறுதியாக்கி வைத்தது தான் எஸ். அனந்தராமகிருஷ்ணன் அவர்கள் செய்த மாபெரும் காரியம். இதற்கு உறுதுணையாக, ஆரம்பத்திலிருந்து இறுதி நாள் வரையில் ஒவ்வொரு கட்டத்திலும் அவரது வலது கையென விளங்கியவர் திரு எம். வி. வேங்கடராமன். விரிவடைந்து கொண்டு சென்ற பல தொழில்களுக்கு வேண்டிய நிதி வசதிகளைத் தேடிக் கொண்டு, எந்தத் தொழிலுக்கும் எந்தச் சமயத்திலும் பணத் தட்டு ஏற்படாமல் சென்ற முப்பதாண்டுகளாக நிர்வாகத்தை நடத்திச் சென்றதில் பெரும் பங்கு திரு எம். வி. வேங்கடராமனுடையது.

'பண முடை, மூலதனம் கிடைக்கவில்லை, அபிவிருத்தி வேலை தடைப்பட்டு விட்டது, விஸ்தரிப்புச் சுணங்கிப் போயிற்று, யாரிடம் கடன் கேட்கலாம்' என்ற ஓலங்களை நாலா பக்கங்களிலிருந்தும் இப்போது கேட்கிறோம். சிம்சன் குரூப் கம்பெனிகளைப் பொறுத்த மட்டில், ஆரம்ப காலத்திலிருந்து இன்று வரையில் இம்மாதிரி தட்டுப்பாடுகள் ஏற்படாது ஓர் உயர் நிர்வாக நிபுணர் முப்பதாண்டுகளாகக் கவனித்துக் கொண்டு வருகிறார் என்றால் அவருடைய திறமையையும் சாமர்த்தியத்தையும் வியந்து பாராட்டாமல் இருக்க முடியாது. இந்தத் திறமையான நிர்வாகத்தினால் 14,000 தொழிலாளர் குடும்பங்கள் சுக வாழ்வு நடத்திக் கொண்டு வருகின்றன என்பதைக் கவனத்தில் கொண்டு பார்த்தால் கூரை மேட்டிலிருந்து கூவும் சோஷலிஸம் அமைதியாக, ஆடம்பரமின்றிக் கண் முன்னே செயல்பட்டுக் கொண்டிருப்பது தெரியும். நிர்வாகம் சீர்கெட்டால் என்ன விளைவுகள் ஏற்படும் என்பதைச் சர்க்கார் தொழிலகங்களிலும், கூட்டுறவு முறையில் இயங்கிக் கொண்டிருக்கும் பல ஸ்தாபனங்களிலும், ஏன், அரசாங்க அலுவலகங்களிலும் கூட நாம் பார்த்துக் கொண்டிருக்கிறோம். இம்மாதிரி விளைவுகள் ஒன்றும் ஏற்படாமல், அமைதியாக 14,000 குடும்பங்கள் கொண்ட ஒரு மாபெரும் சமூகம் சீராக வாழ்ந்து கொண்டிருக்க வகை செய்துவரும் நிர்வாகியின் சிறப்பை நினைத்து நினைத்துத் தான் பெருமிதம் கொள்ள வேண்டும். வெய்யிலில் இருந்தால்தான் நிழலின் அருமை தெரியும் என்று சொல்வது வழக்கம். வெய்யிலின் கொடுமை தெரியாமலே நிழலிலேயே வைத்திருக்கும் திறமை அதைவிட எவ்வளவு உயர்ந்தது! எஸ். அனந்தராமகிருஷ்ணன் வகுத்துக் கொடுத்த பாதையில், அவர் ஏற்படுத்தித் தந்த லட்சியங்களில் கருத்து ஒன்றி, அவர் விட்டுச் சென்ற பணியை அதே நெறி முறையில், அதே உற்சாகத்துடனும், அதே உயர் பண்புடனும், மனிதாபிமானத்துடனும் திரு எம். வி. வேங்கடராமன் திறம்படச் செய்து வருகிறார் என்பது பாராட்டுதற் குரியது. அனந்தராமகிருஷ்ணனிடம் அவருக்கு இருந்த விசுவாசத்தையும், தம்மிடம் அவர் வைத்திருந்த நம்பிக்கைக்குத் தாம் முற்றிலும் தகுதியுள்ளவர்தான் என்பதையும் திரு வேங்கடராமனின் வாழ்க்கை பிரதிபலிக்கிறது. இதுவே அவருடைய நிர்வாகத்துக்குக் கொடுக்க வேண்டிய நற்சாட்சி.

சுமார் இருபது ஆண்டுகளுக்கு முன் சிம்ஸன் கம்பெனியின் டைரக்டராக உயர்ந்த திரு எம். வி. வேங்கடராமன் 1964ல் திரு அனந்தராமகிருஷ்ணன் காலமான பின் அமால்கமேஷன் கம்பெனியின் உயர் தலைவராக அவர் ஸ்தானத்தில் பணியாற்றி வருகிறார்.

தமக்குள்ள திறமையாலும் செல்வாக்கினாலும் உயர்ந்தவர், மாசுபடாத எளிமைக் குணமும், மனிதத் தன்மையும் மிக்கவர் திரு எம். வி. வேங்கடராமன். குழந்தைகளுடன் பழகுவது போல, தெரிந்தவர், தெரியாதவர் என்ற பாகுபாடின்றி, எல்லோருடனும் சுமுகமாகப் பழகும் பண்புள்ளவர். அவருடைய தெய்வ பக்தி ஆழ்ந்தது! ஆடம்பரமில்லாதது. ராமபிரானிடம் அளவு கடந்த பக்தியுள்ள திரு வேங்கடராமன் ஸ்ரீ ராமநவமி உற்சவத்தை விமரிசையாக நடத்தி மகிழ்வதில் சிரத்தை உள்ளவர். கர்நாடக சங்கீதத்தில் அவருக்கு அலாதி ஆசை. இதிலேதான் அவர் அமைதி காணுகிறார். அலுவலகக் காரியங்கள் தவிர, இதர விருப்புகள் பாட்டுக் கேட்பது, தருமப் பிரசாரங்களுக்கு ஆதரவு தருவது இவ்விரண்டுமே எனலாம்.

திரு எம். வி. வேங்கடராமனுடைய அறுபதாவது பிறந்த தினம் டிசம்பர் 8ம் தேதி வருகிறது. அவர் பல்லாண்டு வாழப் பிரார்த்திக்கிறோம். அவருடைய திருவுருவப் படத்தை இவ்விதழ் மேல் அட்டையில் வெளியிடுவதில் மகிழ்ச்சி அடைகிறோம்.

— எம். எஸ். சிவஸ்வாமி



அந்தணர்கள், 'விசாரசருமன் மாடுகளை மேய்த்து வருகிறேன் என்று கூறிப் பசுக்களைக் கொண்டுபோய்ப் பாலைக் கறந்து வீணாக்குகின்றானே. அவன் தந்தையிடம் இதைக் கூற வேண்டும். எச்சதத்தனை அழைத்து வாருங்கள்' என்றனர்.

எச்சதத்தன் ஆங்கு வந்து சேர்ந்தான். அவனிடம் விஷயம் தெரிவிக்கப்பட்டது.

அன்றிரவு நீங்கிக் கதிரவன் உதயமானான். விசாரசருமர் வழக்கம்போல் பசுக்களை ஓட்டிக் கொண்டு சென்றார். அவருக்குப் பின் எச்சதத்தன் மறைந்து சென்றான்.

விசாரசருமர் பசுக்களை மண்ணியாற்றின் மருங்கில் கொண்டு சென்றார். எச்சதத்தன் அங்கு ஒரு குரா மரத்தின் மீது ஏறி ஒளிந்து கொண்டான். விசாரசருமர் வழக்கம் போல் பாற் குடங்களை எடுத்து அபிஷேகம் புரிந்தார். அதைக் கண்ட எச்ச தத்தன் பெரிதும் சீற்றம் கொண்டான். விசாரசருமரின் அன்புத் திறத்தை அறியாத அவன் மரத்தினின்றும் இறங்கி மகனின் முதுகில் கைத்தடியால் ஓங்கி அடித்தான். விசாரசருமர் பொறி புலன்களை ஒடுக்கி இறைவன் திருவடிப் பூசனையில் அழுந்தியிருந்தாராதலின் எச்சதத்தன் முதுகில் அடித்ததை அறிந்தாரில்லை. பலகாலும் அவன் அடித்ததையும் திட்டியதையும் அறியாத விசாரசருமர் பாற்குடங்களை எடுத்துப் பரமனுக்கு அபிஷேகம் புரிந்து வந்தார். அதனால் மிகவும் சினந்த அவரது தந்தை திருமஞ்சனப் பாற்குடங்களைக் காலால் உருட்டித் தள்ளி விட்டான்.

இறைவரிடம் ஒன்றுபட்டிருந்த சருமர் வழிபாட்டுக்குத் தடை நேர்ந்ததை உணர்ந்தார். நிந்தை மிக்க இந்தத் தீமையைச் செய்தது தந்தையென அறிந்தார். ஆனால், சிவ அபராதம் செய்த அவரைத் தந்தை என்று கருதவில்லை. 'அவரது தாள்கள் சிந்துதற்குரியன' என்று கோலை எடுத்தார். சிவமயமாக நிற்கும் அவருடைய சங்கல்பம் சிவ சங்கல்பமன்றோ? அதனால் அவர் கையில் எடுத்த கோல் மழு ஆயுதமாக மாறியது. அதனால் பாலைச் சிந்திய தந்தையின் காலை வெட்டினார். எச்சதத்தன் அப்படியே விழுந்து மாண்டான். பூசைக்கு இடையூறு நீங்கியது என்று மீண்டும் சிவபூசை செய்யத் தொடங்கினார் விசாரசருமர்.

பூத கணங்கள் புடைசூழப்
    புராண முனிவர் புத்தேளிர்
வேத மொழிகள் எடுத்தேத்த
    விமல மூர்த்தி திருவுள்ளம்
காதல்கூர் வெளிப்படலும்
    கண்டு தொழுது மணங்களித்துப்
பாத மலர்கள் மேல்விழுந்தார்
    பத்தி முதிர்ந்த பாலகனார்.

பூதகணங்கள் சூழ, இருடியரும் இமையவரும் வேத மொழிகளை ஓதித் துதிக்க விமல மூர்த்தி உமையம்மையாருடன் இடப தேவர் மீது எழுந்தருளிக் காட்சியளித்தார். பாலகர் மனமகிழ்ந்து பரமன் பாதமலர் மீது வீழ்ந்து வணங்கினார். திருவடியில் வீழ்ந்த பாலகரை நோக்கிய எம்பெருமான், "நம்பொருட்டுப் பெற்ற தந்தையை அழித்து விட்டாய். உன் உடம்பைப் பெற்ற தந்தை இறந்து விட்டான். இனி உனக்கு அப்பா நான்தான்" என்று கூறியருளித் தழுவிக்கொண்டு, முதுகைத் தடவி, உச்சி மோந்து மகிழ்ந்தார்.

'விசாரசருமர் பெற்ற தந்தையைக் கொன்றாரே, அந்தப் பாதகம் அவரைச் சாராதோ?' என்று கேட்கலாம். சாராது. காரணம், நல்வினை, தீவினை என்பது செயலால் இல்லை. பயனைப் பொறுத்தே செயல் அமைகிறது. ஓர் உயிருக்குத் தீங்கு ஏற்படும்போது ஒருவன் பொய் கூறினால் அதனால் அவனுக்குத் தீவினை ஏற்படாது. பகைவைக் கொல்வதற்காக வாளை எடுத்துக்



கொண்டு வந்த ஒருவன், ''பசு இவ் வழியே போயிற்று?'' என்று அருகில் நின்று கொண்டிருந்தவனிடம் கேட்டான். ''ஆம், பசு இவ்வழியே போயிற்று'' என்று நின்று கொண்டிருந்தவன் உண்மையைச் சொன்னான். இவ்வாறு உண்மையைச் சொன்னதால் அவன் தீவினையாளனாகிறான். ஆகவே, மெய், பொய் என்பது அதன் பயனைப் பொறுத்திருக்கிறது.

மன்மதன் சிவபெருமான் மீது மலரை எறிந்தான். ஆனால் எரிந்து சாம்பரானான். சாக்கியர் கல்லை எறிந்தார்; அருள் பெற்றார். காரணம் என்ன? மன்மதன் இறைவரை மயக்க வேண்டும் என்று கருதினான். நல்ல எண்ணத்துடன் மலரை எறியவில்லை. சாக்கியர் கல்லெறிந்த செயல் கொடிது எனினும் அவர் மனத்தில் வன்கண் இல்லை.

விசாரசருமர் தந்தையைக் கொன்றது சிவ மயமானது. அதனால் அது புண்ணியமாயிற்று. திருவருள் பெற்றார்.

அரனடிக் கன்பர் செய்யும்
பாவமும் அறம தாகும்
பரனடிக் கன்பி லாதார்
புண்ணியம் பாவ மாகும்
வரமுடைத் தக்கன் செய்த
பாதகம் நன்மை யாய்த்தே
—சிவஞான சித்தியார்

சிவபெருமானது திருக் கரத்தினால் தீண்டப்பெற்ற விசாரசருமர் மாயைக் கிடமான உடம்பு சிவ மயமாய்ப் பொங்கி எழுந்த திருவருளில் மூழ்கினார்; மாலயனாதி வானவரும் துதி செய்ய ஒளி மயமாக விளங்கினார்.

உலகம் அறியப் பிழை புரிந்த எச்ச தச்சன் சீலம் திகழும் திருச்சேய்ஞலூர்ப் பிள்ளையார் திருக்கரத்தின் கோல மழுவால் எறியுண்ட காரணத்தால் குற்றம் நீங்கிச் சுற்றமுடன் சிவலோகத்தை அடைந்தார்.

அண்டர் பிரானும் தொண்டர்தமக்
கதிப னாக்கி ''அனைத்துநாம்
உண்ட கலமும் உடுப்பனவும்
சூடுவனவும் உனக்காகச்
சண்டீ சனுமாம் பதந்தந்தோம்''
என்றங் கவர்பொற் றடமுடிக்குத்
துண்ட மதிசேர் சடைக் கொன்றை
மாலை வாங்கிச் சூட்டினார்.

தொண்டர் தமக்கு அதிபராகும் பதவியையும், சிவபெருமான் உண்ட பரிகலம், உடுக்கும் உடை, அணிகலன், சூடும் திருமாலை முதலியவற்றுக்கும் உரிமையாளராகும் சண்டீசர் பதத்தையும் விசாரசருமருக்குத் தாமே வழங்கினார் எம்பெருமான். தமது திருமுடி மீதிருந்த கொன்றை மலர் மாலையை இறைவர் விசார சருமருக்குச் சூட்டியருளினார்.

சண்டீசர் என்பது ஒரு பதவி; தாசில்தார், கலெக்டர் என்பது போல். உமாதேவியார், விநாயகர், முருகவேள், சூரியன், இவர்களுக்குத் தனித் தனியே சண்டீசர் உண்டு. அந்தச் சண்டீச பதவியில் உள்ளவர்கள் அந்தந்த மூர்த்திகளை வழிபடுவோர்க்கு அவ்வவ் வழிபாடுகளின் பயனை அளித்து அருள் புரிவார்கள்.



சண்டேசர் இடையறாத தியானத்துடன் இருப்பார். அதனால் இவரது கோயிலுக்கும் தீர்த்தத் தொட்டிக்கும் இடையில் போகக்கூடாது. சிவாலய வழிபாடும், சிவ பூசையும் சண்டேசர் வழிபாட்டுடன் முடிவு பெறுகின்றன. சிவதரிசனம் முடிந்த பின் சண்டேசர் திருக்கோயிலை யடைந்து வணங்கி, சிறிதே ஒலி வருமாறு கைகளைத் தட்டி நாம் பெற்ற சிவ நிர்மாலியங்களை அவரிடம் சேர்த்து, சிவதரிசனத்தின் பயனைத் தந்தருளுமாறு வேண்டிக் கொள்ள வேண்டும்.

32. சூலத்தான் தந்த சூலைநோய்

மக்களுக்குள்ளே எவ்வளவோ கருத்து வேறுபாடுகள் இருந்தபோதிலும், வாழ்க்கையில் உயர வேண்டும் என்பதில் யாருக்கும் கருத்து வேற்றுமை இருக்க முடியாது. செல்வத்தினாலோ, கல்வியினாலோ வாழ்க்கையில் உயர்ச்சிபெற்றுவிட முடியாது; நாவின் நலத்தினால்தான் உயர்வு பெற முடியும். நா நலம் இருந்தால் எல்லா நலன்களும் வரும்.

மரங்கட்கு ஓர் அரசு உண்டு: அது கற்பகம். விலங்குகட்கு அரசு சிங்கம். மலைகட்கு அரசு இமயம். நடிகர்கட்கு ராஜா நடராஜர். பட்சிகளுக்கு அரசு கருடன். தியாகிகளுக்கு அரசு தியாக ராஜா. தேவர்களுக்கு ராஜா இந்திரன். நாகங்களுக்கு ராஜா ஆதிசேடன், கஜங்களுக்கு ராஜா கஜராஜா. அது போல் நாவுக்களுக்கெல்லாம் அரசு ஒருவர் இருக்கின்றார். அவர்தான் சிவபெருமானது திருவருளின் திருவுருவாக வந்த நாவுக்கரசர். அவரது பாடல்கள் உள்ளத்தை உருக்கும். அவ்வளவு நைந்து அருள் பெற்றவர். நாவுக்கரசர் என்ற நாமத்தை இறைவரே அவருக்குச் சூட்டியருளினார்.

"நாவுக்கரசு என்றுலகேழினும் நின்
நன்னாமம் நயப்புற மன்னுக என்
றியாவர்க்கும் வியப்புற மஞ்சுறை
வானிடையே ஒரு வாய்மை
யெழுந்ததுவே"

நாவுக்கரசர் முற்பிறப்பில் வாகீச முனிவர். அவர் கைலாயத்தில் இருந்தார். அப்போது புஷ்பக விமானத்தில் அயோக்கியன் ஒருவன் ஊர்ந்து சென்றான். அந்த விமானம் கைலாய மலைக்கு நேரே சென்று தடைப்பட்டது.

"இது சிவபெருமான் இருக்கின்ற மலை. நீ வலமாகப் போ" என்று நந்தியெம்பெருமான் கூறினார். "குரங்கு மாதிரி முகத்தை வைத்துக் கொண்டு எனக்கு நீ புத்தி சொல்கிறாயா?" என்று கேட்டான் அந்த மூடன். "ஒரு குரங்கினால் உன் நாடு அழியக் கடவது" என்று சாபம் கொடுத்தார் நந்தியெம்பெருமான். அந்த மூடனே பிற்காலத்தில் ராவணன். நந்தியெம்பெருமானின் சாபத்தினால்தான் அநுமான் இலங்கைக்குள் நுழைந்தார். இல்லையேல் ஆயிரம் அநுமன்கள் வந்தாலும் இலங்கைக்குள் புக முடியுமா? "என்னுடைய பிரயாணத்துக்குக் குறுக்கே நிற்கின்ற இந்தக் கைலை மலையைப் பிடுங்கி எறிகிறேன்" என்று தனது இருபது கைகளாலும் அசைத்துப் பிடுங்கினான் அரக்கன். சுவாமி கால் பெருவிரல் நுனி நகத்தை இலேசாக அழுத்தினார். மலை அழுந்தியது; அதனடியே அகப்பட்ட அரக்கன் "ஆ!" என்று அலறினான்.

அவ்வாறு அலறியதால் அந்த அரக்கன் இராவணன் என்று பெயர் பெற்றான். ஆயிரம் ஆண்டுகள் அழுதான் இராவணன். அங்கு தவம் செய்து கொண்டிருந்த வாகீச முனிவர், "ஏன் அழுகிறாய்?" என்று கேட்டார். அவரிடம் நடந்ததைச் சொன்னான் இராவணன். "சுவாமி இசைப் பிரியர். இசைக்கு அவர் மனம் உருகுவார்" என்று கூறி அந்த மூடனுக்கு உதவி செய்தார் வாகீசர். இராவணனுக்குச் சங்கீதம் தெரியும். பாடினான். சுவாமி வெளிப்பட்டு வந்து ஐம்பது இலட்சம் ஆண்டுகள் வாழ்நாளும், சந்திரஹாஸம் என்னும் வாளும் கொடுத்தருளினார். அதிகமான வாழ்நாளைப் பெற்ற இராவணன் அளவற்ற தீங்குகள் புரிந்தான். தீங்கு செய்பவனுக்கு உதவி புரிந்ததால் வாகீசர் பூலோகத்துக்கு வந்தார்.

திருமுனைப்பாடி நாடு வளமை நிறைந்தது. நல்ல ஒழுக்கத்தில் நின்று நலஞ் சிறந்த மக்கள் வாழும் சிவத்தலங்கள் பல உடையது. அந்நாட்டில் பெண்ணை நதி பெருகி ஓடியது. ஒரு சிறந்த அருளாளர் அவதரிக்க வேண்டுமானால் அந்த நாடு நற்றவம் புரிந்திருக்க வேண்டும். சமய குரவர் நால்வருள் அப்பர், சுந்தரர் என்ற இரு







HEWLETT'S MIXTURE

குருமூர்த்திகள் அவதரித்த நாடு திருமுனைப்பாடி.

மறந்தருந் நெறிமாற மணிகண்டர்
வாய்மை நெறி
அறந்தருநா வுக்கரசும் ஆலாலசுந்தரரும்
பிறந்தருள உளதானல் நம்மளவோ?
பேருலகில்
சிறந்ததிரு முனைப்பாடித் திறம்பாடுஞ்
சீர்ப்பாடு

திருமுனைப்பாடி நாட்டின் பெருமையை யாரே உரைக்கவல்லார்? வில்லிப்புத்தூராரின் புதல்வர் பெயர் வரந்தருவார். இவர் சிறந்த புலவர். இவர் திருமுனைப்பாடி நாட்டினை வாய் குளிர, மனம் குளிர, கேட்ட காது குளிரப் பாடுகின்றார்.

பாவருந் தமிழால் பேர்பெறு பனுவல்
பாவலர் பாதி நாளிரவில்
மூவருநெருக்கி மொழிவிளக்கேற்றி
முகுந்தனைத் தொழுத நன்னாடு
தேவரு மறையும் இன்னமுங் காணச்
செஞ்சடைக் கடவுளைப்பாடி
யாவரு மதித்தோர் மூவரில் இருவர்
பிறந்தநா டிந்தநன்னாடு

முதல் மூன்றாழ்வார்களும் பரமனைக் கண்ட திருக்கோவலூரும் திருமுனைப்பாடி நாட்டிலேயே உள்ளது. இதையும் குறிக்கிறார் வரந்தருவார். இத்தகைய திருநாட்டில் திருவாமூர் என்பது தெய்வ நெறிச் சிவம் பெருக்கும் திருவுடையவூர். அவ்வூரிலே வேளாண் குலத்தினுள் குறுக்கையர் குடி என்ற பெருமையுடைய குடியிலே புகழனார் என்பவர் ஒருவர் இருந்தார். மனிதன் அரிதின் முயன்று பெற வேண்டிய புகழ் ஒன்றே. புகழொடு தோன்றுதார் தோன்றுதிருத்தலே நன்று என்பர் திருவள்ளுவர். புகழ் அனார் என்பதற்குப் புகழே ஓர் உருவெடுத்தாற் போன்றவர் என்னும் பொருள் படும். புகழனார் மனையறம் புரிந்து விருந்தோம்பும் மேன்மையினர். அவருடைய மனைவியார் பெயர் மாதினியார். மாது இனியார் — பெண்களிலே இனியவர் என்பது ஒரு பொருள். செந்தாமரையில் செந்திருமகள் தோன்றியது போல் அம்மையார் மணிவயிற்றிலே அழகிய பெண்மகவு தோன்றியது. அக்குழந்தைக்குத் திலகவதி என்று பேரிட்டு இனிது வளர்த்து வந்தார்கள்.

திலகவதி யார்பிறந்து சிலமுறையாண்
டகன்றதற்பின்
அலகில்கலைத் துறைதழைப்ப அருந்
தவத்தோர் நெறிவாழ
உலகில்வரும் இருள்நீக்கி ஒளிவிளங்கு
கதிர்போற்பின்
மலருமரு ணீக்கியார் வந்தவதா ரஞ்
செய்தார்.

திலகவதியார் பிறந்து சில ஆண்டுகள் சென்றன. கலைத் துறைகள் தழைக்க, தவம் வாழ, சைவம் ஓங்க, இருள் ஒழிக்கும் இளஞ்சூரியனைப் போல் மாதினியார் மணிவயிற்றில் அவதரித்தார் மருள்நீக்கியார். பெற்றோரும் உற்றாரும் உள்ளம் உவக்க மருள்நீக்கியார் இனிது வளர்ந்தார். மருள்நீக்கியார் தளர்நடை நடந்து, மழலை மொழிந்து இளங் குழந்தைப் பருவத்தைக் கடந்தார். அப்போது புகழனார் சௌளாதி கன்மங்களைச் செய்வித்துப் பொருளை வெள்ளம் போல் கொடுத்து, மருள் நீக்கியார்க்குக் கலை பயில்வித்தார். முன்னமே எல்லாக் கலைகளும் ஆன்ம அறிவில் அமைந்திருந்தபடியால் கற்பூர மலையில் தீப் பிடித்தது போல் மருள் நீக்கியார் சகல கலைகளிலும் வல்லுநராக ஆனார். (தொடரும்)

பலனைப் பொறுத்தவரையில் எல்லா தலைவலி மாத்திரைகளும் ஒன்றுதான்' என்பது உங்கள் எண்ணமானால்



உபயோகித்துப் பாருங்கள்



ஸ்க்விப் அளிக்கும்

அவேதன்®




அற்புத 'எபெப்' அடங்கிய டேப்லெட்டுகள்! இவை துரிதமான, பத்திரமான, நிச்சயமான நிவாரணத்தை அளிக்கின்றன!

'எபெப்' அடங்கிய அவேதன் டேப்லெட்டுகள் நிமிடக்கணக்கில் செயல்புரிந்து மணிக்கணக்காகப் பயனளிக்கின்றன.

தலைவலி, பல்வலி, முதுகுவலி, தசைநார் பிடிப்பு, ஜலதோஷம்-ப்ளூ, பெண்களின் அசௌகரியமான நாட்கள் மற்றும் இதர வலிகள், உபாதைகள் முதலியவற்றிற்கு—அவேதன்.

SQUIBB® ஸ்க்விப்® சாராபாய் கெமிகல்ஸ்

® இது இ. ஆர். ஸ்க்விப் அண்டு சன்ஸ் இன்கார்ப்பொரேடெட்டின் ரிஜிஸ்டர்ட் ட்ரேட்மார்க்காகும். காம்சந்த் ப்ரேம்சந்த் ப்ரைவேட் லிமிடெட் இதை உபயோகிக்க உரிமைபெற்றவர்கள்.



விடை

'கிஷன்'

"ஏறு! ஏறு! சீக்கிரம்!" என்று சத்தம் போட்டுக் கொண்டே ஒரு பரட்டைத் தலை இளைஞன் தன் மனைவியை நானிருந்த மூன்றும் வகுப்புப் பெட்டிக்குள் தள்ளிக் கொண்டிருந்தான். "இந்தா! என்ன ஆளு நீ! இப்படிப் புடிச்சுத் தள்ளறியே, அடிகிடி பட்டா என்ன ஆறது? இந்த வண்டி போனால் வேறே வண்டியே கிடையாதா?" என்று பதிலுக்குக் குரல் கொடுத்துக் கொண்டே உள்ளே வந்தாள் அவள்.

"இந்தா, பிடி இதை" என்று தன் கையிலிருந்த குழந்தையை எனக்கு எதிரில் அமர்ந்த அவன் மனைவியிடம்கொடுத்துவிட்டுத் தானும் அவள் பக்கத்தில் உட்கார்ந்துகொண்டான்.

வழக்கமாகத் திருப்பதியிலிருந்து வந்து சேரும் கூட்டம் வராததால் ரேணிகுண்டா பாசஞ்சர் களையிழந்து காணப்பட்டது. அவள் புடவையும், அவன் தலையும் தண்ணீரைக் கண்டு பல மாதங்கள் ஆகியிருக்கும் என்று பறைசாற்றின. மைக்கருப்பு என்பார்களே, அந்த நிறம்தான் இருவரும். ஆனால் அவள் கையிலிருந்த குழந்தையோ தொட்டால் கன்றிப் போகும் சிவப்பு நிறம். அழுக்குத் தலையும் பிசுக்கேறிய துணிமணிகளும், உரித்த கோழி போன்ற அவள் அலங்காரமும் அவள் மடியிலே கிடந்த குழந்தையும் உலகத்தின் ஏற்றத் தாழ்வுகளை ஒரே இடத்தில் சித்திரித்துக் காட்டுவது போல் இருந்தது.

அவசர அவசரமாக ஓடி வந்து நகர்ந்து விட்ட ரயிலில் தொத்திக் கொண்டார்கள் ஒரு நடுத்தர வயதான தம்பதிகள் மேல்மூச்சு கீழ்மூச்சு வாங்க. பூதாகாரமான உடலையுடைய அவ்விருவரையும் எனக்குத் தெரியும்.

வீடு கொள்ளாமல் வித விதமான கார்கள் வைத்துக் கொண்டிருக்கும் செட்டியார் இப்படி ரயிலில் அதுவும் மூன்றும் வகுப்பில் அவசரமாகப் பிரயாணம் செய்ய வேண்டிய காரணம் என்னவென்று அறிய எனக்கு ஆசை ஏற்பட்டது. செட்டியார் ஒவ்வோர் இடமாகப் பார்த்துக் கொண்டே வந்து கடைசியாக எனக்குப் பக்கத்தில்தான் உட்கார்ந்து கொண்டார். அவரை அடுத்து அவர் மனைவியும் உட்கார்ந்தாள்.

"ஏம்மா இப்படி ஓடற வண்டியிலே ஏறலாமா? கீழே விழுந்தா தலை போயிடுமே" என்று பரட்டைத் தலையனுக்கு அடுத்து உட்கார்ந்திருந்த கிழவி கேட்டாள்.

"அதைவிடத் தலை போகிற அவசரம்மா நாங்க போற காரியம்" என்றாள் செட்டியாரின் மனைவி.

விஷயத்தைத் தெரிந்துகொண்டு விட வேண்டும் என்ற ஆவல் உந்த, "என்ன திருப்பதி தரிசனமா?" என்று பேச்சை ஆரம்பித்தேன்.

"அடடே! தம்பி, நீயா?" என்று இருவருமே ஒரே குரலில் கேட்டார்கள். அவர்கள் குடும்பத்தில் ஒருவனாகப் பழகியவன் நான். அவர்கள் கேள்வியிலிருந்து இருவருமே என்னை முதலில் கவனிக்கவேயில்லை என்று தெரிந்துகொண்டதும் எனக்கு வேதனையாக இருந்தது. மூன்று வருடங்களாகக் கடிதப் போக்குவரத்தே இல்லாமல் நான் பம்பாயிலிருந்ததை நினைத்து அவர்கள் கோபித்துக் கொண்டிருக்கலாம் என்ற முடிவுக்கே வந்தேன்.

"ஆமாம், கார் வரவில்லையா?" என்று பேச்சைத் தொடங்கினேன்.

"ஹ–ம்... இல்லே" என்று சுரத்தில்லாமல் பதில் அளித்தார் செட்டியார். எனக்குச் 'சுருக்'கென்றது.

'கலகல'வென்று சிரிப்பும் பேச்சுமாக இருக்கும் செட்டியார் ஏன் இப்படி மாறினார்?

ஒருவேளை அவர் வியாபாரம் நொடித்து...! ஐயோ பாவம்...! ஆனால் அவர்கள் மேலிருந்த நகைகள், அவர்கள் நடை உடை பாவனை எதிலுமே மாற்றமில்லையே... ஏன்? விடை தெரியாத கேள்விகள் ஒன்றன்பின் ஒன்றாக என்னுள் எழுந்து மடிந்தன.

கையிலிருந்த பத்திரிகையில் எனக்குக் கவனமே செல்லவில்லை. செட்டியார் தம் பதியோ பேச்சை ஆரம்பிக்கும் வழியாகவும் தோன்றவில்லை. மெல்ல அவர்கள் என்ன செய்கிறார்கள் என்று பக்கவாட்டிலே கவனித்தேன். இருவருமே எதிரில் இருந்த பெண்ணின் மடியிலே கிடந்த குழந்தையை வைத்த கண் வாங்காது பார்த்துக்கொண்டிருந்தனர். அவர்கள் பேசாமலிருந்ததற்குக் காரணம் எதுவா யிருக்கும் என்று யூகித்த போது அவர்கள் மீது அனுதாபமே ஏற்பட்டது.

இருபது வருட இல்லறத்துக்குப் பின்பும் தங்களுக்குக் குழந்தை இல்லையே என்று அவர்கள் ஏங்கிய ஏக்கமும், நோற்ற நோன்புகளும், சுற்றிய க்ஷேத்திரங்களும், சாப்பிட்ட மருந்துகளும் கணக்கிலடங்கா. குப்பையிலே குண்டுமணி போல் கிடக்கும் அந்தக் குழந்தையைக் கண்டதும் அவர்கள் மனங்களில் எத்தகைய எண்ண அலைகள் எழுந்திருக்கும் என்று எண்ணியபோது எனக்குக் கழிவிரக்கம் ஏற்பட்டது.

''எங்கே திரும்ப? மதுரைக்குத்தானே?''

''ஹூம்... ஹூம்... அநேகமா அங்கே தான்?''

இந்தப் பதில் என்னைத் திணற அடித்தது. எங்கே போகிறோம் என்பது கூடத் தெரியாமல் இப்படி ஓடி வருவானேன்?

''என்னம்மா! செட்டியார் ஏன் ஒரு மாதிரியாக இருக்கிறார்? என்ன உடம்பு? நீங்ககூட மறந்திட்டீங்க போலிருக்கு. என்மேலே கோபமா?'' என்று அவர் மனைவியிடமே கேட்டேன்.

''இல்லியே'' என்ற ஒரே வார்த்தையில் பதில் சொல்லிவிட்டுப் பேசாமல் இருந்து விட்டார் அவர் மனைவி.

பேச்சை அதிகம் வளர்த்த விரும்பாதவர்களுடன் நமக்கென்ன வந்தது என்ற கோபத்துடன் நானாக இந்தப் பேச்சை ஆரம்பிக்கக் கூடாது என்ற முடிவுடன் ஒரு கதைப் புத்தகத்தைப் பிரித்து வைத்துக் கொண்டேன்.

கரித் தூளை வாரிப் பெட்டிக்குள் எறிந்து கொண்டே புகை வண்டி ஓடிக்கொண்டிருந்தது.

''உன் பேர் என்னம்மா?'' — செட்டியார் மனைவி பரட்டைத் தலையன் மனைவியிடம் குசலம் விசாரித்தாள். இந்தக் கேள்வியைக் கேட்க வெகு நேரம் ஒத்திகை நடத்தியிருப்பார்கள் என்று எனக்குத் தோன்றியது.

''அஞ்சலை''

''எந்த ஊரோ?''

''சேலம்'' அவளுக்காக அவன் பதில் சொன்னான்.

''சேலமா? என்ன வேலை?'' என்று செட்டியார் குறுக்கிட்டார்.

''நெசவுங்க.'' உடன் பதில் வந்தது.

''எங்கே போறீங்க?''

''மெட்ராஸ்.''

''அங்கே எங்கே இருக்கிறீங்க?''

''ஏழைங்களுக்கு ஒரு இடம் கேடா? ஏதோ ஒரு திண்ணை. கிடைச்சப்போ வேலை. கஞ்சி. அவ்வளவுதான்.''

''நெசவு வேலை என்ன ஆச்சு?''

''அதை ஏன் கேக்கறீங்க? அதிலே தாங்க முடியாத தொல்லைங்க. வேலைக்கு வெச்சிருந்தவன் அடிச்சு விரட்டிட்டான். அவனுக்குக் கட்டிவரல்லே. அவன் என்ன செய்வான்? வேறே இடத்திலே வேலை கிடைக்கல்லே. எத்தினி நாள் ஊரை நம்பிச் சோறு தண்ணி இல்லாமெ கிடக்க முடியும்? கிளம்பிட்டோம்.''

''அய்யோ, பாவம்!'' — கிழவி அங்கலாய்த்தாள்.

''பச்சைப் பிள்ளை வேறே'' என்று பரிதாபப்பட்டாள் செட்டியார் மனைவி.

''இது ஒண்ணு இல்லேன்னு யார் அழுதாங்க?'' அவள் அதைக் காப்பாற்ற இயலாத கொடுமைக்காகச் சொன்னாளா, உண்மையிலேயே அதை அவள் வெறுத்தாளா என்று புரியவில்லை.

''ஹா...ஹா, அப்படிச் சொல்லாதேம்மா ஒரு குழந்தை இல்லேன்னு நாங்க பட்டபாடு'' என்று சொல்லிக்கொண்டே வந்த செட்டியார் மனைவியின் தொண்டை தழுதழுத்தது.

''ஆமாங்கறேன். யாரோ சொன்னாங்கன்னு என் அத்தை பொண்ணு, பிள்ளை பிறக்கறதுக்கு வேண்டி உசிரோட ஒரு பிள்ளைப் பூச்சியையே முழுங்கிடிச்சே!'' என்று வியாக்கியானம் செய்தாள் கிழவி.

''ஆமாம். இந்தப் பாழாய்ப் போன தெய்வத்துக்கு எப்பவுமே ஓர வஞ்சனைதான். இருக்கிற இடத்திலே படைக்கிறதில்லே; படைக்கிற இடத்திலே இருக்க விடறதில்லே.'' நெசவாளி வேதாந்தம் பேசினான்.

''ஹூம்!'' — செட்டியார் பெருமூச்சு விட்டார்.

வலிய வந்து பேச விரும்பும் என்னிடம் பேச விரும்பாத இவர்கள் தாங்களாகவே ஆரம்பித்து நடத்திக் கொண்டிருக்கும் சம்பாஷணைக்குக் காரணம் என்னவென்று என்னால் கண்டுகொள்ளவே முடியவில்லை.

''டிக்கட் சார்! டிக்கட்!'' டிக்கட் பரிசோதகர் கையை நீட்டியபடியே வந்தார். உடைகளிலிருந்து ஒருவரை மதிப்பிடுவது எவ்வளவு தவறு என்று நிரூபிக்கும் வகையில் எதிர் சீட் தம்பதி டிக்கட்டுகளைக் காட்டவும் ''டிக்கட் இல்லே சார்'' என்று செட்டியார் பதில் சொன்னார்.

''அடி ஆத்தே!'' — கிழவி ஆச்சரிய ஒலி எழுப்பினாள்.

''ஏன் சார், படிச்ச நீங்களே...'' என்று காரசாரமாக ஆரம்பித்தவரை மறித்து ஒரு நூறு ரூபாய் நோட்டை எடுத்துக் கொடுத்து, ''டிக்கட் எழுதுங்கள், இரண்டு பேர்'' என்றார்.

''எங்கேயிருந்து?'' என்று ஆச்சரியத்துடன் கேட்டபடி புத்தகத்தைப் பிரித்தார்.

பெறுவீர் ஒரு

கேவார்ட் கேவாபாக்ஸ்

கச்சிதமான படங்களை எடுக்கலாம் 50% பெரிதாக!

நேர்த்திமிக்க நீள்சதுரப் படங்களை உங்களுக்கு அளிக்கிறது கேவாபாக்ஸ்... சாதாரணக் காமிராக்களில் கிடைப்பதை விட 50% பெரிதாகவே அமையும். நெகட்டிவ்களின் நிகரற்ற தரச் சிறப்பு ஏற்றமிகு என்லார்ஜ்மென்டுகளுக்கு உறுதிதரும்.


உச்சநிலைக்கு உயர்த்தும் கேவாபாக்ஸ்

சிறப்பியல்புகள்

- உறுதியான, அழகுருவின வடிவப் பெட்டி முழுதுமே அதி உன்னதமான எஃகிலானது.
- கணக்கான காம்பொஸிஷனோடு விருகென்று எளிதில் படமெடுக்க உதவும். பளிச்சென்ற தெளிவுள்ள விழி-மட்ட வியூஃபைண்டர்.
- 3 வேக விசைகள் (பல்பு, விநாடியிலே 1/50 பங்கு, 1/100 பங்கு). அசைவுச் செயல்களை நுட்பமுடன் படமெடுங்கள்.
- 2 அபெர்ச்சர்கள் (f11 மற்றும் f16) ஆழத்தை ஃபோகஸ் செய்யும் பொருட்டு.

தவிர, கேவாபாக்ஸ் இயக்க எளிதானதே. ஒரு க்ளிக் அடித்தால் போதும்-- மீதியை கேவாபாக்ஸ் செய்துமுடித்துவிடும். உங்கள் விற்பனையாளரைக் கேட்டீர்களானால் இயக்கிக் காட்டுவார். விலை : ரூ.44.00.

கேவார்ட் கேவாபாக்ஸ் தனித் தேர்ச்சி வாய்ந்த புகைப் படங்களை எடுக்கும் நற்புகழ் பெற்ற காமிரா!



கேவார்ட் கேவாபாக்ஸ்

AGI ஆக்பா-கேவார்ட் இந்தியா லிட்.
கஸ்தூரி பில்டிங், ஜாம்ஷெட்ஜி டாடா ரோடு,
பம்பாய்-1.

Benson's/AGI-APL-1 T34

பாலுஸேரி பெனிபிட் சிட்பண்ட் பிரைவேட் லிட்.

(நிறுவியது : 1947)

தலைமைக் காரியாலயம் &
ரிஜிஸ்டர்டு ஆபீஸ் :
பாலுஸேரி பில்டிங்
3, சிங்கராச்சாரி தெரு
சென்னை - 5

கிளைகள் :
புது டெல்லி - 1, 3 & 6
பெங்களூர் - 9
கல்கத்தா - 29
பம்பாய் - 1 & 22

ஏலச் சீட்டுகள் – 1966 டிசம்பர் ஸீரிஸ்

பம்பாய் கிளைகள்

கிங்ஸ் சர்க்கிள் கிளை
வீணா விஹார்
(ஷண்முகானந்தா சபா அருகில்)
17-A, பினாங் ரோடு, பம்பாய்-22 D. D.
போன் : 471455 - தந்தி : GROWRICH

ஏலத் தேதி : 11-12-66
(குறுகியகால சீட்டுகள்)
சேரக் கடைசி தேதி : 10-12-66

ஏலத் தேதி : 10-12-66
(நீண்டகால சீட்டுகள்)
சேரக் கடைசி தேதி : 8-12-66

கருப்பு	மாதச்சந்தா	மாதங்கள்	சீட்டுத்தொகை
குறுகியகால சீட்டுகள்			
A	200/-	25	5000/-
B	100/-	25	2500/-
C	50/-	25	1250/-
F	25/-	25	625/-
G	20/-	25	500/-
நீண்டகால சீட்டுகள்			
C	200/-	50	10000/-
A	100/-	50	5000/-
B	50/-	50	2500/-
D	20/-	50	1000/-

கிங்ஸ் சர்க்கிள் கிளை :
வேலை நேரம் : காலை 8 முதல் 10-30 மணி வரை; மாலை 4 முதல் இரவு 8 மணி வரை
வார விடுமுறை நாள் - வெள்ளி

போர்ட் (Fort) கிளை
சத்னாம் மான்ஷன் முதல் மாடி
245, பி. டிமெல்லோ ரோடு
(G. P. O. அருகில்) பம்பாய் - 1 B. R.
தந்தி : EVERMANS

ஏலத் தேதி : 24-12-66
(குறுகிய & நீண்டகால சீட்டுகள்)
சேரக் கடைசி தேதி : 23-12-66
(குறுகிய & நீண்டகால சீட்டுகள்)

கருப்பு	மாதச்சந்தா	மாதங்கள்	சீட்டுத்தொகை
குறுகியகால சீட்டுகள்			
B	100/-	25	2500/-
C	50/-	25	1250/-
F	25/-	25	625/-
G	20/-	25	500/-
நீண்டகால சீட்டுகள்			
A	100/-	50	5000/-
B	50/-	50	2500/-
D	20/-	50	1000/-

போர்ட் (Fort) கிளை :
வேலை நேரம் : காலை 11 முதல் மாலை 6 மணி வரை
வார விடுமுறை நாள் - ஞாயிறு

விலாசம் தெளிவாக எழுதிக் கேட்பவர்களுக்கு எங்கள் விதிகள் இலவசமாக அனுப்பப்படும். சீட்டில் அங்கத்தினர்களைச் சேர்த்துக் கொள்ளும் உரிமை பண்டைச் சேர்ந்தது.

பாலுஸேரி மூலம் சேமிப்புகளைப் பெருக்கி பயனடையுங்கள்

''ரேணிகுண்டாவிலிருந்து மதராசுக்கு.''

''ஆமாம் சார்.'' பரட்டைத் தலையன் சாட்சி சொன்னான்.

''சில்லறையாக இல்லையா?'' என்று பரிசோதகர் கேட்டார்.

''இல்லே. எல்லாம் நூறாக இருக்கிறது. பரவாயில்லே. மெல்ல மாற்றிக்கொண்டு வந்து கொடுங்கள்'' என்று செட்டியார் சொல்லிக் கொண்டே ரசீதைப் பெற்றுக் கொண்டார்.

பரிசோதகர் அடுத்த பெட்டிக்குப் போனதும் செட்டியார் தமது மணி பர்ஸைத் திறந்து ரசீதை வைக்கும்போது என்னையும் அறியாமல் என் கண்கள் அதை நோட்டம் விட்டன. பத்து ரூபாய் நோட்டுக்களாக ஒரு கட்டு தனியே கிடந்தது. அதை எடுத்து மறுபடியும் சரிசெய்துவிட்டு, தம் ஜிப்பாப் பையிலே போட்டுக் கொண்டார். பொய்யே பேசாத செட்டியார் நூறு ரூபாய்க்கு மேலும் பத்து ரூபாய்களாக வைத்துக் கொண்டு சில்லறை இல்லை என்று ஏன் சொன்னார்? விடை தெரியாத கேள்விகளுடன் இதுவும் ஒன்றானதே தவிர வேறு பலன் இல்லை.

''அது போகட்டும். என்ன பேசிக்கொண்டிருந்தோம்?'' செட்டியார் பேச்சை நிறுத்த விரும்பாதவர் போலத் தோன்றியது.

''என்ன பேசிக் கொண்டிருந்தோம்?- எங்க கதைதான்.'' பரட்டைத் தலையன் பதிலளித்தான்.

''அ தா ங் க. வேண்டாதவங்களுக்குக் குழந்தை பிறக்கிறதைப் பற்றி'' என்று கிழவி குறுக்கிட்டாள். பௌராணிகருக்குக் கதைத் தொடர்பை ஞாபகப்படுத்தும் சிஷ்ய கோடிகளைப்போல்.

''குழந்தை பேர் என்ன?'' — செட்டியார்.

''ஹூம்... ஹூம்... இருளாண்டி'' என்றான் அவன். சகஸ்ரநாமங்களில் ஏதோ ஒன்றைத் தேடி எடுப்பவனைப் போலத் தோன்றியது.

''இருளாண்டியா?'' குழந்தையின் நிறத்துக்கும் பெயருக்கும் உள்ள பொருத்தத்தை எண்ணிப் பார்ப்பவர் போல அவர் வெளியே நோக்கினார்.

''ஏங்க! உங்களுக்குப் பிள்ளைங்களே இல்லியா?'' என்று நெசவாளி யதார்த்தமாகக் கேட்டான்.

''ஹூம்...'' - உண்டு என்றார்களா, இல்லை என்றார்களா என்பது புரியாத வண்ணம் இருவருமே தலையாட்டினார்கள்.

''உங்க நல்ல மனசுக்குச் சீக்கிரமே கிடைக்கும்'' என்று கிழவி அவர்களைத் தேற்றினாள்.

''எனக்கு இந்த மாதிரி நிலையிலே பிள்ளையிருந்து என்ன பிரயோசனம்? உங்க வீட்டிலே கூட்டாளி வந்து பிறந்திருச்சின்னு ராசபோகமா இருந்திருக்குமே...ஹூம் இப்பிடிக் கஞ்சிக்கு அலைய வேணுமே'' — குழந்தையின் தாயார் குறைப்பட்டுக் கொண்டாள்.

''அது ஏன் இனிமே கஷ்டப்படப் போவுது?'' என்றான் அவன்.

''என்னப்பா என்ன சொல்றே?'' ஏதாவது பயங்கரமான முடிவுக்கு வந்திருப்பானோ என்று அந்தக் கிழவி பதறினாள்.

---

11 ரயில்களை நிறுத்திய 4 கார்கள்

இங்கிலாந்தில் பிரைட்டனிலிருந்து லண்டனுக்கும் இதர இடங்களுக்கும் பறக்க வேண்டிய பதினொரு ரயில் வண்டிகள் ஆடாமல் அசையாமல் ஸ்டேஷனிலேயே நின்று கொண்டிருந்தன. அக்டோபர் 20ந் தேதி அன்று. காரணம், ஸ்டேஷனுக்கு நேரத்தோடு வந்தும், 4 ரயில் டிரைவர்களின் கார்களை நிறுத்துவதற்குப் போதிய இட வசதி இல்லாமல் போனதால் அவர்கள் காரிலேயே உட்கார்ந்து விட்டார்களாம்! அந்தக் கார்களை நிறுத்துவதற்கு இடவசதி செய்துகொடுத்த பின்னர் — ஒரு மணி நேரத்துக்குப் பின்னர்தான் ரயில் வண்டிகள் ஓட ஆரம்பித்தன.

ஆதாரம்: கார்டியன்

தகவல்: ஏ. கே. கந்தசாமி

''எங்கள் மாதிரி நெசவாளி குடும்பங்க இப்படி மெட்ராஸுக்கு வந்து அவுங்க பிள்ளைங்களை நல்ல வசதியான ஆளுங்களுக்கு வித்துட்டுப் போயிருக்காங்க. நாங்களும் அதே மாதிரி...''

''என்ன?'' நான் கூச்சலிட்டேன். வறுமைக்காகப் பிள்ளையை விற்ற விவரங்களைக் கேட்டிருக்கிறேன், படித்திருக்கிறேன். இருந்தாலும் இப்படிக் கண்ணெதிரே காணப் போகிறோம் என்று நான் எதிர்பார்க்கவில்லை. வறுமை என்பது தாய்மையைக்கூடத் தீய்த்து விடும் காலாக்கினியா?

''ஏனப்பா! உன் பெஞ்சாதிக்குச் சம்மதம்தானா?'' — செட்டியார் மனைவி ஆவல் பொங்கக் கேட்டாள்.

''சம்மதப்படாமே என்னம்மா செய்யறது? மாட்டேன்னு சொன்னா என்னாலே எப்படிக் காப்பாத்த முடியும்? எப்படியோ எங்கேயாவது சுகம்மா இருந்தா சரிதான்'' என்றாள் தாயார்.

''ஏம்மா கேக்கறீங்க?'' என்றான் அவன்.

''நாங்களே வாங்கிக்கிடலாமான்னு பார்க்கிறோம்.'' செட்டியார் இழுத்தாற்போலக் கேட்டார்.

ஜாதி, ஆசாரம், ஜோஸ்யம் இவைகளிலே அசைக்க முடியாத நம்பிக்கை உடையவர் முன் பின் தெரியாதவர்கள் பிள்ளையைத் தத்தாகக்கூட இல்லை, காய் கறியைப்போல விலை பேசி வாங்கப் போகிறாரா? அது ஏன்?

''என்ன சொல்றே?'' அவன் அவளைப் பார்த்தான். அவர்களுக்குள் ஏதோ சம்பாஷணை நடந்த பிறகு அவன், 'சரி' என்றான்.

''எவ்வளவு?''

''ஹூம்... அறுபது கொடுங்க'' என்றான் அவன். குரலிலிருந்து பேரம் பேசக்கூட அவன் தயார் என்று விளங்கியது.

''சரிங்க. கொடுத்திடுங்க'' என்று செட்டியாரை அவர் மனைவி துரிதப்படுத்தினாள்.

''இந்தாப்பா!'' செட்டியார் ஆறு பத்து ரூபாய் நோட்டுகளை எண்ணி அவனிடம் கொடுத்தார். அவன் ஒரு முறைக்கு இரு முறை அதை எண்ணிப் பார்த்துவிட்டுக் குழந்தையை எடுத்துச் செட்டியாரிடம் கொடுத்தான். அவரிடமிருந்து அவர் மனைவி அதை உடனே வாங்கிக் கொண்டு தன் மடியில் கிடத்திக் கொண்டாள்.

என்னைப் போலவே பிளந்த வாய் மூடாமல் பார்த்துக் கொண்டிருந்த கிழவியும் 'அடப் பாவி, மகனே!' என்றாள்.

''என்னடியம்மா எப்படீயடி மனசு வந்திச்சு? ஏழைங்க வீட்டிலே பிள்ளைங்க பிறக்கிறதில்லியா? வளர்க்கிறதில்லையா? என் பையனுக்கு ஒரு வயசிலேயே அவர் போய் விட்டார். நாலு வீடு கூட்டி நான் அவனை முன்னுக்குக் கொண்டாந்தேன். இப்படியா?'' கிழவி படபடத்தாள்.

''அம்மா, பேசாமே இருங்க.'' செட்டியார் சற்றுக் கோபமாகவே சொன்னார்.

''குழந்தை என்ன மளிகைக் கடைச் சரக்கா? வேணுமானா அனாதைக் குழந்தை எதையாவது எடுத்து வளர்க்கலாமே. இந்த மாதிரி ஆளுங்களுக்கு ஏன் இடம் கொடுக்கணும்?'' என் மனத்தில் தோன்றியதையே கிழவியும் கேட்டாள்.

''அம்மா, உங்களுக்குப் புண்ணியமாப் போகட்டும். எனக்கு இந்தக் குழந்தைதான் வேண்டும். நீங்க பேசாம இருங்க'' — செட்டியார் மனைவி இப்படி இரைந்து கூச்சலிட்டுப் பேசியதை நான் முதல் தடவையாகக் கேட்டேன்.

''எனக்கு என்ன, வயிறெரிஞ்சது. கேட்டேன்'' என்று வெறுப்புடன் கூறிவிட்டு யாரையுமே பார்க்க விரும்பாதவள் போல் வெளியே நோக்கினாள் கிழவி.

சில நிமிடங்களுக்குப் பிறகு குழந்தை விழித்துக் கொண்டு வீறிட்டது.

''இப்ப தெரியும். என்ன செய்வீங்க?'' கிழவி முணுமுணுத்தாள்.

குழந்தையின் அழுகுரல் கூடப் பெற்றவளின் உடலில் எந்தவிதமான சலனத்தையும் ஏற்படுத்தவில்லை. பணத்துக்காக மனத்தையும் விற்றுவிட்டாளா? ஆனால் செட்டியார் மனைவியின் இனிமையான முகத்தைக் கண்ட குழந்தை கூட அழுகையை மறந்து சிரித்தது.

வண்டி அரக்கோணம் வந்து நின்றது. பரட்டைத் தலைத் தம்பதியினர் காப்பி சாப்பிட்டு விட்டு வருவதாகச் சொல்லிவிட்டு இறங்கிப் போனார்கள். வண்டி நகரும் வரை அவர்கள் வரவேயில்லை.

செட்டியார் ஜன்னல் வழியே தலையை நீட்டி வெளியே பார்த்துக் கொண்டிருந்தார்.

தாங்கள் விற்ற பிள்ளையை மறுபடியும் பார்த்துக்கொண்டிருக்க அவர்கள் மறுபடியும் அதே பெட்டியில் ஏற விரும்ப மாட்டார்கள் என்று நான் எண்ணி, ''அவங்க இனிமேல் எங்கே வரப்போறாங்க?'' என்றேன். நானே வலியப் போய்ப் பேசிவிட்டதற்காக என்னை நானே கடிந்து கொண்டேன்.

''அவங்க இனிமே எப்படி வர முடியும்? அதோ பாருங்க!'' என்று பிளாட்பாரத்தைச் சுட்டிக் காட்டினார். அங்கே இரண்டு போலீஸ்காரர்களுக்கிடையே அந்தத் தம்பதி நின்றுகொண்டிருந்தனர். செட்டியாரின் சிறிய மைத்துனன் சி. ஐ. டி. ஷண்முகம், அவர்கள் அருகே இருந்தபடி கையைத் தூக்கி விடை கொடுத்துக் கொண்டிருந்தார்.

''என்ன சார்! எப்படி இருக்கீங்க? பம்பாய் போனா எங்களையெல்லாம் மறந்திடணுமா சார்?'' அதைக் கேட்டு உண்மையிலேயே நான் விழித்தேன்.

''குழந்தை கிடைச்சுப் போச்சில்லே, இனிமே நாம பழைய ஆளுங்கதான். அது முழுசாக் கிடைக்கணுமே என்கிற பயத்திலே நாங்க இருந்ததினாலே... தம்பிகூட நம்மைத் தப்பா எடுத்துக்கிட்டிருக்கும்'' — செட்டியார் மனைவி பேச்சிலே சேர்ந்து கொண்டாள்.

''குழந்தை கிடைக்கும் என்கிற நம்பிக்கையிலே எப்படி வந்தீங்க?'' என்று கிழவி கேட்டாள்.

''பணத்தைக் காட்டினால் கண்டிப்பா கிடைக்கும்னு தெரியும். இதுதானே அவங்க தொழில்.''

''என்னது?'' — பெட்டிக்குள் இருந்த அனைவருமே கேட்டார்கள்.

''ஆமாங்க. கூட்டம் அதிகமா இருக்கிற இடங்களிலே குழந்தைகளைத் திருடிக்கிட்டு வந்து அதன் மேலே இருக்கிற நகைகளை எடுத்துக்கிட்டு, குழந்தையை விட்டுட்டுப் போயிடுவாங்க. இல்லேன்னா கொன்னுப்புடுவாங்க. இவங்க புது மாதிரியா அதே குழந்தையை இப்படி நாடகம் ஆடி வித்து மேலே அதிகமா சம்பாதிச்சுக்குவாங்க. எப்படி?'' என்று விளக்கினார் செட்டியார்.

''தெரிஞ்சுக்கிட்டு இவங்களை அங்கேயே கையும் களவுமாப் பிடிச்சுக் கொடுக்காமே இத்தனை தூரம் தூரத்திக்கிட்டு வந்தீங்களே!'' என்று கைகளை நொடித்தாள் கிழவி.


''வேறே என்னம்மா செய்யறது? போலீசுக்குப் போய்ச் சொல்றதுக்குள்ளே இவர்கள் ஓடிட்டா என்ன செய்யறது? அதிகமா நாமே மிரட்டினா, குழந்தைக்கே ஆபத்து வந்திடுச்சின்னா? அதுக்காகப் பயந்து முன் மேல் போட்ட துணியை எடுக்கிற மாதிரி நடந்துக்கிட்டோம்'' என்று செட்டியார் முடித்தார்.

''இப்படிப்பட்ட ஆளுங்களைத் தப்பிச்சுக்கிட்டுப் போக விட்டுட்டீங்களே'' என்று கிழவி குறைப்பட்டுக் கொண்டாள்.

''அதுதான் இல்லீங்க. இவங்க இந்த மாதிரி வியாபாரம் செய்யறாங்க என்கிறதை நேரிடையா நிரூபிக்க முடியாமேதான் போலீசுலே முழிச்சுக்கிட்டிருந்தாங்களாம். எங்க மூலமா அதுவும் விளங்கிட்டதினாலே அரக்கோணத்திலேயே அவங்களைப் பிடிச்சுட்டாங்க.''

''எப்படி?'' — நான்தான் கேட்டேன்.

''அவங்களுக்குக் கொடுத்த பத்து ரூபா நோட்டு மேலே சி. ஐ. டி. காரங்க அடையாளம் பண்ணியிருக்காங்க. அடையாளம் போட்ட பாக்கி நோட்டெல்லாம் என் கிட்டே இருக்கு. சில்லறை இல்லேன்னு


சக்திக்கும், வலிமைக்கும்!
சர்க்கரை
Bournvita
ஊட்டப்பொருள்கள் அனைத்தும் ஒருங்கே தேவையா? ஒரு கப் போர்ன்விடா அருந்துங்கள். தசைகள் வளர புரதங்களும், சக்திக்கும் வலிமைக்கும் புஷ்டியான மாவுச்சத்தும், எலும்புகளை வலுவாக்க தாது உப்புக்களும், பூரண ஆரோக்கியத்திற்கு மிக்க அவசியமான வைட்டமின்களும் இதிலே உள்ளன. மிகச்சுவையாக தயாரிக்கலாம். காலையில் உற்சாகத்துடன் எழுந்திருக்க வேண்டுமா? இரவில் அமைதியாக உறங்க வேண்டுமா? போர்ன்விடா அருந்துங்கள்.
காட்பரீஸ் போர்ன்-விடா

நான் பத்து ரூபா நோட்டுக்களை வைக்கச் சொன்னேன்னு புரிஞ்சுதா தம்பி?'' என்று என்னைப் பார்த்துக் கேட்டார். நான் தலை குனிந்து கொண்டேன்.

''பிள்ளையை விக்கறேன்னு சொன்னப்போதே சந்தேகப்பட்டேன்'' என்று கிழவி முத்தாய்ப்பு வைத்தாள்.

''ஏதோ குழந்தைக்கு ஒண்ணுமில்லாமே கொண்டு வந்தாங்களே'' என்று செட்டியார் மனைவி குழந்தையைப் பார்த்தபடியே சொன்னாள்.

''எப்படியோ அவங்களைப் பிடிக்க நீங்க உதவி செய்திட்டீங்க. இனிமே இந்தக் குழந்தையை அதன் சொந்தக்காரங்க கிட்டே சேர்ப்பிக்கணும்'' என்றேன் நான்.

இதற்குச் செட்டியாரின் மனைவி அளித்த ஒரே விடை, விளங்காத என் எல்லாக் கேள்விகளுக்குமே விடையாக அமைந்தது.

''நல்லாச் சொன்னே தம்பி! நாங்க இவ்வளவு கஷ்டப்பட்டு விலை கொடுத்து வாங்கியது நான் பத்து மாதம் சுமந்து பெத்த என் ஒரே பிள்ளை தம்பி!''



ஊர் வம்பு

சரியான வழி! யார் குற்றவாளி? கணக்குத் தவறியது!

சென்னை ஜெனரல் ஆஸ்பத்திரிக்கு முன்னால் நிற்கும் டாக்டர் ரங்காச்சாரி, டாக்டர் குருசாமி முதலியார் சிலைகளுக்குத் திடீரென்று 'யோகம்' அடித்திருக்கிறது. அவற்றின் மீதாகச் சிறு மண்டபம் எழுப்பி வருகிறார்கள். காரணம்?

வெய்யிலில் வாடி மழையில் நனைகின்றனவே இச்சிலைகள் என்பதற்காக இருக்க முடியாது. அவற்றின் மீது காகங்கள் அமர்ந்து அசுத்தப்படுத்துகின்றன. அதைத் தவிர்க்க வேண்டும் என்பதற்காக இருக்கலாம். ஆனால் நேற்றுப் பார்த்தபோது டாக்டர் ரங்காச்சாரி சிலையின் தலைமேல் அமர்ந்திருந்த காகம் மண்டபம் தரும் நிழலையும் சுகமாக அனுபவிப்பதாகவே தோன்றியது.

ஆகக் கூடிச் சிலைகளைச் சுத்தமாக வைத்திருக்க ஒரே வழிதான் உண்டு — சிரமமான வழிதான் — என்று தெரிகிறது. நீர் கொண்டு அடிக்கடி அச்சிலைகளைச் சுத்தப் படுத்துவதுதான் அவ்வழி!

ஃ ஃ ஃ

மீண்டும் எஃகு, உருக்கு ஆலைகள் புதிதாக உருவாக்கினால் பலன் இராது. தேவைக்கு அதிகமாக எஃகு உற்பத்தியாகி விற்பனை இன்றித் தேங்கிக் கிடக்கும் என்று எச்சரிக்கிறார் எச். வேங்கடசுப்பையா, சமீபத்தில் ஹிந்துப் பத்திரிகையில். இதற்கு முன்பே ஒரு முறை அவர் எழுதிய கட்டுரையில் இப்போது உள்ள எஃகு ஆலைகளே அவற்றின் முழுச் சக்திக்கும் ஏற்பச் செயல்படவில்லை என்று சுட்டிக் காட்டியிருக்கிறார். காரணம் இன்றுள்ள பிரும்மாண்டமான எஃகு ஆலைகள் உற்பத்தி செய்து தள்ளக் கூடிய அளவுக்கு விற்பனை இல்லை. நாட்டின் எஃகுத் தேவைகள் தவறுதலாக மதிப்பிடப்பட்டுள்ளன. பிற நாடுகளுக்கும் அதிக ஏற்றுமதி செய்ய இயலாது. காரணம் அவர்களுக்கு வேறு தேசங்களிலிருந்து நம்முடையதைக் காட்டிலும் மலிவான விலையில் தரமான எஃகு கிடைக்கிறது! இந்நிலையில் ரூர்கேலா இரும்பு உருக்கு ஆலையில் ரூபாய் நானூறு கணக்கில் மோசடி செய்த குற்றத்துக்காக ஒருவர் மிகவும் கடுமையான முறையில் தண்டிக்கப் பட்டிருக்கும் செய்தி கிடைத்திருக்கிறது. நாட்டு மக்களின் வரிப் பணத்தையும் அதற்கு மேலாக அயல் நாடுகளிலிருந்து கடன் வாங்கியும் கோடானு கோடி வீண் செலவில் டம்பமாக எஃகு ஆலைகள் அமைத்து அவை அரைகுறையாகச் செயல்பட வைப் போரைத் தண்டிப்பதற்கு மட்டும் யாரும் முன்வரவில்லை!

ஃ ஃ ஃ

வின்ஸ்டன் சர்ச்சில் பற்றி அவர் மகன் ரண்டால்ப் சர்ச்சில் ஒரு வாழ்க்கைச் சரித நூல் எழுதத் தீர்மானித்தார். இதற்கு அட்வான்ஸாக 450 பவுன் கொடுக்க முன் வந்தது ஒரு ஸ்தாபனம். வின்ஸ்டன் இதைக் கேள்விப்பட்டதும் மகனைக் கடிந்து கொண்டார். ''என்ன அவசரம்? பொறுத்திரு! காலம் வரும். நூற்றுக்கணக்கில் இன்று கொடுக்க நினைப்போர் ஆயிரக் கணக்கில் கொடுக்க முன்வருவார்கள்!'' என்று மகனுக்குத் தந்தி அடித்தார்.


எவ்வளவோ சாமர்த்தியசாலியான சர்ச்சில் இந்த விஷயத்தில் மட்டும் தவறாக — குறைவாக — மதிப்பிட்டு விட்டார். சமீபத்தில் ரண்டால்ப் தகப்பனார் வின்ஸ்டன் பற்றிய நூலை எழுதியபோது டெய்லி டெலிகிராப் பத்திரிகை அதைத் தொடராக வெளியிட 2,00,000 பவுன் கொடுக்க முன்வந்தது! புத்தகப் பிரசுரகர்த்தர்களுக்கு 1,00,000 பிரதிகளுக்கு இப்போதே ஆர்டர்கள் வந்துள்ளன. அமெரிக்காவில்மட்டுமே 2,50,000 பிரதிகள் முதல் எடுப்பில் விற்கும் என்று எதிர்பார்க்கிறார்கள். இதுவரைக்கும் ரண்டால்ப் எழுதியுள்ள இந்தப் புத்தகம் வின்ஸ்டனின் வாழ்க்கைச் சரித்திரத்தின் முதல் பாகம் மட்டும்தான்! இன்னும் நாலு பாகங்களை இனிமேல்தான் எழுதப் போகிறார்! ரண்டால்ப் சர்ச்சில் மொத்தத்தில் பத்து லட்சம் பவுனுக்கும் அதிகமாகப் பெறுவார் என்று கணக்கிடுகிறார்கள். — டைம்

அனாதைச் சவமும் அரசாங்க மரியாதையும்

ஊர், பெயர் ஏதுமற்ற அனாதை ஒருவரின் சவத்துக்கு மத்திய அரசாங்க சுகாதார அமைச்சர் டாக்டர் சுசீலா நையார் தகனக் கிரியை செய்தாரென்றால், ஆச்சரியமாக இருக்கிறதா? ஆனால் இது உண்மை.

டெல்லியில் இடுகாட்டுக்குப் போதிய இடமில்லாததாலும், சுகாதாரத்தை முன்னிட்டும் 'மின்சார சவ எரிப்புச் சூளை' ஒன்றை டெல்லி கார்ப்பரேஷன் ரூ. 6 லட்சம் செலவில் அமைத்துள்ளது. இதன் திறப்பு 'விழா' வுக்கு எந்தச் சவத்தை முதலில் பயன்படுத்துவது என்ற பிரச்னை எழுந்தபோது சொந்தம் கொண்டாடுபவர் யாருமற்ற ஓர் அனாதைப் பிணத்தைப் பயன்படுத்துவதென முடிவு செய்யப்பட்டது. கிடைத்த அந்த அனாதைப் பிணத்துக்குக் கார்ப்பரேஷன் செலவில் இந்து மத சம்பிரதாயப்படி சடங்குகள் செய்யப்பட்டன. மத்திய சுகாதார அமைச்சர் சுசீலா நய்யார் இந்த 'விழா' வில் கலந்து கொண்டார். ஒரு சிறு பொத்தானை அவர் அழுத்தியதும், 700 டிகிரி சென்டிகிரேட் உஷ்ணமுள்ள 'சவ எரிப்புச் சூளை'யில் பிணம் இறங்கியது. சூளைக்குள் இட்ட நாற்பத்தைந்து நிமிடங்களுக்குள் சூளையின் மற்றொரு முனையில் அஸ்தி கிடைத்தது.

ஆதாரம்: 'யூத் கால்'
தகவல்: மிதுனம்



பறக்கும் நாற்காலி!



சிட்டுக் குருவி போல் மனிதன் தனியாக வானத்தில் பறக்க முடியுமா? அக்கனவு நனவாகும் என்பதற்குக் கண்கூடான சான்று தோன்றியுள்ளது.

''பறக்கும் நாற்காலி'' ராக்கெட் விசையினால் இயங்குகிறது. ஆகாயத்தில் எழும்பித் தாவவும், பாயவும் இது நன்கு உதவுகிறது. இதை அமெரிக்காவில் அறுபது தடவை சோதித்துப் பார்த்து விட்டனர்.

பறக்கும் நாற்காலியில் மனிதன் உட்கார்ந்து கொண்டு வான் வழி பாய்வான்.

இதில் ஏறித் தரைக்கு மேல் கிளம்பி ஒரே மூச்சில் பன்னிரண்டு மைல் தொலைவு பறக்கலாம்; அல்லது இடம் பெயராமல் ஒரே நிலையில் ஆகாயத்தில் கால் மணி நேரம் மிதந்த வண்ணம் இருக்கலாம்.

இது குடிகளுக்கும் உதவும், போர்ப் படைகளுக்கும் உதவும்.

□ ■ □

புள்ளி மான்

ஒரு புள்ளி மானின் மீது எத்தனை புள்ளிகள் உண்டு என்று யாரேனும் கணக்குப் பார்த்திருக்கிறார்களா என்பது நமக்குத் தெரியாது! ஆனால் இந்தியாவில் மனிதர்களைத் தவிர உள்ள பிற ஜீவராசிகள் எத்தனை வகையானவை என்று கணக்குப் பார்த்திருக்கிறார்கள்! குட்டி போட்டுப் பால் கொடுப்பவை ஐந்நூறு வகை; பறவைகள் மூவாயிரம் வகை; மீன்கள், பூச்சிகள், ஊர்வன, நீரிலும் நிலத்திலும் ஒருங்கே வாழ்வன போன்றவை முப்பதாயிரம் வகை!

அதிசய ஆப்பரேஷன்!



கருப்பையினுள் இருக்கும் சிசு, தாயிடமிருந்து ஊட்டம் பெற்று வளருகிறது. தாய்க்கு ஏதேனும் கோளாறு இருந்தால், அது ஓரளவு சிசுவையும் பாதிக்கும். 'ரீசஸ்' நோய் காரணமாகக் கருப்பையினுள் முடங்கிக் கிடக்கும் சிசுவுக்குப் போதுமான இரத்தம் இல்லாமல் போகும். குழந்தை பிறந்ததும் இரத்தம் செலுத்தினால் சாவைத் தடுக்க முடியும். ஆனால் சில சந்தர்ப்பங்களில், இரத்தம் செலுத்துவதற்கு முன்னர், பிறப்பதற்கு முன்னரே குழந்தை இறந்து விடுகிறது. எனவே பிறக்காத குழந்தைக்கு, தாயின் கருப்பையில் அது இருக்கும்போதே இரத்தம் செலுத்த வேண்டும். இந்த அதிசய ஆப்பரேஷன் அமெரிக்காவிலும், பிரிட்டனிலும் வெற்றி பெற்றிருக்கிறது. தற்போது மேற்கு ஜெர்மனியிலும் இச் சோதனை நல்ல பயன் தந்திருக்கிறது.

கருப்பைக்குள் இருக்கும் சிசுக்கு வெளியிலிருந்து இரத்தம் செலுத்தி, அதற்கு "உயிர்ப் பிச்சை" அளிப்பதில் மருத்துவர்கள் வெற்றி பெற்றனர். குழந்தைக்காக ஏங்கும் ஒரு தாய், முதல் பிரசவத்தில் குழந்தையை இழந்து விட்டாள். எனவே இரண்டாவது முறையாகக் கருத்தரித்த போது, "குழந்தை உயிருடன் பிறக்க வேண்டுமே" என்று தாய், பல டாக்டர்களைக் கலந்தாலோசித்தாள். அந்தப் பெண்ணுக்கு 'ரீசஸ்' நோய்க் கோளாறு இருந்தது. குழந்தை உயிருடன் பிறக்க வேண்டுமானால், குழந்தைக்குப் புதிய இரத்தம் செலுத்த வேண்டியது அவசியம்.

டாக்டர் ஹாப்பாவர், இரு டாக்டர்களின் உதவியுடன் முதலில் 'ஆபரேஷன்' ஒன்றைச் செய்தார். இந்த ஆபரேஷன் மூன்று மணி நேரம் நடந்தது. இதன் பின்னர் சிசுவுக்குச் சுமார் 30 நிமிட நேரம் இரத்தம் செலுத்தப் பட்டது. இரத்தம் செலுத்தப் பட்ட பிறகு செயற்கையாகப் பிரசவம் நிகழ்ந்தது. பிரசவத்திற்குப் பின்னர், சோதனையில் சிசுவின் இரத்தத்தில் 60 சதவிதம், செலுத்தப்பட்ட இரத்தம் என்பது தெரிய வந்தது. இதன் பயனாகச் சிசு உயிருடன் பிறந்தது. மேற்கொண்டு இருமுறை இரத்தம் செலுத்தப்பட்டதைத் தொடர்ந்து சிசு சாதாரண நிலைக்கு வந்து வளரத் தொடங்கியது. -யூ.பி.எஸ்

கர்ப்பிணிகளுக்குக் காப்பி ஆபத்து!



மேற்கு ஜெர்மன் மருத்துவ நிபுணர் டாக்டர் உல்ப்ராம் ஆஸ்டர்டாக், பலவித சோதனைகளுக்குப் பின்னர், கர்ப்பிணிகளுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளார். காப்பி மட்டுமின்றி, 'காபின்' என்ற நச்சுச் சத்து கலந்த இதர பானங்களினாலும் ஆபத்து விளையும். காபின் கலந்த திரவத்தில் பெண் கரு அணுக்களை அமிழ்த்திய போது இவற்றில் இன உயிர் அணுக்கள் அழியக் கண்டார். அணுக் கதிர் வீச்சினால் என்ன மாறுதல்கள் ஏற்படுமோ அவ்வித மாறுதல் 'காபின்' நச்சினால் ஏற்படுகிறது. காப்பி சாப்பிடுவது அதிகமானால் தீங்கும் அதிகரிக்கிறது. ஒரு நாளைக்கு மூன்று முறை காப்பி சாப்பிடும் கர்ப்பிணிப் பெண்களுக்கு, கருப்பையில் கரு, நஞ்சுக் கொடி ஆகியவை பாதிக்கப் படுகின்றன. மித மிஞ்சிக் காப்பி அருந்தினால் சில சமயங்களில் கருவே அழிந்து விடும் என்று அம்மருத்துவ நிபுணர் கூறியிருக்கிறார். - யூ. பி. எஸ்.

டெலிவிஷனில் ஏல வியாபாரம்

சமீபத்தில் கலிபோர்னியாவில் நன்கொடைப் பொருட்கள் பல டெலிவிஷன் மூலம் ஏலம் விடப்பட்டன. இந்தக் காட்சியைத் தங்கள் வீட்டுக்களில் பார்த்துக் கொண்டிருந்தவர்கள் டெலிபோன் மூலம் விலை கூறினர். பன்னிரண்டு மணி நேர ஏல வியாபாரத்தில் ஜனாதிபதி ஜான்ஸனின் புதல்வியுடைய திருமண 'கேக்கு'த் துண்டு உட்பட, பல பண்டங்கள் ரூ. 2,10,000க்கு விற்பனையாயின. டெலிவிஷன் வாயிலாகக் கல்வி போதிப்பதற்கு இந்த நிதி பயன்படுத்தப்படும். (டெயிலி எக்ஸ்பிரஸ்) தகவல்: எஸ். ஜி.

ஆசாரியரும் ஆர்த்தர் இளவரசனும்

ஸ்ரீ காஞ்சி காமகோடி சங்கராசாரிய சுவாமிகள் சிறுவயதில் ஆர்த்தர் இளவரசனின் பாகத்தை ஏற்றுப் பள்ளி நாடகத்தில் நடித்ததாக 13-11-1966 இதழ் கல்கி 'பல்சுவைப் பக்கங்களில்' ஒரு துணுக்கு வெளியாகி இருந்ததல்லவா? சுவாமிகள் நாடகத்தில் நடிக்கவில்லை என்றும், பேச்சுப் போட்டியில்தான் ஷேக்ஸ்பியர் நாடகத்திலிருந்து ஆர்த்தர் இளவரசனின் பேச்சினை ஒப்புவித்துப் பரிசு வாங்கினார் என்றும் அறிகிறோம். -ஆசிரியர்



காற்றினிலே வரும் கீதம்

ரா. கணபதி

கும்பராணாவின் பிரார்த்தனைக்கு ஏகலிங்கர் செவிசாய்க்கவில்லை. அவனுக்குப் போர்க்களத்தில் வீரமரணம் கிட்டவில்லை. விஜய லக்ஷ்மியே மாலையிட்டாள்.

சாரங்கபூரில் மகாராணாவின் படைகளிடம் கில்ஜியின் சேனை செம்மையான தோல்வியை அடைந்தது. கில்ஜி பின் வாங்கினான். மாண்டுவிலுள்ள தன் கோட்டைக்குள் சென்று பதுங்கினான். மகாராணா அந்தக் கோட்டையை வளைத்துக் கொண்டு முற்றுகையிட்டான். அடிபணிவது தவிர வேறு வழியில்லை என்று கண்டான் கில்ஜி. மஹிபாவை மகாராணாவிடம் ஒப்புவித்துவிட முடிவு செய்தான். ஆனால் மஹிபா சாமர்த்தியமாகத் தப்பித்துக் கொண்டு குஜராத் சுல்தான் குத்புதீனைச் சரண் அடைந்தான். கும்பராணா மாளவத்தின் கில்ஜியை வென்று வாகை சூடி, அவனைக் கைதியாக்கினான்.

மதுமங்களிடம் கண்ணன் தொடருவான்:

இன்னும் ஓரிரு தினங்களில் வெற்றி வீரனாகக் கும்பராணா சித்தோர்க் கோட்டைக்கு வந்துவிடுவான். சண்டையும் சண்டீ ஹோமமும் வந்து மீராவையும் ராணாவையும் நடுவில் காப்பாற்றின. இப்போது மீரா வெற்றி வீரனான ராணாவை வரவேற்க ஓர் அன்புச் சகோதரி போல் ஆவலாக இருக்கும் போதே இந்தச் சகோதரத்துவத்தை எப்படி நடைமுறையில் பயிலுவது என்று குழம்பிக் **கொண்டிருக்கிறான். அதுவும் இன்று மதன**



இரயோதசியா? அவனையும் ராணாவையும் சேர்த்துச் சேர்த்துப் பாடிய சிருங்கார கவிதைகளைக் கேட்டுப் புண்ணாகியிருக்கிறான்.

''ஹூம்... ராணா வந்த பின் என்னவெல்லாம் நடக்கப் போகிறதோ?'' —பெருமூச்செறிந்தான் கண்ணன்.

''என்ன கண்ணா! உலகத்தையே ஆட்டிப் படைக்கிற நீ — எல்லாம் அறிந்த நீ — 'என்ன நடக்கப் போகிறதோ?' என்று கேள்வி கேட்கிறாயே! நான் கேட்க வேண்டிய கேள்வி அல்லவா அது?'' என்றான் மதுமங்களன்.

''நீ கேட்டாலும் நான் விடை சொல்ல மாட்டேன். நீயாகவே பொறுத்திருந்து பார்த்துத் தெரிந்து கொள்ள வேண்டியது தான்'' என்றான் கண்ணன்.

''அப்படியானால் என்னை இங்கேயே விட்டு விட்டு நீ மட்டும் கோலோகம் செல்லப் போகிறாயாக்கும்!''

''ஆம், ஆனால் உன்னை இந்த உருவத்தில் இங்கு விட்டுச் செல்ல முடியாது மது.''

சட்டென்று சம்பாஷணை நின்றது. மீரா காத்துக் காத்துப் பார்த்தாள். அதன் பின் கண்ணனோ மதுவோ பேசவேயில்லை.

மீரா ஓர் அசாதாரணமான உறுதியை உண்டாக்கிக் கொண்டு மாடத்திலிருந்து இறங்கினாள். கண்ணன் அமர்ந்திருந்த தடாகக்கரைக்கு வந்து சேர்ந்தாள்.

கண்ணனையும் அவன் தோழனையும் காணவில்லை. தடாகத்தின் படிக்கட்டில் 'கரதாளம்' எனப்படும் சிப்ளாக் கட்டையை மட்டும் கண்டாள். 'எங்கிருந்து வந்தது இது?'—யோசித்தாள் மீரா.

'உன்னை இந்த உருவத்தில் இங்கு விட்டுச் செல்ல முடியாது மது' என்று கண்ணன் கூறியது அவளுக்கு நினைவு வந்தது.

தன்னுடைய கதையை உருகி உருகிக் கேட்ட மதுவையே நாயன்புடன் எடுத்துக் கொள்வது போல் கரதாளத்தை எடுத்துக் கொண்டாள் மீரா.

அதைப் பார்த்துப் பேசினாள்: 'இந்த உலகில் எனக்குத் தம்புராதான் ஒரே சகாவாக இருந்தது. இன்று நீயும் வந்தாய். நீ வந்ததே எனக்கு சுபசகுனம். ஏனென்றால் தம்புராவை வைத்துக் கொண்டு ஏகாந்தமாக யாரும் அறியாமலே அழுது கொண்டிருந்தேன். கரதாளமே! உன்னை யாருமறியாமல் கொம்

டிப் பாட முடியாது. தாளம் கொட்டிச் சப்தமிட்டு, பகிரங்கமாகவே நான் ஆடிப் பாடக் காலம் வந்துவிட்டது என்று உணர்த்த நீ வந்திருக்கிறாயா?' என்றாள்.

'ஆம் ஆம்' என்பது போல் ஆலய மணி ஒலித்தது.

பட்சிகள் கலகல த்வனியிடத் தொடங்கின. வான வீதியில் வண்ண உடை தரித்துப் பவனி வந்தாள் உஷை.

'பொழுது மட்டும் விடிகிறதா? எனக்கும் விடிவு பிறந்து விட்டதா?' என்று மீரா கேட்டுக் கொண்டாள்.

அத்தியாயம் 19

"அலக் நிரஞ்சன்"

அன்று சித்தோர் அல்லோலகல்லோலப் பட்டது. அரண்மனையிலிருந்து குடில் வரையில் எங்கும் மகிழ்ச்சி கொந்தளித்துக் கொண்டிருந்தது. ஆண் பெண் என்ற வித்தியாசமின்றி, பெரியவர் சிறியவர் என்ற வித்தியாசமின்றி அனைவரும் உவகைக் கடலில் மூழ்கியிருந்தார்கள்.

மகாராணா கும்பாஜி தனது வீரப் பிரதாப சாகஸங்களுக்கெல்லாம் சிரோமணியாக மாளவத்தை வென்றதோடு மட்டுமின்றி, மாளவத்தின் சுல்தானாகிய முகம்மது கில்ஜியைச் சிறைக் கைதியாக்கித் தன்னுடன் சித்தோர்க் கோட்டைக்கு அழைத்து வரும் போது, அந்த மாவீரனை வரவேற்கத் தலைநகரம் முழுதும் ஆர்வ வெறியுடன் ஆயத்தமானதில் அதிசயம் என்ன ?

சித்தோர்க் கோட்டையின் பல மதில்களில் விநாயகன், ஆஞ்சநேயன், ஸ்ரீ ராமன் ஆகியோரின் பெயர்களில் அமைந்த 'போல்' என்ற நுழை வாயில்களில் மக்கள் கட்டுக்கடங்காமல் குழுமி நின்றனர். வெற்றி வீராகத் திரும்பும் ராவல்ஜியைக் கண்ணாரக் கண்டு போற்ற வேண்டும் என்று மட்டும் அவர்கள் விரும்பவில்லை. தோல்வியுற்றுப் பிடித்து வரப்படும் கில்ஜியைக் கண்டு நகையாட வேண்டும் என்றும் விரும்பினர்.

மகாராணா மத்தகஜத்தின் மீது ஆரோகணித்து வருகிறார் என்றறிந்ததும் மக்களுக்குச் சற்று ஏமாற்றமாயிருந்தது. ஏனெனில், இது போன்ற சந்தர்ப்பங்களில் மன்னர் ரதத்தில் வருவதுதான் வழக்கம். அந்த ரதத்தின் பின் பகுதியில் தோல்வி கண்ட மன்னனைக் கயிற்றால் கட்டியிருப்பார்கள். ராணா யானை மீதமர்ந்து வந்தால் கில்ஜியை இந்தக் கோலத்தில் காண இயலாதே என்ற தாபம் சித்தோர் மக்களுக்கு உண்டாயிற்று.

மகாராணா கும்பன் வாரணேந்திரனின் மீது கம்பீரமாக ஆரோகணித்துக் கோட்டை வாயிலுக்குள் பிரவேசித்த போது, 'ஜெய் மகா ராவல்ஜி' என்ற ஒலி மக்கள் கண்டத்தின் உச்சத்தில் எழுந்து மேகமண்டலங்களைத் தொட்டது. ஏகலிங்க ஆலயத்தின் புஜாரி மகாராணாவுக்கு சண்டிகேசனிடமிருந்து பெற்ற சிவ நிர்மாலியங்களை அளித்தார். வயோதிகத்தினால் போர்க்களம் செல்ல இயலாதிருந்த சண்டன் கும்பனை ஆரத் தழுவிக் கொண்டார். தொண்டு கிழவியான பாட்டி ஹம்ஸாபாய்—கும்பனின் திருமணத்துக்கும், ராய்மல்லின் திருமணத்துக்கும் கூடச் சென்றிராதவள்—பேரனின் வெற்றி விஜயத்தைக் காண அங்கு வந்திருந்து அவனை உச்சி மோந்து ஆசிர்வதித்தாள். ராஜமாதா சௌபாக்கியதேவி பெற்ற உடல் புளகிக்கக் கும்பனின் சிரத்தில் இரு கரத்தையும் வைத்து, பொற்கழஞ்சால் அவனது தலையைச் சுற்றி, அதனை ஓர் அந்தணருக்கு அளித்தாள். உதயாவும் அண்ணன் கைகளை அன்போடு பிடித்து அழுத்திக் கொண்டு விம்மினான். மீராவோ கையால் தொடாமலே கண்ணில் நிறைந்த வாஞ்சையை மட்டும் காட்டி அடக்கத்துடன் அவனை வரவேற்று, ஆலத்தி சுற்றி, திலகம் அணிவித்தாள். இத்தனை பேரும் ஆனந்த மூற்றிருக்கும் போது ராய்மல் மட்டும் தொங்கும் முகத்துடன் வந்து தந்தையை நமஸ்கரித்தான். "அப்பா, இவர்கள் யாவரும் ஸ்திரீகள்; பெரிய தாத்தா சண்டன்ஜி வயோதிகர். நான்தான் இளமை முறுக்கிலும் ரணகளம் வராமல் உத்தர குமாரன் போல் அந்தப்புரத்தில் பதுங்கியிருந்து விட்டேன். எனக்குரிய வெற்றியை நீங்கள் அபகரித்து விட்டீர்கள்" என்றான்.

கும்பன் அவனது முகத்தை மிகுந்த பாசத்துடன் நோக்கிக் கன்னங்களை வழித்தான். "உன்னால்தான் எனக்கிந்த வெற்றி கிடைத்தது. சண்டிஹோம ரட்சையை என் கையில் கட்டிப் போருக்கு என்னை அனுப்பி வைத்ததே நீ அல்லவா? நான் மாளவத்தில் ஒரு வெற்றியைக் காணும் போதே சித்தோரில் இன்னொரு வெற்றியை ஈட்டி வைத்தவன் நீ அல்லவா?" என்றான்.

ராய்மல்லின் கண் கசிந்தது.

'கில்ஜி எங்கே?' என்று தேடிய லட்சோப லட்சம் கண்களுக்குத் தம்மை நம்ப முடியாத ஓர் அதிசயம் காத்திருந்தது.

கும்பராணாவின் யானையை அடுத்தே வந்த இன்னொரு யானையின் மீது ஆரோகணித்து வந்தான் கில்ஜி. அவனுக்கு மனத்தில் எந்த விதமான உரசலும் இருக்கக் கூடாது என்பதற்காகவும், மக்களால் அசம்பாவிதம் எதுவும் நிகழ்ந்துவிடக்கூடாது என்பதற்காகவும், 'பர்தான்' (பிரதான மந்திரி அல்லது பிரதமர்) தாரணகரும் அவனுடனே அம்பாரியில் அமர்ந்து உரையாடிக் கொண்டு வந்தார். அந்தக் காட்சியின் உன்னே கும்பனின் பெருந்தன்மை முற்றிலும் பொதிந்திருந்தது எனலாம். ஏனெனில், தாரணகர் ஒரு ஜைனர். தீவிர ஹிந்து சமயப் பற்றுள்ளவனாயினும் கும்பன் தாரணகருக்கு ராஜநீதியிலிருந்த நிபுணத் தன்மையைக் கண்டு அவரையே பிரதமராக வைத்துக் கொண்டான். அதோடு மட்டுமின்றித் தார



சென்னை: பாரகன்-ஸ்ரீகிருஷ்ணா-மேகலா
மற்றும் தென்னாடெங்கும்
KUGA
RR PICTURES
ஆர். ஆர். பிக்சர்ஸ்
பறக்கும் பாவை
டைரக்ஷன்: ராமண்ணா
கதை-வசனம்-சக்தி T.K. கிருஷ்ணசாமி - கேமரா M.A. ரஹ்மான் - இசை M.S. விஸ்வநாதன்

னாகர் வழிபடும் ரிஷப தேவர் என்ற ஜைன தீர்த்தங்கரருக்காகக் கும்பராணா தனது அற்புதக் கற்பனைப் படைப்புக்களில் முதன்மை ஸ்தானம் வகிக்கும் சௌமுக ஆலயத்தையும் ராணாபுரியில் நிர்மாணித்துத் தந்திருந்தான்.

இந்த விவரத்தை யெல்லாம் மக்கள் பேசக் கேட்கும் போது மீரா பூரித்துப் போனாள்.

சிறுபான்மையினரிடமும், அடிமைப்பட்டவர்களிடமும் ராணாவுக்கிருந்த தனியான பரிவையும், மதிப்புணர்ச்சியையும் மக்கள் பேசினார்கள். கோலாக்கள் என்ற அடிமைகளுக்குப் பூர்வத்தில் கழுத்தைச் சுற்றிப் பெரிய வடம் இட்டு அடிமைத்தனத்தைப் பறையறைவது வழக்கமெனவும், கும்ப ராணாதான் இந்த வழக்கத்தை மாற்றி அவர்களின் இடது காலில் சிறிய தடயம் போட்டுக் கொண்டாலே போதுமென விதித்ததாகவும் அறிந்த போது, 'எனக்கு மட்டும் அவர் சுதந்திரம் அளிக்காதிருந்து விடுவாரா?' என்று மீரா தன்னையே கேட்டுக் கொண்டாள்.

நவதுர்க்கை, விநாயகர் முதலியவர்களை வணங்கி விட்டு மண்டோர் இளவரசி சிருங்கார தேவி 'தஹேஜ்' கொண்டு வந்திருந்த ஆஞ்சநேயனையும் வழிபட்டுவிட்டு, லக்ஷ்மி போல், சாமுண்டா போல், தாராபோல், ராஜ்போல் முதலியவற்றைக் கடந்து ரங்க மஹல் வந்து சேர்ந்தான் கும்பராணா. அங்கு ராவ்தூதா தமது பேத்தியின் கணவனை வரவேற்பதற்காக மேர்தாவிலிருந்து வந்து காத்திருந்தார். முதுமை காரணமாக நலியாதிருந்த அந்த மகாரதரின் சக்தி, ரத்தன் சிங்கின் மரணத்துக்குப்பின் புத்திரசோகத்தின் பாதிப்பாலும், மீராவின் புறப்பாட்டுக்குப் பின் கவலையாலும், சந்திரமுகியின் மறைவுக்குப்பின் இப்போது விசமாகி விட்டிருந்தது. கோட்டை வாயிலுக்கு வருவதற்குக் கூடத் திராணியற்றிருந்த அவர் ரங்கமஹலிலேயே காத்திருந்தார்.

''மேவார் செய்த பாக்கியமே, மேர்தா செய்த இரட்டிப்புப் பாக்கியமே, வாருங்கள் வாருங்கள்'' என்று கும்பனைக் கைநீட்டி வரவேற்றார் ராவ்தூதா. அவர் கால்களில் விழுந்து பணிந்தான் ராணா.

''தகுதிக்கு மேல யாரையும் தலையில் தூக்கி வைத்துக் கொள்வதே அண்ணாவின் வழக்கம்'' என்று கிசுகிசுத்தாள் உதா.

''நமக்கென்னடியம்மா பொல்லாப்பு? வாயை மூடிக் கொண்டு கிடக்க வேண்டியவர்கள் நாம் என்பதை மறந்து விடாதே'' என்று மகளை அடக்கினாள் தாய்.

''நான் என்ன சொல்லிவிட்டேன்? அந்த மிலேச்சத் துருக்கனை யானை மேல் ஏற்றி அண்ணா அழைத்து வந்திருப்பது சகிக்கவில்லை. என் ஆற்றாமையைச் சொல்லிக் கொண்டேன்'' என்று பேச்சை மாற்றிக் கொண்டாள் உதயா.

அறிவுக் கூர்மை மிகுந்த ராவ்தூதாவால் மீரா எத்தகைய சூழ்நிலையில் வாழ்கிறாள் என்று எளிதில் புரிந்து கொள்ள முடிந்தது. மீரா அவரை அர்த்தபுஷ்டியுடன் பார்த்தாள். அந்த அர்த்தத்தை அவர் வாங்கிக் கொண்டார்.

கும்பனுடன் உரையாடிக் கொண்டிருந்த போது, ''மீராவையும் ஒரு மாறுதலுக்காக என்னுடன் மேர்தாவுக்கு அழைத்துப் போகட்டுமா?'' என்று கேட்டார்.

தந்தை விடை சொல்லுமுன்பே ராய்மல், ''ஆமாம், சித்திக்குக் கொஞ்சம் பிறந்தகத்துச் சீராட்டல் அவசியம்தான். நேற்று வந்த சிருங்கார தேவியே மண்டோர் போகத் துடிக்கிறாளே!'' என்றான்.

ராணா அவனை நன்றியுடன் நோக்கி விட்டு ராவ்தூதாவுக்கு அனுமதி தந்தான்.

சம்பிரதாயப்படி ராவ்தூதா சௌபாக்கிய தேவியிடம் விஷயத்தைப் பிரஸ்தாவம் செய்தார். ''குழந்தை சற்று இளைத்திருக்கிறாள்'' என்று அவர் பேச்சைத் தொடங்கியவுடனேயே ராஜமாதாவுக்குப் பொத்துக் கொண்டு வந்து விட்டது.

''நாங்கள் உங்கள் பேத்தியைப் பட்டினி போட்டுக் கொல்லவில்லை. சாகிற காலத்தில் நான் எந்தப் புதிய பாரத்தையும் தலையில் போட்டுக் கொள்ள விரும்பவில்லை. உங்கள் பேத்தி இருக்கும் திசைக்கே நான் போவதில்லை. அவனும்தான் அகமுடையாளின் மனம் கோணாமல் தாஸாநுதாஸனாக இருக்கிறான். என்னிடம் மரியாதைக்குக்கூடச் சொல்லாமல், பெண்டாட்டிக்காகப் பெரிய கோயில் கட்டுகிறான். பெண்டாட்டிக்காகக் கோயில் என்றேனே! அவளையே அதில் பிரதிஷ்டை செய்தால்கூட நான் ஒன்றும் சொல்வதற்கில்லை. கிருஷ்ணனுக்காக இந்தக் கோயில் என்று பராபரியாகப் பேச்சு காதில் விழுகிறது. என்னை மதித்து யாரும் எதுவுமே சொல்வதில்லை. இந்தக் கோயில் கட்ட ஆரம்பித்தானோ இல்லையோ அந்த மிலேச்சனோடு சண்டை மூண்டது. மாகாளி சீற்றமடைந்தால் அப்புறம் இந்த ராஜ்யம் என்னவது? இன்னும் என்ன அனர்த்தங்கள் வரப் போகின்றனவோ? அது சரி, ராஜ்யத்தைப் பற்றிக் கிழக்கோட்டானாகிய எனக்கு என்ன கவலை வேண்டிக் கிடக்கிறது? ராஜ்யத்துக்காகக் கவலைப்பட வேண்டிய மகாராணி உங்கள் பேத்தியல்லவா?'' என்று அடுக்கிக் கொண்டே போனாள்.

ராவ்தூதா மிகுந்த பொறுமையுடன் தம்மைக் கட்டுப்படுத்திக் கொண்டார். ''அம்மா, நான் சொல்வதைத் தப்பாக நினைக்காதீர்கள். கிருஷ்ணனுக்கு ஆலயம் எடுப்பதால் நன்மையே வந்தது என்று நான் நினைக்கிறேன். கில்ஜி வாளாட்டியதனால் அல்லவா இன்று மாளவ சாம்ராஜ்யத்தையே நம் ஆளுகைக்குள் கொண்டு வர முடிந்தது?'' என்று அவர் கூறி வரும்போதே இடைமறித்தாள் உதயா:

''நம் ஆளுகை என்று எங்களை ஏன் உங்களுடன் சேர்த்துக் கொள்கிறீர்கள்? எங்களுக்கு ஓர் ஆளுகையும் கிடையாது. நானும் அம்மாவும் உங்கள் பேத்திக்கு அடங்கின சாதாரணப் பிரஜைகள்தான்'' என்றாள்.

அந்த இளம் பெண் அவ்வளவு துடுக்காகப் பேசியும் கிழவர் தூதா பதில் பேசாமல் நாவைக் காத்துக் கொண்டார்.

''மீரா ஏதாகிலும் முன்பின்னாக நடந்து கொண்டாலும் நீங்கள் தவறாக நினைக்கக்

கூடாது. அவனுடைய தாய் தந்தையர் அவனை விருப்பப்படியே விட்டு விட்டதால் ஒரு போக்கில் வளர்ந்து விட்டான் அவன். சிறிது காலம் நான் அவனை மேர்தாவுக்கு அழைத்துப் போய் உடன் வைத்துக்கொண்டு புக்தக வாழ்க்கைக்குப் பயிலுவிக்க விரும்புகிறேன். அதைச் சொல்லி, அநுமதி கேட்டுப் போகத்தான் வந்தேன். அவள் உடம்பும் மெலிந்திருப்பதைப் பார்த்து, கொள்ளுப் பேரன் பிறக்கப் போகிறானே என்று நினைத்துப் பேச்சைத் தொடங்கினேன். நீங்கள் வித்தியாசமாக நினைத்துவிட்டீர்கள்'' என்று மன்னிப்புக் கோரும் குரலில் கூறினார் தூதாராவ்.

''கொள்ளுப் பேரனாவது கொள்ளுப் பேரன்!'' என்று பெருமூச்செறிந்தாள், சௌபாக்கியதேவி. ''அவரவர்கள் வினை உடம்பை உருக்குகிறது. நான் ஓர் அப்பாவி. மனசிலிருப்பதைக் கொட்டி விடுவேன். ராவ்ஜி, என் வாயைக் கிண்டி விடாதீர்கள். பேத்தியை அழைத்துப் போவதற்கு என் அநுமதி தேவையே இல்லை. ஊதா சொன்னாற்போல் அந்த மகாராணியின் கீழுள்ள சாமானியப் பிரஜைகள்தான் நாங்கள்'' என்றாள்.

நாம் கௌரவம் தரவேண்டிய ஸ்தானத்தில் ஒருவரை ஏற்றி வைக்கும்போது அவர்கள் கண்ணியமின்றிப் பேசிவிட்டால், நமக்காக அன்றி அவர்களுக்காகவே நாம் சங்கடப்படுவதுண்டல்லவா? ராவ்தூதா அப்படித்தான் சங்கடப்பட்டார்.

வேரைப் பிடுங்கிப் பார்த்தால் செடி என்ன பாடுபடும்? ஒவ்வொரு மண்ணும் ஒரு பழங்கதையை நினைவுறுத்துகிற மேர்தாவுக்குத் திரும்பிய மீராவின் சித்தம் ஆதியில் அவள் கொண்ட கிருஷ்ணப் பிரேமையின் வேரையே கெல்லிக் கெல்லி அவள் கண் முன் காட்டியது. கண்ணனுக்கு அங்குரார்ப்பணம் செய்த தூதாசரஸ், அது இலைவிட்ட டாகுர் துவாரம், அதில் மொட்டிட்ட ரூபரின் வழிபாட்டுக் கூடம், அவ்வேறு அவள் துயின்ற மாளிகைச் சயனம் — ஒவ்வொன்றையும் காணக் காண பூர்ப்பமாகக் குமுறிக் கனன்று கனத்தது மீராவின் இதயம்.

ராவ் தூதாவால் பேத்தியின் போக்கிலிருந்து எதுவும் திட்டவட்டமாகப் புரிந்து கொள்ள முடியவில்லை. முன்போலவே சோதிடனையும் வைத்தியனையும் வரவழைத்தார் அந்தக் கிழவர்.

''அம்பை எய்த பாவிக்குத்தான் அதற்குச் சிகித்சையும் தெரியும். நீ போய் வா, அப்பனே!'' என்று கூறி மருத்துவரை அனுப்பி வைத்தாள் மீரா.

அப்புறம் சோதிடர் வந்தார்.

நாலு வைத்தியரும் இனிமேல் நம்புதற்கில்லை
என்றார்
பாலத்துச் சோசியனும் கிரகம் படுத்தும் என்று
விட்டான்

என்று பாரதியார் பாடினார். மீராவையும் மாறாத வைத்தியம் என்றே வைத்தியர்கள் கைவிட்டனர். ஆனால் சோதிடர் மட்டும் 'கிரகம் படுத்தும்' என்று கூறவில்லை. முன்பு இதே சோதிடரிடம், ''பரஞ்சோதியுடன்நான் சோடி சேர்வேனா என்று சோதித்துச் சொல்வீர்!'' என்று மீரா வேண்டிக் கொண்டிருக்கிறாள். அதிலிருந்து இன்றும் மாறாதிருக்கும் மீராவைக் கண்டு அநுபவஸ்தரான அந்தச் சோதிடர் விஷயத்தை ஊகித்தார். ''கிரகத்தின் சம்பந்தமே இல்லாத விஷயம் இது. கண்ணன் காதல் ஏற்படுவது கிரகத்துக்கு மேம்பட்ட அநுக்கிரகம் ஒன்றுக்கே உரிய விஷயம்'' என்று தெளிந்துகொண்டார் அவர்.

''தேவி, தங்கள் மனோரதம் நிச்சயம் பூர்த்தியாகும்'' என்றார் சோதிடர்.

மீரா அவநம்பிக்கையுடன் சிரித்தாள்.

ஒரு வழியாக சிசோதிய — ராட்டோர் பகைமைகள் தீர்ந்த பிறகு மேர்தாவுக்கு மீண்டும் பலதரப்பட்ட அடியார்கள் வரத்

அடிமேல் அடி கொடுத்தாலும் நகராத அம்மி

திரு ஜகன்னாத் பிரசாத் பஹாரியா என்பவர் ஒரு ராஜ்ய சபை உறுப்பினர். ஹாலந்து நாட்டில் அவர் சுற்றுப்பயணம் செய்து கொண்டிருந்தபோது திடீரென்று நோய் வாய்ப்பட்டார். இதனால் ஏற்பட்ட அதிகப்படியான செலவைச் சமாளிக்க ஹேக் நகரில் இருந்த இந்தியத் தூதரை அணுகி ரூ. 500 அனுப்பும்படி டெல்லி செகரடேரியட்டுக்கு ஒரு கடல் வழித் தந்தி கொடுக்கச் சொன்னார். அவ்வாறே ஒரு தந்தி கொடுக்கப்பட்டது. அதற்குப் பதிலாக, அவ்வாறு பெயருடைய ஒரு ராஜ்ய சபை உறுப்பினரே இல்லையென்று டில்லியிலிருந்து பதில் வந்தது. உடனே, தமது தொகுதி, தாம் தேர்ந்தெடுக்கப்பட்ட நாள் முதலியவைகளைக் குறித்து இன்னொரு தந்தி கொடுத்தார் அந்த எம். பி. அனுப்புவதற்கு அவரது கணக்கில் ஏதும் பணமில்லை என்று கைவிரித்து இன்னொரு பதில் தந்தி டில்லியிலிருந்து அவருக்கு வந்தது. நிலைமை இப்படியாகிவிட்டதைக் கவனித்த பஹாரியா வேறு சில நண்பர்களது உதவியால் செலவைச் சமாளித்தார். உடம்பு குணமாகி இந்தியா திரும்பியவுடன் நேரே டெல்லி செகரடேரியட்டுக்குச் சென்று கணக்குப் பார்த்ததில் அவருக்கு இன்னமும் 1500 ரூபாய் பாக்கி கொடுக்க வேண்டியிருப்பது தெரிய வந்தது. இவ்வாறு தம் கணக்கில் பணம் இருக்க, பணம் இல்லையென்று தந்தி கொடுத்தது ஏன் என்று பஹாரியா கேட்டதற்குக் கிடைத்த பதில் என்ன தெரியுமா? ''ஒரு தந்தியும் செகரடேரியட்டுக்கு ஹேக் நகரிலிருந்து வரவில்லையே!'' என்பதாகும்.

தகவல்: **கோமுகியான்**


தலைவலி
பல்வலி
உடல்வலி
அசௌகரியமான
நாட்களில் வலி...

ஜம்ஷெட்பூர் எஃகுத் தொழிலாளிகள் 'சிரமவீர்' தேசீய விருதுகள் பெறுகிறார்கள்


இந்தியாவின் புதிய வீரர்களை — டெக்னீஷியன்களையும், ஆலைத் தொழிலாளிகளையும் — பெருமைப்படுத்துவதற்காக மார்ச் 1966ல் முதலாவது விழாவை நமது அரசாங்கம் நடத்தியது; 'சிரமவீர்' தேசீய விருதுகள் வழங்கி அவர்களைப் பாராட்டியது. குறைந்த செலவில் அதிக உற்பத்திக்கு வழி செய்யும் யோசனைகளுக்கு ஊக்கம் அளிப்பதற்காக ஒவ்வொரு ஆண்டும் இப்பரிசுகள் வழங்கப்படும்.

இந்த ஆண்டு வழங்கப்பட்ட 27 விருதுகளில் இரு முதற் பரிசுகள் உட்பட ஐந்து பரிசுகள் டாடா ஸ்டீல் தொழிலாளிகளுக்குக் கிடைத்திருக்கின்றன. இந்நாட்டிலேயே அதிகமான விருதுகள் பெற்றுள்ள தனியொரு ஸ்தாபனம் இதுதான்.

ஜம்ஷெட்பூர்த் தொழிலாளிகள் கடந்த 20 ஆண்டுகளில் 12000க்கும் அதிகமான யோசனைகளைத் தெரிவித்திருக்கிறார்கள். அவற்றுள் கிட்டத்தட்ட 1000 யோசனைகள் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளன. உற்பத்தியைப் பெருக்குவதற்கும், தொழிற்சாலை விபத்துக்களைத் தவிர்ப்பதற்கும், தொழிற்சாலையில் கிடைக்கும் பொருள்களையும், அநுபவ அறிவையும் கொண்டு சுயதேவையைப் பூர்த்தி செய்வதற்கும் இக்கருத்துக்கள் வழிவகுக்கின்றன.

உற்பத்தியின் ஆரம்ப நிலையில் இருந்தே சுய முயற்சியை ஊக்குவிக்கும் கருத்தரங்குத் திட்டத்திற்குத் (Suggestion Box Scheme) தாம் முன்னோடியாக அமைந்தது குறித்து டாடா ஸ்டீல் ஸ்தாபனத்தார் பெருமிதம் அடைகிறார்கள். இத்திட்டம் இப்பொழுது இந்தியாவில் உள்ள எல்லாத் தொழிற்சாலைகளிலும் நடைமுறைக்கு வரத் தொடங்கியுள்ளது.

டாடா ஸ்டீல்



The Tata Iron and Steel Company Limited

JWT TN 3274A

தொடங்கியிருந்தனர். அவர்களில் யோகம் பயிலும் கோரக்நாத சம்பிரதாயத்தினர் சிலர் மீரா அங்கிருக்கும் சமயத்தில் வந்து சேர்ந்தனர்.

''அலக் நிரஞ்சன்'' என்று அவர்கள் கோஷித்துக் கொண்டு அரண்மனைக்குள் நுழைந்த போதே மீராவுக்குச் சிரிப்பு வந்தது. அதே பொழுதில் ஓர் ஆர்வமும்—குதூகலமும்கூட — ஏற்பட்டன. கண்ணனின் மற்றொரு மாய லீலை அது!

''அலக் நிரஞ்சனுமே, அலக் நிரஞ்சன்!'' என்று தனக்குத் தானே சொல்லிக் கொண்டு மீரா நகைத்தாள்.

'அலக் என்றும் 'காண முடியாதவன்' என்று பொருள். ஆனால் நானோ அவனை நேருக்கு நேராகக் கண்டிருக்கிறேன். நிரஞ்சன் — மாக இல்லாதவன் என்று இவர்கள் கூறுகிறார்கள். நானோ அவனை அஞ்சனவண்ணக் கரியவனாகவே அல்லவா கண்டேன் ?' — மீரா யோகி கோஷ்டிக்கு முன் ஓடி வந்தாள்.

''இனி மேல் வீடு வீடாக 'அலக் நிரஞ்சன்' என்று கத்திக் கொண்டு சுற்று கிறீர்கள். 'லக் அஞ்சன்' என்று கோஷித்துக் கொண்டு செல்லுங்கள்'' என்றாள்.

அந்தக் கோஷ்டியின் தலைவர் மீராவை உற்று நோக்கினார்.

யோக சக்தி நிரம்பிய அவரது கண்கள் மீராவின் உள்ளப் பிணியை ஓரளவு அகழ்ந்து காண முடிந்தது.

''தேவி! உங்கள் அநுபவத்தை முன் வைத்து 'லக் அஞ்சன்' என்கிறீர்கள். ஆனால் இந்த அநுபவத்தால் நீங்கள் கண்டிருக்கிற விளைவு என்ன? எல்லையற்ற கலக்கமும், துயரமும்தானே? உங்கள் தோற்றமே அதைச் சொல்கிறதே! ஆனால் 'அலக் நிரஞ்சன்' மார்க்கத்தில் செல்லும் எங்களைப் பாருங்கள். எங்களுக்கு எந்தக் கவலையும் கிடையாது. எவ்விதக் குழப்பமும் கிடையாது. பரம நிம்மதியாக, பரம சாந்தமாக, பரம திருப்தியாக இருக்கிறோம்'' என்றார் யோகி.

மீரா சிந்தித்தாள்.

யோகி பேசினார்: ''கண்ணில் தெரிபவனை, உருவுள்ள கரியவனைப் பரம்பொருளைப் பாவிப்பது பேதைமைதான் தேவி. கண்ணில் தெரிவதாலேயே பிறகு அது மறைந்துவிடவும் கூடும். அதனால் மாளாத பிரிவுத் துயர்தான் ஏற்படும். யோகத்திலோ பிரிவுக்கு இடமே யில்லை. 'யோகம்' என்றாலே 'சேர்க்கை' என்றல்லவோ அர்த்தம்? பரம் பொருளை உருவற்றதாக, குணமற்றதாக நாங்கள் பாவிக்கிறோம். இதனால் உருவத்தின் தோற்றம் தருகிற ஆனந்தக் கிளர்ச்சியும் எங்களுக் கில்லை; அதன் மறைவில் காணும் துயரக் கிளர்ச்சியும் இல்லை. கிளர்ச்சியே இல்லாத சாந்த நிலையைத் துய்க்கிறோம். பரம் பொருளை எங்கோ வைத்துப் பார்த்தால் தான் அதைத் தேடும் முயற்சியும், அதில் காணும் தோல்விகளின் துன்பமும் உண்டாகின்றன. நாங்கள் பரம் பொருளை எங்கோ வைத்துத் தேடவில்லை; எங்களுக்குள்ளேயே கண்டு கொள்கிறோம். சிந்தனையை அடக்கியும், சுவாசத்தை அடக்கியும் மூலாதாரத்தில் உள்ள ஜீவ சக்தியை எழுப்பிச் சிரசுக்குக் கொண்டு வந்து அங்கு பரம்பொருளில் கரைந்துவிடுகிறோம். அப்புறம் எங்களுக்கு ஏது துயரம்? சித்தம் அற்றுப் போன அந்தமில்லாத ஆனந்தம் தான், அமைதிதான் எங்களுடைய மாறா நிலை. தேவி, நீங்களும் இந்த மார்க்கத்தில் முயன்று பாருங்களேன். இது மிக எளிய வாழ்வு. பலன் கிடைப்பது சர்வ நிச்சயம். நான் உத்தரவாதம் தருகிறேன்'' என்று உறுதியாகப் பேசினார் யோகி.

கிளர்ச்சிகளின் மோதல்களுக்கே பாலப் பருவத்திலிருந்து ஆளான மீராவுக்கு யோகத்தின் சாந்த நிலையில் திடுமெனப் பெரும் ஈடுபாடு உண்டாயிற்று. கண்ணன் என்ற உருவில் பரம்பொருளை நாடுவதால்தானே அவனிடம் காதலும் உண்டாகிறது? அந்தக் காதலால்தானே அகவாழ்வு, புற வாழ்வு இரண்டும் சிதைந்து சரிகின்றன? இந்தக் காதலிலிருந்து விடுதலை கிடைக்க வேண்டுமெனில் கண்ணனையே விட்டு விட்டால் தான் முடியும். அப்படிச் செய்து விட்டால் என்ன? உருவ வழிபாடு செய்வதால்தானே சித்தோரில் அதற்கு எதிர்ப்புகளும் சூழுகின்றன? வேண்டவே வேண்டாமே, இந்த உருவம்! யோகி சொல்வது போல் 'அலக்'காகவே, 'நிரஞ்ச'னாகவே பரம்பொருளை உபாசித்து விடுகிறேனே! ஆகா, என் பிரச்னைக்கு இவ்வளவு நல்ல ஒளஷதம் இருக்கிறதா?' — மீரா முடிவுக்கு வந்து விட்டாள்.

விந்தை! எந்த மோர்தாவில் பாலகியாயிருக்கும்போது அகமுடையானைக சாளக்கிராமத்தைக் கண்டெடுத்தாளோ, அங்கேயே விவாகரத்தும் தேட ஆசைப்பட்டாள் மீரா! எந்த மோர்தாவில் நீல நிறத்துப் பாலகனின் கோல வடிவழகைக் கண்டு கண்டு களித்தாளோ, அதே மோர்தாவில் அந்தத் திரு உருவத்துக்கு மேல் சமாதி கட்டிவிட முயன்றாள் மீரா! எந்த மோர்தாவில் அன்பு, இன்பம், துன்பம், கோபம், தாபம், கானம் இவற்றின் மீது ஓர் உயிர்த் தொடர்பை ஏற்படுத்திக் கொண்டாளோ, அதே மோர்தாவில் அந்தத் தொடர்பை வெட்டி வெட்டி எறியவும் முற்பட்டாள் மீரா! (தொடரும்)

ஷொட்டு....! குட்டு....!

விடைகள் :

1. பெஞ்சமின் டிஸ்ரேலி.
2. லாஸ் வகாஸ் (Las Vegas) அமெரிக்காவில் உள்ளது.
3. கரி, பிராண வாயு, ஹைட்ரஜன், நைட்ரஜன்.
4. இரண்டு.
5. சர்க்கரை விழா.
6. 500 அடி உயரம் வளர்ந்த மரம் ஒன்று ஆஸ்திரேலியாவில் இருந்ததுண்டு.
7. உ. வே. சாமிநாதய்யர்.
8. ''ஸ்ரீநிவாச கல்யாணம்'' (1934)
9. 121.
10. மூன்று இடங்களில்; ஒரே மொழி (இந்தி).

வட்ட மேஜை

கல்கியின் வெள்ளிவிழா ஆண்டில் வெளியான தீபாவளி மலர் பல விதங்களில் சிறப்பாக அமைந்திருந்தது. பழம் எழுத்தாளர்களுடன் போட்டி போட்டுக் கொண்டு இளம் எழுத்தாளர்களும் சிறுகதைகள் எழுதியுள்ளனர். அதில் திரு அமலனின் ''கதை'' அழகாகவும், அருமையாகவும் முடிந்திருந்தது. புதிய பரம்பரைக்கு விடிவெள்ளியாகச் சுடர் விட்டது அந்தக் கதை. இவ்வாண்டு வெளியான கல்கி தீபாவளி மலர் வாடா மலராக எல்லோருடைய வீடுகளிலும் நீடித்திருக்கும் என்பதில் ஐயமில்லை.

திருச்சி,
14–11–66 ப. சுப்பையா

கதைகளில் 'இதுதான் மிக நன்றாக இருக்கிறது' எனக் கூற முடியாதபடி எல்லாமே மிக நன்றாக இருக்கின்றன. 'காங்கிரஸ் மறுபடியும் பதவிக்கு வந்தால்' என்ற கார்ட்டூன் பகுதியை நான் மிகவும் ரசித்தேன். மூவர்ணப் படங்கள் எல்லாம் மிக நன்றாக இருந்தன. குறிப்பாகத் திரு கனு தேசாயின் ''வானமும் கானமும்'' மிகப் பிரமாதம். அதிலும் நான்காம் படத்தில் எப்படித்தான் அவர் அவ்வளவு அழகாகச் சூரியோதயக் காட்சிக்கு வர்ணம் தீட்டினாரோ!

சென்னை,
14–11–66 பி. சங்கரன்

தீபாவளி மலர் மொத்தத்தில் ஓர் எழில் தோட்டம்.

திருப்பத்தூர்,
14–11–66 சி.ஆர்.ஏ. கிருஷ்ணசாமி

எனக்குப் பொன்னேரி தாலுக்கா 164ம் நெம்பர் வீரங்கவேடு கிராமத்தில் சுமார் 30 ஏக்கர் நஞ்சை நிலம் உள்ளது. அதில் விளைந்த நெல்லில் 250 மூட்டை நெல்லை அரசாங்கக் கொள்முதலுக்காக விற்றுவிட்டு மீதி இருக்கும் நெல்லை என்னுடைய வயல்களில் வேலை செய்யும் ஆட்களுக்காகவும், என் சொந்த உபயோகத்துக்காகவும் வைத்திருந்தேன். அதில் நாலு மூட்டை நெல்லை அவித்து அரிசியாகக் குத்திவரப் பேட்டை அரிசி மில்லில் வைத்திருந்தேன். 28–10–66 அன்று பொன்னேரி தாலுக்கா சப்ளை ஆபீஸர், பிர்க்கா சப்ளை ஆபீஸர் இருவரும் மில்லிலுள்ள அவித்து வைத்திருந்த நெல்லை எனக்குத் தெரிவிக்காமலும், எவ்வித உத்தரவும் கொடுக்காமலும் எடுத்துச் சென்றிருக்கிறார்கள். விவசாயிகள் தாங்கள் விளைவித்ததைத் தங்களுக்கும் தங்களுடைய ஆட்களுக்கும் சாப்பாட்டுக்கு உபயோகப்படுத்திக் கொள்ளக்கூட உரிமையில்லை, இந்த ஆட்சியில்! கேவலமாக இருக்கிறது. மேற்படி என்னுடைய அவித்த நெல்லைத் திருப்பித் தரும்படி கேட்டதற்கு இதுவரையில் பதில் இல்லை.

வீரங்கவேடு
29–10–66 வி.எம். பரமசிவமுதலியார்

''ஆதார சுருதி'' என்ற கதையில் கதாநாயகி 'நாதநாமக்ரியா' ராகத்தை நிரவல் செய்து உச்சியில் சஞ்சாரம் செய்வதாக வருகின்றது. நாதநாமக்ரியா ராகம் ஒரு நிஷாத அந்திய ராகம். அதில் தார (மேல்) ஸ்தாயியில் சஞ்சாரம் செய்வதற்கு முடியாதாகையினால் எழுத்தாளர் வேறு ராகத்தின் பெயரைக் கையாண்டிருக்கலாம்.

மன்னார்குடி
1–11–66 ஜே. ராஜகோபாலன்

''பேச்சும் ஒரு பாட்டுத்தான்'' என்ற கட்டுரையில் முகுந்தன் அவர்கள் கங்கை நதி இமயமலையில் பிரம்ம கபாலத்தில் உற்பத்தியாகிப் பனி படர்ந்த மலைச் சிகரங்களினூடே தவழ்ந்து வருவதாகக் கூறியுள்ளார்.

அது சரியல்ல; ''பாகீரதி'' என்று அழைக்கப்படும் கங்கைநதி கங்கோத்ரி என்ற புனிதத் தலத்திலிருந்து பதினெட்டு மைல் தொலைவிலுள்ள ''கோமுக்'' என்ற பனிப் பாறையில் தான் முதன் முதலாகக் கண்ணுக்குத் தெரியும் வகையில் வெளியே வருகிறது. பிரம்ம கபாலம் என்பது பத்ரிநாத்திலுள்ள ஓர் இடம். அங்கு வரும் அளகநந்தா என்ற நதி பத்ரிநாத்துக்குப் பத்து மைல் அப்பால் ''அளகாபுரி'' என்ற இடத்தில் உற்பத்தியாகிறது.

சென்னை,
14–11–66 என். எஸ். சுப்பிரமணியன்


மேற்படி கட்டுரையில் ஸ்ரீ டி. என். ராஜரத்தினம் 'காளமேகம்' என்ற திரைப் படத்தில் நடித்ததாக இருக்க வேண்டும். காளிதாஸ் என்று அச்சாகியிருப்பது தவறு என அறிகிறோம். - ஆசிரியர்

பீகாரில் நிலவும் உணவுப் பஞ்ச நிலைமை பற்றித் தமிழக மக்கள் அறிவார்கள். அங்கு இன்றைய நிலவரம் கவலைக்கிடமானது மட்டுமல்ல, பயங்கரமானது என்றே கூற வேண்டும். 1817க்குப் பிறகு பீகாரில் இப்படி ஒரு பஞ்ச நிலைமை இருந்ததே இல்லை. ஐந்து கோடி மக்களில் மூன்று கோடி மக்கள் பஞ்சத்தால் பாதிக்கப்பட்டுள்ளார்கள். இவர்களில் ஒன்றரைக் கோடி பேர்கள் முழுப் பட்டினி கிடக்கும் நிலைக்கு வந்து கொண்டிருக்கிறார்கள்.

இத்தருணத்தில் தமிழக மக்களைத் தங்களது பீகார் சகோதரர்களுக்கு உதவுமாறு கேட்க வேண்டியது எங்கள் கடமை என்று கருதுகிறோம். பீகார் பஞ்ச நிவாரணக் கமிட்டி ஒன்று அமைக்கப் போகிறோம். சென்னைப் பிரமுகர்கள் பலர் இதில் பங்கு கொள்வார்கள். தமிழக மக்கள் தாராளமாக உதவக் கோருகிறோம்.

43, பத்ரையன் தெரு
சென்னை – 1 காரியதரிசி
2–11–66 பீகார் அசோஸியேஷன்

Printed & published by R. Ananthanarayanan on behalf of Messrs. Bharathan Publications Private Limited at Kalki Press, Kilpauk, Madras-10.
Managing Editor: T. Sadasivam.



புதுமையின் பொலிவுக்கு ஹமாம்



அதிக காலம்
நீடித்துழைக்கும்
டாய்லெட்
சோப்

நாள்தோறும் ஹமாம் உபயோகியுங்கள். உங்கள் சருமத்தைச் சுத்தம் செய்வதுடன், புத்துணர்ச்சியையும் அளிக்கிறது. உங்கள் மேனிக்கு கவர்ச்சியான மெருகையும் கொடுக்கிறது. நெடுங்காலம்...நீடித்திருக்கும் ஹமாம் டாய்லெட் சோப்பை உபயோகியுங்கள்.

டாடா தயாரிப்பு

CMTH-3 tm

REGISTERED No. M. 4392
Registered as a Newspaper in Ceylon

இலங்கையில் 35 சதம்
தபால் செலவு தனி





நீங்கள் அவனுக்கு மிருதுவாய் வேபோரப்பைத் தடவும் போதே சூடு பிறந்து, இதமும் ஏற்படுகிறது...உங்கள் குழந்தை வசதியாய் மூச்சுவிட முடிகிறது. இரவு முழுதும் நல்ல தூக்கம் அவனுக்கு

வசதிக்கு உங்களைத்தான் நம்புகிறான் குழந்தை. ஜலதோஷத்தினால் அவன் பாதிக்கப்படும்போது விக்ஸ் வேபோரப்பைத் தடவினால் போதும்.

உங்கள் அன்புக் கரங்கள் அவனுடைய மார்பு, தொண்டை, முதுகு, மூக்கின் சுற்றுப்புறம் ஆகியவற்றின்மீது விக்ஸ் வேபோரப்பைத் தடவுகின்றன. மூக்கடைப்பு கரைவதைக் கண்முன்னால் பார்க்கலாம். மீண்டும் அவன் சௌகரியமாய் சுவாசிக்கிறான். காரணம்: ஜலதோஷத்தினால் பாதிக்கப்பட்ட பகுதிகளை இதமான, ஆவி வடிவிலுள்ள மருந்துகள் ஏழு விநாடிகளில் அடைகின்றன. இனி குழந்தையைப் படுக்க விடுங்கள். குழந்தை நன்றாகத் தூங்கும் பொழுது, இரவு முழுவதும் வேபோரப் தன் பணியைத் தொடர்ந்து செய்கிறது. விடிவதற்குள் ஜலதோஷம் அநேகமாய் நீங்கி, உங்கள் பிரியத்துக்குப் பாத்திரமான விளையாட்டுப் பிள்ளை உற்சாகத்துடனும், உடல் நலமுடனும் விழித்தெழுகிறான்.



NAS b233c

விக்ஸ் வேபோரப் ஜலதோஷத்துக்கு இன்றிரவே தடவுங்கள்